www.tamilarangam.net

தேடல் 14
யூலை, ஓகஸ்ட் 1996
Thedal 14
July, August 96

# தேடல்



தமிழர் வகை துறை வள நிலைய வெளியீடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேடல் சஞ்சிகை இதழ் 14
ஆடி 1996
தமிழர் வகைதுறை வள நிலைய வெளியீடு

THEDAL Vol:14
July 1996
Published by
Tamil Resource Centre

Typeset by:
Monika
Nanthini
Kajan

Layout & Design by:
Jaya & Karuna

Editorial Board:
T.R.C THEDAL GROUP

அட்டைப்படம்
அரச சமாதானத் திட்டம் 95, 96

தேடல் தொடர்புகளுக்கு:
Thedal Contact:
566 Parliament St
Toronto, Ont
M4X 1P8
CANADA

## உள்ளடக்கம்

### கட்டுரைகள்

விடுதலைப்போராட்டமும் கலைப்படைப்புகளும் 2
நேசன்
தமிழர் புலம்பெயர்வும் நட்பும் 11
அழ.ராம்மோகன்
கனடாவில் தமிழ்க்கல்வி 15
பொ.கனகசபாபதி
கனடாவில் தமிழ் மொழி வளர்ச்சி 17
அ.அருட்செல்வி
கனடாவில் சர்வதேச மொழிகள் 20
செ.இலங்கையன்
இயக்கவியலும் கலை இலக்கியமும் 22
எஸ்.அகஸ்த்தியர்
குழந்தைகளும் பொதுமக்களும் 37
நேசன்
நாய்க்கு ஏன் போர்த்தேங்காய்? 43
ஜோர்ஜ்

### கவிதைகள்

போராடத்துணிந்தவரே சுதந்திரமாய்.. 33
பா.அ.ஜயகரன்
தீ 24 மே 1994 39
சகாப்தன்
மெலிந்த நாணல் 46
பாமதி

### சிறுகதைகள்


வேலை நிறுத்தம் 34
குமார் மூர்த்தி
மான்ஹோல் 41
வ.ந.கிரிதரன்

www.tamilarangam.net



# தேடல்

## யூலை 23
## இனவாத அழிப்பின்
## 13 ஆண்டு நினைவு



சமாதானம் 96

## மக்கள் நலனும் எதிர்காலமும்

தமிழ் மக்களுக்கான சமாதானத்திட்டம் முன்வைக்கப்பட்டது. 100இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர், ஆயிரக் கணக்கில் சொத்துக்கள் சேதமாகின, இலட்சக்கணக்கில் மக்கள் இடம்பெயர்க்கப்பட்டனர். மொத்தத்தில் சமாதானம் எம் மக்களை நன்றாகவே பதம்பார்த்துக் கொண்டது. சமாதானத்திற்காக யுத்தம் என்று வெளிக்கிட்ட அரசு இறுதியில் யுத்தத்திடம் சரணடைந்து, சமாதானத் திட்டம் படுதோல்வியில் முடிந்து, யுத்தம் தொடருகின்றது.

ஐ.தே.க வும் ஒட்டு மொத்தமாக திட்டத்தை நிரா கரித்துவிட்டது. தமிழ் கட்சிகளும் 'அம்போ அம்மே' என சோர்ந்துவிட்டனர். ஐ.தே.க, திட்டத்தை ஏற்றுக்கொள்ள தமிழ் கட்சிகள் முயற்சிக்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் கோரிக்கை, தமிழ் மக்களின் எதிர்காலத்தை தமிழர்களே தீர்மானிக்கவேண்டும் என்பதை மீண்டும் உறுதி செய்து நிற்கிறது.

புலிகளும் தமது இருப்பைத் தக்கவைப்பதற்காக சகல கைங்கரியங்களையும் செய்துகொண்டுதான் இருக்கிறனர். இவர்களின் நடவடிக்கைகளை பார்க்கும்போது மக்களின் நலன் என்பது இவர்களுடன் ஒட்டாத விடயமாகவே இருக்கிறது .மக்களின் நலன்களில் அக்கறையில்லாதோர் கையில் இன்று மக்களின் எதிர்காலம். மொத்தத்தில் தமிழ்மக்களின் எதிர்காலம் இருளில் விடப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் தமிழ் தலைமைகளாலேயே, தொடர்ச்சியாக நசுக்கப்படுமானால் அவர்களின் போராட்ட உணர்வுகளும் மழுங்கடிக்கப்படும். இதனால் அடக்குமுறையாளர்களே பூரண பயனைப்பெறுவர். புலிகளின் இயக்க நலனுக்கும் இலங்கை அரசின் பேரினவாத நலனுக்குமிடையில் தமிழ் மக்கள் நசுங்கிக்கொண்டிக்கும் நிலை மாற்றப்படவேண்டும். தமிழ் மக்கள் தமது நலன்கள் தொடர்பாக சுயாதீனமாக முடிவெடுக்கக் கூடியவகையில் தாபனமயப்படுத்தப்பட்டால் மட்டுமே எதிர்காலம் மக்களுக்கானதாக இருக்கும் என்பதே எமது எண்ணம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# தமிழர் விடுதலைப் போராட்டமும் கலைப்படைப்புகளும்

**நேசன்**

தமிழர் போராட்டமும் கலைப்படைப்புக்களும் எனப் பொதுவாக எனது கட்டுரை தலைப்பிடப்பட்டு இருப்பினும், அதன் ஆய்வு குறிப்பாக, 'தமிழர் ஆயுத போராட்டத்தையும்,' அது பற்றி அக் காலத்தில் எழுந்த கவிதைப் படைப்புக்களையும் ஆய்ந்து நிற்கும்.

70 களின் ஆரம்பத்தில் எழுந்த கவிதைகளை நான் இரு வகைகளில் பார்க்கின்றேன். முதலாவது வகை, ஒர் சமூகத்தின் பல்வேறு அனுபவங்களை, அதன் குணும்சங்களை, சில சமயங்களில் தனி மனித கொள்கைகளையும், நிலைப்பாடுகளையும் வெளிப்படுத்தி நிற்கும் அல்லது பிரதி பலிக்கும் கவிதைப் படைப்புக்களாகும். இவை பொதுவாக தனிமனிதரின் சுயாதீன வெளிப்பாடாக படைக்கப்பட்டன. இவ்வகைக் கவிதைகளை நான் யதார்த்த கவிதைகள் என வரையறை செய்கிறேன். இரண்டாவது வகை சற்று வித்தியாசமானவை. அவை அதிகார அரசியலின் சாதனமாக, அல்லது அதன் கருவியாக விளங்குகின்றது. அதாவது இக் கவிதைப் படைப்புக்கள், ஒர் குறிப்பிட்ட அரசியல் கருத்தின் அதிகாரத்தை நிலைநாட்ட முற்படும் பிரச்சாரச் சாதனமாக மட்டுமல்லாது, அவ் அரசியல் கருத்தின் 'யுத்த இயந்திரத்தின்' ஒர் முக்கிய உறுப்பாகவும் விளங்கியது. இவ் வகைக் கவிதைகளை இனி நான் சாதனக் கவிதைகள் எனக் குறிப்பிடுவேன். இவ் வரைவிலக்கணங்களின் அடிப்படையில் இக் கட்டுரை தமிழர் ஆயுத போராட்டத்தில் சாதனக் கவிதைகளின் பங்களிப்பை குறிப்பாக ஆய்ந்து நிற்கும்.

> சாதனக் கவிதைகள் அதிகார அரசியலின் சாதனமாக, அல்லது அதன் கருவியாக விளங்குகின்றது. அதாவது இக் கவிதைப் படைப்புக்கள், ஒர் குறிப்பிட்ட அரசியல் கருத்தின் அதிகாரத்தை நிலைநாட்ட முற்படும் பிரச்சாரச் சாதனமாக மட்டுமல்லாது, அவ் அரசியல் கருத்தின் 'யுத்த இயந்திரத்தின்' ஒர் முக்கிய உறுப்பாகவும் விளங்கியது.

தமிழர் போராட்டத்தில், இவ்விரு வகைக் கவிதைப் படைப்புக்களும் ஒருமித்த குரலில் ஸ்ரீலங்கா அரசினுல் செய்யப்பட்ட மனித உரிமை மீறல்களையும், அதன் ஒடுக்கு முறைகளையும் எதிர்த்து குரலெழுப்பி நின்ருலும், இரண்டாவது வகையான சாதனக்கவிதைப் படைப்புக்கள் தமிழ் மக்களை யுத்தத்திற்கு தயாராகும்படி குரல்கொடுத்தும், உணர்ச்சிவசப்படுத்தியும் நின்றன. இக்கவிதைகள் பிற்காலத்தில் அதிகார அரசியலில் பிரியமுள்ளவர்களின் பிறிதொரு கையாகவும் வளர்ச்சி பெற்றன. இக் காலத்தில் எழுந்த தாயக அல்லது ஈழக் கோட்பாட்டை, சாதனக் கவிதைகள் பாராட்டி முன்னெடுத்து சென்றதோடு மட்டுமின்றி, ஆயுதப் போராட்டத்தை மேன்மையான ஓர் முறையியலாக முன்வைத்தும் நின்றன. இக்கருத்தோட்டம் பிற்காலத்தில், தமிழ்ச் சமூகத்தை, புலிகளின் தலைமையில் ஓர் இராணுமயப்படுத்தப்பட்ட சமூகமாக மாற்றவும் கரு கொடுத்து நின்றது.

70 இன் இறுதியில் 'அதுவரை தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்ருல்' முன்வைத்ததாகக் கூறப்பட்ட அகிம்சைப் போராட்ட முறையும், அதன் முறையியலில் ஏற்பட்ட வழுக்களும், அவை ஏற்படுத்திய தோல்விகளும், மக்களுக்கு இக் கட்சிகளிலும் மட்டுமல்ல அகிம்சையிலும் அதிருப்தியைத் ஏற்படுத்தியிருந்தன. அதே வேளை இக்காலகட்டத்தில் ஸ்ரீலங்கா அரசு தமிழர் பிரச்சனை குறித்து உதாசீன நிலைப்பாட்டையும், மேலும் தமிழர் தமது உரிமைக்காக அகிம்சை ரீதியாக போராடும் போது, அவர்கள் மீது வன்முறைகளை கையாளும் கொள்கையையும் கொண்டிருந்தது. தமிழர்களுக்கு எதிரான ஸ்ரீலங்கா அரசின் உதாசீன கொள்கையை மாற்றவோ, அல்லது தமிழர் மீதான வன்முறைகளை கட்டுப்படுத்தவோ, தடுக்கவோ தமிழ் அரசியல் கட்சிகளினுல் முடியவில்லை. இதனுல் தமிழர் விடுதலைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூட்டணி மீது மக்கள் பாரிய விரக்தி அடைந்து இருந்தனர்.

ஆகையால் முதிர்ந்த கூட்டணித் தலைமைத்துவம், அகிம்சையுடன் கூடிய தாயக கோட்பாட்டினை புதிதாக முன்வைப்பதன் மூலம், தமது அரசியல் நெருக்கடியை நிவர்த்தி செய்து மீண்டும் மக்கள் மீதான தமது அதிகாரத்தையும், தலைமைத்துவத்தையும், மீளமைக்க முயன்றது. ஸ்ரீலங்கா அரசின் உதாசீனப் போக்கால் தவிர்க்க முடியாத விளைவாக தமது தாயகக் கோட்பாடு ஏற்பட்டது என வாதாடிய கூட்டணி, 77 தேர்தலில் இக் கோட்பாட்டின் அடிப்படையில் வெற்றி பெற்றாலும், தேர்தலின் பின்னர் அது குறித்து மேற்படி நடவடிக்கைகள் செயலளவில் எடுக்காமையால் கூட்டணி மக்கள் மத்தியில் மீண்டும் தமது ஆதரவை இழக்க வேண்டி ஏற்பட்டது. இதனால் அரசியல் தலைமைத்துவத்துவத்தில் நம்பிக்கையிழந்த மத்திய தர வகுப்பைச் சார்ந்த இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்துடனான தாயகக் கோட்பாட்டை முன்வைத்தனர். இங்கு தாயகக் கோட்பாடு ஓர் இலட்சியமாகவும், ஆயுதப்போராட்டம் அதை அடையும் வழிமுறையாகவும் எடுத்துக் கூறப்பட்டது. சமூகப்பிரக்ஞை கொண்ட இத்தீவிரவாத இளைஞர்கள், தாயகக் கோட்பாட்டை ஸ்ரீலங்கா அரசின் உதாசீனப் போக்கால் ஏற்பட்ட தவிர்க்க முடியாத ஓர் முடிவு என்பதை ஏற்றுக்கொள்ளினும், ஆயுதப்போராட்டம் தாம் விரும்பாமல் ஸ்ரீலங்கா அரசே தம் மீது திணித்தது. என்று கூறி ஈழத்திற்கான தர்ம யுத்தக் கோட்பாட்டை முன்வைத்தனர். அதாவது தாயகக் கோட்பாடு, ஆயுதப்போராட்டம் ஆகிய இரண்டுமே நீண்ட கால ஸ்ரீலங்கா அரசின் ஒடுக்கு முறையால் தமிழர் மீது நிர்ப்பந்திக்கப்பட்ட ஒன்று என்பதை இத்தீவிரவாத இளைஞர்கள் வாதிட்டனர். (அதேவேளை தமிழர் ஆயுதப்போராட்டம் ஒன்றில் ஈடுபடவேண்டும், என்பது பற்றி ஓர் அபிப்பிராயம் இக்கால கட்டத்தில் தமிழரிடம் கேட்கப்பட்டதா அல்லது அதுவும் தமிழர் மீது தமிழர்களால் திணிக்கப்பட்டதா? என்ற கேள்வியும் இங்கு முக்கியமான ஒன்று. இதன் ஆய்வை வாசகர்களிடமே விட்டுவிடுகின்றேன்)

இங்கு மிகமுக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம் என்னவெனில் ஸ்ரீலங்கா அரசின் ஒடுக்கு முறையும், வன்முறையும் இவ்விரு போராட்டத்தையும் நிர்ணயிக்கும் 'எதிர்மறை உந்து சக்திகளாக' (negative forces or inspirations) விளங்கியதால், இது தமிழர் போராட்டத்தில் இரு பக்க விளைவுகளை ஏற்படுத்தியது. முதலாவதாக தாயகக் கோட்பாடும், ஆயுதப்போராட்டமும் தமிழரின் சுயத்தில் இருந்து வெளிப்படாமல் புறத்தில் தங்கி இருந்தினால், காலத்திற்குக் காலம் ஸ்ரீலங்கா அரசின் ஒடுக்கு முறைகளும் வன்முறைகளுமே இவ்விரு போராட்டத்தின் எதிர்கால ஆளுமையையும், வீச்சையும், வடிவமைப்பையும் நிர்ணயிக்கும் காரணிகளாக விளங்கின. இதனால்த்தான் 77 இல் கொழும்பில் இருந்து அடிபட்டு யாழ்ப்பாணம் வந்த தமிழ் மக்களைப்பார்த்து "நல்லா வேண்டும். சிங்களவன் அடிபோட்டால்த்தான் இவங்களுக்கு தமிழ் உணர்வு வரும்." என இரக்கமின்றிக் கூறி உணர்வு உரம் பெற்றோம். இரண்டாவதாக இவ்விரு போராட்டங்களும் புறத்தில் இருந்து தமிழரின் மீது திணிக்கப்பட்டதென வாதிடப்பட்டு நியாயப் படுத்தப்பட்டதால், பெரும்பான்மையான பொதுமக்கள் அக்காலங்களில், இப்போராட்டங்களுக்குத் தயாராக இருந்தார்களா என்ற ஐயம் எழவும் வாய்ப்பேற்பட்டது.

**ஆயுதப்போராட்டம் வெறுமனே ஓர் வழிமுறை என எமக்கு காலம் காலமாக கற்றுத் தரப்பட்டிருப்பினும், யுத்தத்தின் பூரண பரிணாமத்தையும், அதன் பக்க மற்றும் பின் விளைவுகளை நாம் உற்று நோக்கில் அது வெறுமனே ஓர் கருவி மட்டுமல்ல கூடவே அது ஓர் கருத்து நிலைப்பாடாக இருப்பதை நாம் காணலாம்.**

70 களில் கூட்டணியின் அரசியல் தடுமாற்றத்தை விளங்கிக்கொண்ட பொதுமக்கள், ஆயுதப்போராட்டம் என்பதை ஓர் துரும்பாக ஸ்ரீலங்கா அரசின் முன் வைக்க ஆர்வம் கொண்டு இருந்தாலும், ஆயுதப்போராட்டத்தின் பரிணாமத்தை பூரணமாக விளங்கிக்கொள்ளவோ அல்லது ஆயத்தமாகவோ இருக்கவில்லை. இது ஆயுதப்போராட்டத்தில் நம்பிக்கை கொண்ட போராளிகளை இரு பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு உந்தியது. முதலாவது ஸ்ரீலங்கா அரசின் இராணுவத்திற்கெதிராக தம்மை இராணுவ ரீதியாகப் பலப்படுத்திக் கொள்வது, இரண்டாவதாக இப் பலவிரிவுக்குச் சாதகமாக தமிழ் மக்களை தமது இராணுவக் கட்டமைப்புக்குள் கவர்ந்து கொள்வது. ஆனால் இங்கு ஓர் பிரச்சனை இருந்தது. அது எதுவெனில், எவ்வாறு யுத்த சூழ்நிலையில் வாழப் பழக்கப் பட்ட ஓர் சமூகத்தை மீண்டும் ஓர் சமாதானச் சூழ்நிலையில் வாழப் பழக்கப்படுத்துவது சிரமமான காரியமோ, அவ்வாறே ஓர் சமாதானச் சூழ்நிலையில் வாழப் பழக்கப் பட்ட ஓர் சமூகத்தை யுத்த சூழ்நிலைக்கு இட்டுச் செல்லல் மிகச் சிரமமான காரியமாகும். இங்குதான் ஆயுத ஈழப் போராட்டத்தில், சாதனக்கவிதைகளின் பங்கினை நாம் இனம் காணலாம். அதாவது பொதுமக்களை யுத்தத்தின்பால் கவரச்செய்வதில் சாதனக்கவிதைகள் பெரும் பங்கை ஆற்றின. அவை ஆயுதப்போராட்ட வளர்ச்சியில் ஓர் செம்மையான யுத்த பிரச்சாரக் கருவியாகவும் மட்டுமின்றி, யுத்த இயந்திரத்தின் ஓர் பகுதியாகவும் பிரயோகிக்கப்பட்டது.

ஒரு சமூகத்தின் யுத்த ஏற்பாட்டிற்கான பங்கினை எவ்வாறு சாதனக்கவிதைகள் வழங்கின என்ற விடயத்திற்கு முழுமையாக வருமுன் முதலில் யுத்தக் கோட்பாட்டின் தார்ப்பரியத்தையும் அதன் அடிப்படைச் சூத்திரத்தையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ஜேர்மனிய யுத்த தத்துவவாதியான "கிளவ்விட்ஸ்" யுத்தம் என்பது "அரசியலின் வளர்ச்சியின் மற்றுமொரு விரிவாக்கமாகும்" எனக் கூறினர். இவரைப் பின்பற்றிய இராணுவப் பிரியர்களும், அரசியல் யதார்த்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வாதிகளும், யுத்தத்தை ஆர்வத்துடன் ஓர் அரசியல் வழிமுறையாகவும் விரைந்து ஏற்றுக் கொண்டதுடன் மட்டுமின்றி பிற்காலத்தில் தாம் செய்யும் காரியங்களுக்கு ஆதாரமாக "கிளவ்விட்சை" அடிக்கடி கோடிட்டும் வந்தனர். ஆயுதப்போராட்டம் வெறுமனே ஓர் வழிமுறை என எமக்கு காலம் காலமாக கற்றுத் தரப்பட்டிருப்பினும், யுத்தத்தின் பூரண பரிணாமத்தையும், அதன் பக்க மற்றும் பின் விளைவுகளையும் நாம் உற்று நோக்கில் அது வெறுமனே ஓர் கருவி மட்டுமல்ல கூடவே அது ஓர் கருத்து நிலைப்பாடாக இருப்பதை நாம் காணலாம்.

யுத்தத்திற்கான அரசியல் மைப்பூச்சுக்களை ஒருகணம் நீக்கி யுத்தகுணாம்சத்தின் மையத்தை நாம் உற்று நோக்கின் அதன் கருத்தாக்கம் வெளிப்படும். "நாங்களும்" "அவர்களும்" என மானிடத்தைப் பிரித்து, எதிரிகளை வரித்து, கூடவே வெறுத்து ஒருவர் மீது ஒருவர் அதிகாரம் செலுத்த அல்லது இழந்த அதிகாரத்தை மீளப்பெற முற்படும் ஓர் போர்க்குண மனப்பாங்கே இவ் யுத்த கருத்தியலின் மையச் சூத்திரமாகும். "நாங்களும்" "அவர்களும்" எனும் சூத்திரமே, ஆயுதப்போராட்டத்தின் அடிப்படை கோட்பாட்டு தேவைகளை ஆற்றுகின்றது. இச் சூத்திரம் இன்றி எந்த வித ஆயுதப்போராட்டமும், யுத்தமும் சாத்தியமாகாது, இது கதாநாயகர்களையும் (நாங்கள்), வில்லன்களையும் (அவர்கள்) உருவாக்குவதன் மூலம் மக்களை யுத்தத்திற்கு தயாராக்குகின்றது.

ஆரம்பத்தில் எந்த ஒரு சமுகத்தையும் இலகுவில் யுத்தத்திற்குத் தயாராக்க முடியாது, எனக் குறிப்பிட்டு இருந்தேன். இதை இன்னொரு முறையில் அலசி பார்க்கலாம். அதாவது மக்கள் மக்களை கொல்ல இலகுவில் முன் வரமாட்டார்கள், ஒருமனிதன் இன்னுமோர் மனிதனை அல்லது ஓர் மக்கள் கூட்டம் இன்னுமோர் மக்கள்கூட்டத்தை கொல்வதற்கு அல்லது அழிப்பதற்கான மனப்பாங்கை வளர்ப்பதற்கு பல நியாயங்களை அவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். இந் நியாயங்களை ஏற்றே மனிதர் போர்க்குணம் கொண்டு ஒருவரை ஒருவர் வெறுத்து அழிக்க முடியும். "நாங்களும்" "அவர்களும்" எனும் யுத்த கோட்பாடு இந் நியாயங்களை தாராளமாக மனிதர்களுக்கு வழங்கி அவர்களை யுத்தத்திற்குத் தயார்ப்படுத்துகின்றது. அதாவது ஒருமனிதனை ஒரு மனிதன் கொள்கையின் அடிப்படையில் நிராகரித்து, வெறுப்புணர்ச்சிகளைக் கொடுத்து, வெறி கொண்டு கொல்வதற்கு இச் சூத்திரம் மக்களைப் பண்படுத்துகின்றது.

இனி "நாங்களும்" "அவர்களும்" எனும் யுத்த கோட்பாடும், சாதனைக் கவிதைகளும் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று இணைந்து ஆயுதப் போராட்டத்திற்கும், யுத்தத்திற்கும் தமிழ் மக்களை தயார் படுத்தின எனப் பார்ப்போம். 70 பதுகளிலும் அதன் பின்னரும் எழுந்த பல சாதனைக் கவிதைகள் சுதந்திரன் தீப்பொறி போன்ற தேசியவாதப் பத்திரிகைகளில் வெளி வந்தன. இக் கால கட்டத்தில் இக் கவிதைகள் மக்களை மறைமுகமாக ஆயுதப்போராட்டத்திற்கு தயாராகும்படி மக்களின் உணர்ச்சிகளைத் துண்டி நின்றன. குறிப்பாக, உணர்ச்சிக் கவிஞன் எனப் புகழப்பட்ட காசி ஆனந்தனின் கவிதைகள் "நாங்கள்" அதாவது உண்மையான தமிழன் யார் என்பதையும், "அவர்கள்" அதாவது கொடிய சிங்களவன் எவன் என்பதையும் வகுத்தும், வெறுத்தும், வடிவு கொடுத்தும் நின்றன.

> எங்கு முரண்பாடு தோற்றுவிக்கப்படுகின்றது எனில், ஓர் கட்சி(கூட்டணி) அல்லது ஓர் இயக்கம், பொதுச்சுதந்திரம்(தமிழர்சுதந்திரம்) என்ற கோசத்தை தமது அணியின் அரசியல் அதிகாரவளர்ச்சியுடன் பிணைத்து, தமது கருத்தை எதிர்ப்போரை சமூகத்தை எதிர்ப்போராக சுட்டி எதிரி, சிங்களவன், உளவாளி, துரோகி, எட்டப்பன், காக்கைவன்னியன் என்று மை பூசும் போது.....

இதை இன்னுமோர் விதத்தில் கூறுவதாயின் இச் சாதனைக் கவிதைகள் ஒரு வகையில் தமிழ் மக்களுக்குப் போதனைக் கவிதைகளாகப் புகுத்தப்பட்டன. அதாவது தமிழனின் தனித்துவத்தை அவை நிர்ணயித்ததுடன் மட்டும் அவை நில்லாது, அதனை வாதித்தும் எதிரியை அழிக்கப் போதித்தும் நின்றன. இக் காலகட்டத்தில் தமிழர் உரிமைகளையும், சுயநிர்ணயத்தையும் போராடிப் பெறும் முறைகளில் வேறுபட்ட கருத்துக்களை கொண்டோர் பலர் இருந்தனர். பிரிவினையை ஏற்றவர்களும் ஏற்காதவர்களும், ஆயுதப்போராட்டத்தை ஏற்றவர்களும் ஏற்காதவர்களும், எனச் தமிழ்ச் சமுகம் பல்வேறு கருத்துடையவர்களைக் கொண்டு இருந்தது. இவ்வாறு பல கருத்துக்களைக் கொண்டோர், மாற்றுக்கருத்துக் கொண்டோரை உளவியல் அல்லது உடலியல் ரீதியாக மிரட்டாது தமது சமூகப்பங்கைச் செலுத்த இக்கால கட்டத்தில் அரசியல் வாய்ப்புக்கள் இருந்தன. இவ்வாறு பல்கருத்துக்களாலும் அவற்றின் பங்களிப்புக்களாலும் பயனடைந்த ஓர் திறந்த சமுகத்தை, சாதனைக் கவிதைகள் உணர்ச்சியூட்டும் போதனைகள் மூலம் மக்களை ஒரே வகையில் சிந்திக்கவும், செயல்படவும், அரசியல் வழிபாடு செய்யவும் உந்தி நின்றன. தனிமனித உணர்ச்சிகளைச் சுரண்டும் நோக்குடைய இவ்வாறான உளவியல் வன்அழுத்தம், பல கருத்துக்களையும், சிந்தனைத் திறனையும் கொண்ட ஓர் திறந்த சமுகத்தை, ஒருவழியிலேயே சிந்திக்கவும், பார்க்கவும், பழகவும், வேண்டும் என்கின்ற ஓர் சிந்தனை ஒடுக்கத்தை அல்லது நிர்ப்பந்தத்தை அறிமுகப்படுத்தியது.

இவ் வகைப்பட்ட சிந்தனை ஒடுக்கம், தமிழர்சுதந்திரம் என்ற பரந்த உற்சாகமூட்டும் கோசத்தினை முன்வைத்தாலும், அது சிந்தனைசுதந்திரம் விடயத்தை கருவில் அழிக்கும் அபாயத்தையும் உருவாக்கியது. கோட்பாட்டு அடிப்படையில் தமிழர் சுதந்திரமும், தனிமனித சிந்தனை சுதந்திரமும் ஒன்றாக இணைந்து வளர்வதில் முரண்பாடு இருக்க முடியாது. ஏனெனில் இவற்றின் வளர்ச்சி ஒன்றில் ஒன்று தங்கி உள்ளன. ஆனால் எங்கு இவற்றிற்கிடையே முரண்பாடு தோற்றுவிக்கப்படுகின்றது எனில், ஓர் கட்சி(கூட்டணி) அல்லது ஓர் இயக்கம், பொதுச்சுதந்திரம் (தமிழர்சுதந்திரம்) என்ற கோசத்தை தமது

அணியின் அரசியல் அதிகாரவளர்ச்சியுடன் பிணைத்து, தமது கருத்தை எதிர்ப்போரை சமூகத்தை எதிர்ப்போராக சுட்டி எதிரி, சிங்களவன், உளவாளி, துரோகி, எட்டப்பன், காக்கைவன்னியன் என்று மை பூசும் போது அல்லது சேறடிக்கும் போது இவ் இரு சுதந்திரங்களுக்குமிடையே தவிர்க்க முடியாதபடி முரண்பாடு தோற்றுவிக்கப்படுகின்றது. இக் கைங்கரியமானது தனி மனிதர்களை அரசியல் விமர்சனம் என்ற கோட்டைத் தாண்டி அரசியல் மதிப்பீட்டைத்தரும் பிதாக்களாகவும், கூடவே தண்டனையைத் தரவல்ல நீதிவான்களாகும் நியாயமற்ற தகுதிக்குத் தள்ளுகின்றது. எதிரி, சிங்களவன், உளவாளி, துரோகி, எட்டப்பன், காக்கைவன்னியன் என்ற பதங்களும், சொற்பிரயோகங்ளும், தமிழ் அரசியல் சமுதாயத்தை விமர்சனப் பாஷை பிரயோகம் என்ற தளத்தில் இருந்து பாஷைப் பயங்கரவாதம் எனும் துரதிஷ்ட அரசியல் தளத்திற்கு இட்டுச்சென்றது. இன்றைய தமிழ் சமுதாயத்தின் யுத்த முனைப்பும், இராணுவ விழுமியங்களின் கருவாக்கமும் அங்கேதான் தொடங்குகின்றது. சாதனைக் கவிதைகள் இப்பாஷைப் பயங்கரவாதத்தை விரிவாக்குவதில் பாரிய பங்கைச் செலுத்தின.

**நாங்கள்**

சாதனைக் கவிதைகள் முதலாவதாக தமிழரின் தனித்துவத்தை அதாவது "நாங்கள்" யார் என்பதை மக்கள் முன் விளக்க முற்பட்டது. இம் முயற்சியில் இச் கவிதைகள் மொழியை தமிழரின் அடையாள உணர்வாக காட்டி நின்றது.

**தமிழென் அன்னை தமிழென் தந்தை**
**தமிழென்றன் உடன் பிறப்பு**
**தமிழென் மனைவி தமிழென் பிள்ளை**
**தமிழென் நட்புடைத் தோழன்**
**தமிழென் சுற்றம் தமிழென் சிற்றூர்**
**தமிழென் மாமணித் தேசம்**
**தமிழ்யான் வாழும் எழில்மா ஞாலம்**
**தமிழே என்னுயிர் மூலம் (தமிழ் உணர்வு)**

தமிழ் மொழியின் பெருமை பேசுவதில் தவறில்லை. பல சந்தர்ப்பங்களில் அது அகமகிழ்ச்சியையும், ஆர்வத்தையும் தரும் விடயமும் கூட. ஆனால் இப் பெருமை மொழியாடலை அதிகார அரசியலில் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தும்போது, இது குறித்த சிக்கல்களும், கேள்விகளும் உருவாகுகின்றது. இங்கு மொழி வெறுமனே ஓர் ஊடகமாக இல்லாது அதன் பரப்பு விரிக்கப்படுகின்றது. மொழி என்பதை தனிமனிதனின் உறவாக, மண்ணாக, உயிராக விபரிக்கப்படும் போது, அது ஊடகம் என்ற தொழிற்பாட்டிலிருந்து மேம்படுத்தப்பட்டு ஓர் இனத்தின் உணர்வோட்டமாக விளக்கம் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு ஓர் மொழியின் பரப்பை விரிப்பதில் எவ்வித தவறும் இருக்க முடியாது. இவ்வாறன ஓர் விபரிப்பு முயற்சியை நாம் தமிழ்ப்பற்றுக் கொண்டாலும், இலங்கைத் தமிழர் போராட்டத்தின் வரலாற்றுக் கண்ணோட்டதில் பார்க்கும் போது அதில் ஒரு கனம் இருக்கின்றது. இக் கவிதைகள்

> இக் கவிதைகள் பல் சமுகங்கள் வாழ்ந்த ஓர் தேசத்தில் தமிழரை வேறுபிரித்து அவர்களின் தொல் பெருமைகளை உணர்த்தி, தமிழ் இன உணர்வு ஊட்டுகின்றது. இவ்வாறன இன உணர்வு ஊட்டும் காரியம், தேசிய இனப் போராட்டத்தின் மைய அம்சமாகும். இதன் இரண்டாவதாக படி வளர்ச்சியாக ஒருபடி மேவி தமிழ்ச் சமூகத்தை இராணுவ மயப்படுத்த வேண்டி நின்றது.

மொழியுணர்வை தமிழர் இனஉணர்வின் மத்திய அம்சமாக, அதாவது "நாங்கள்" யார் என்பதை தமிழ் மக்களுக்குச் சுட்டி காட்டுகின்றது என்று காண்பதில் தவறில்லை.

மேலும் இக் கவிதைகள் பல் சமுகங்கள் வாழ்ந்த ஓர் தேசத்தில் தமிழரை வேறுபிரித்து அவர்களின் தொல் பெருமைகளை உணர்த்தி, தமிழ் இன உணர்வு ஊட்டுகின்றது. இவ்வாறன இன உணர்வு ஊட்டும் காரியம், தேசிய இனப் போராட்டத்தின் மைய அம்சமாகும். இதன் இரண்டாவதாக படி வளர்ச்சியாக, இக் கவிதைகள் பண்டைத் தமிழரின் போர்ப் பெருமையைப் பாராட்டி, தமிழ்மொழியின் பெருமையில் நின்றும் ஒருபடி மேவி தமிழ்ச் சமூகத்தை இராணுவ மயப்படுத்த வேண்டி நின்றது.

**பாண்டிய மன்னவன் சோழன் பனிவரை**
**பார்த்து கலங்கிய சேர மகன்**
**ஈன்று மூன்றத்த குலத்தில் எழுந்தானே!**
**எடா தமிழா, எடடா படை!**
**கூண்டு கிளிநிலை எத்தனை நாள்வரை?**
**கூப்பிடு கூப்பிடு வீரர்களை**
**ஆண்ட பரம்பரை மீண்டு ஒரு முறை**
**ஆள நினைப்பதில் என்ன குறை**
**(ஏடு படைப்போம்)**

"ஆண்ட பரம்பரை மீண்டு ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை" எனப் பாடி நின்ற இக் கவிஞன், தமிழ்மொழியின் பெருமையை, அவர்களின் பண்டைப் பெருமையை, இன்றைய ஈழத் தமிழ் இனத்தின் பெருமையுடன் இணைத்தது, ஈழத் தமிழரும் பண்டைத் தமிழர் போல் வாளெடுத்து, போர்தெடுத்து நாடு காணவேண்டும் என சுட்டி நின்றான். இதற்கு முன்னுள்ள கவிதை தமிழர்களுக்கும், தமிழ் பேசும் முஸ்லீம் மக்களுக்குமிடையே தமிழ் உணர்வு அர்த்தத்தில் அரசியல் முடிச்சுப் போட முயன்றினும், இக் கவிதை தமிழ்களையும், தமிழ் பேசும் முஸ்லீம் மக்களையும் மறைமுகமாக கோடிட்டுப் பிரித்து நின்றது. அதாவது இலங்கை முஸ்லீம் மக்கள் தமிழ் மீது அளவற்ற பற்றுக்கொண்டு இருப்பினும் அவர்களுக்கு சேர,சோழ,பாண்டிய வரலாறு இல்லாததாலும், ஆண்ட பரம்பரைத் தகுதியில்லாததாலும், அவர்கள் தமிழர்களில் இருந்து வேறுபட்டு நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. "நாங்கள்" என்பதன் வரைவிலக்கணம் சேர,சோழ,பாண்டிய வரலாறையையும் ஆண்ட பரம்பரைப் அடிப்படையைக் கொண்டு வரைவிக்கணப்படுத்தப் பட்டதினால் முஸ்லீம்கள் சரியான தமிழர்கள் அதாவது "நாங்கள்" அல்லாது போனார்கள்.

இவ்வாறு பண்டைத் தமிழனின் பெருமைகளைக் அடித்து கூற இக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கவிதைகளுக்குப் பல அரசியல், இராணுவத் தேவைகள் இருந்தன. 70 களின் ஆரம்பக் கால கட்டத்தில் தமிழ்ச் சமுகத்தில் யுத்தத்திற்குத் தயாராக இல்லாத ஓர் இளைஞரை தயார் செய்யும் வேலை தமிழீழ ஆயுதப்போராட்டக் குழுக்களுக்கு இருந்தது. இக்கவிதைகள் இவ் வேலையைச் செய்வதில் ஆர்வம் காட்டின. இது எம்மை இக் கவிதைகளி மூன்ருவது படி வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும். பண்டைத் தமிழனின் பெருமையை, அதாவது "எங்கள்" பெருமையை மறத்துடன் இணைத்து எமது போர்க்குணம் பற்றி, வெறியுணர்வு பற்றி இத் தளத்தில் பாடப்பட்டது.

**பண்டைத் தமிழனாய் மாறு!**
**படை உலைத் தீயில்வாள்**
**காய்ச்சடா, காய்ச்சு!**
**சண்டைக் களம், நோக்கி ஏறு!**
**சாவின் வாள் எதிரிமேல்**
**பாய்ச்சடா பாய்ச்சு! (நெருப்பு)**

புலிச்சின்னமும் இதன் அடிப்படையிலேயே தமிழர் போராட்டத்திற்குள் செருகப்பட்டது. இங்கு சோழ சாம்ராஜ்ஜியத்தின் சின்னமான புலி, தமிழரின் போக்குணத்சைச் சுட்டி நின்றது. இச் சின்னம் தெற்காசிய வரலாற்றில், சோழ பேரரசின் ஆதிக்கத்தின் இராணுவப் பெருமையை விளக்கி நின்ருலும், சோழரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்களின் வரலாற்றைப் பொறுத்த வரை அது வெறுமனே ஓர் ஆக்கிரமிப்புச்சின்னமாகவே விளங்கியது. இலங்கைத் தமிழர் அரசியலில் இச் சின்னத்தின் செருகல் இன்றைய புலிகள் இயக்கத்தின் தோற்றத்திற்கு முன்பே, அதாவது ஆயுதப் போராட்டத்திற்கு முன், கிட்டத்தட்ட பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே சாதனக் கவிதைகளால் செய்யப்பட்டது. 1957 இல் முழக்கம் என்ற தலைப்பில் பாடப்பட்ட ஓர் கவிதையில் "பொறிக்கும் விழியோடு புலிகளாய் நின்ரேம்" எனப் பாடியதன் மூலம் "நாங்கள்" புலிகளாக மாற வேண்டும் என்பதைச் சுட்டிய காசி ஆனந்தன், 1986 இல்"புலிகள் பாசறை" எனும் கவிதையில், புலிகளாக மாறிய தமிழரை போற்றி

**"வீருடையாரைப் பாட என் பேனா**
**பேறு பெற்றதே! பேறு பெற்றதே"**

எனப் பாடி நின்ருர். எனினும் இக் கால கட்டத்தில் இவர் புலிகள் இயக்கத்தின் முழுநேர உறுப்பினராகச் சேரவில்லை.

நான்காவது படி வளர்ச்சியாக, நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி பெரும்பான்மையான தமிழர் மக்கள் இக் காலகட்டத்தில் ஆயுதப் போராட்டதில் நம்பிக்கை வைத்திருக்கவில்லை. ஆயுதப் போராட்டத்தால் தமிழர் நலனை வென்றெடுக்க முடியாது எனவும், அது தமிழ்சமூகத்திற்கு பாரிய அழிவை ஏற்படுத்தும் எனவும் பலரும் நம்பினர். ஆயுதப் போராட்டத்தின் மீதான இந்த நம்பிக்கை இன்மைக்குஎதிராக இக்கவிதைகள் "ஐயம் அகற்றிவை தமிழா "(நெருப்பு) என்றும், களித்திருக்காதே விழித்திருப்பாய் எனவும் (காயாத புதைகுழி கவனி), "விடுதலை உயிரிலும் மேலாம் விழித்தெழு"

> **தமிழ்ச் சமூகத்தின் "பலபக்க சிந்தனை" ஓட்டத்தின் வளத்தினை இவ் யுக்திமுறை மட்டுப்படுத்தி, குறிப்பாக இளைஞர்களை ஒரே வகை "ஒடுக்கச் சிந்தனை" முறைக்கு உட்படுத்தியது. அதாவது தமிழர் அனைவரும் ஒரே வகையில் சிந்தித்து பிரிவினை, ஆயுத போராட்டத்தை ஏற்று ஒரே வகையில் செயல்பட வேண்டும் என்ற உளவியல் வன்அழுத்தத்தை இவை கொடுத்து நின்றன.**

(நெருப்பு) என்றும், இனத்தைக் காப்போம் (தீப்பொறி) எனவும், இனவுணர்வு ஊட்டி நின்றது. இனவுணர்வை ஊட்ட இக்கவிதைகள் பல உளவியல் யுக்திகளை, தந்திரங்களைக் கையாண்டன. ஈழக்கோட்பாடு, ஆயுதப்போராட்டம் என்பவற்ரெடு உடன் படாதோரை உணர்ச்சி இழந்தோர்களாக, அச்சமுள்ள அசடுகளாக, தன்மானம் அற்றவர்களாக, தமிழ்ப்பெருமை பேண மறந்தவர்களாக பகிரங்கமாகச் சுட்டிக்காட்டப்பட்டு வெட்கப்படுத்தப்பட்டார்கள்.

**உச்சியில் நின்று விழுந்துவிட்டோம்! அட**
**உணர்ச்சி இழந்து விட்டோம்**
**உயிர் அச்சத்திஞல் இங்கு**
**சாய்ந்து விட்டோம் !**
**வீட்டில்அடங்கி இருந்துவிட்டோம்!**
**தெருப்பிச்சை எடுத்து வளர்ந்துவிட்டோம்**
**புகழ் பேண மறந்துவிட்டோம்**
**இந்த எச்சில் நிலை இனி இல்லை**
**எனக்கொடி ஏற்றி புறப்படடா!**
**(போர் முரசு )**

பல சிறுவர்கள் இந்த யுக்தி முறையினுல், இவ்வாருக உணர்வூட்டல் யுக்தியால் ஆயுத போராட்டத்தின்பால் கவரப்பட்டனர். தமிழ்ச் சமூகத்தின் "பலபக்க சிந்தனை" ஓட்டத்தின் வளத்தினை இவ் யுக்திமுறை மட்டுப்படுத்தி, குறிப்பாக இளைஞர்களை ஒரே வகை "ஒடுக்கச் சிந்தனை" முறைக்கு உட்படுத்தியது. அதாவது தமிழர் அனைவரும் ஒரே வகையில் சிந்தித்து பிரிவினை, ஆயுத போராட்டத்தை ஏற்று ஒரே வகையில் செயல்பட வேண்டும் என்ற உளவியல் வன்அழுத்தத்தை இவை கொடுத்து நின்றன.

இதன் ஐந்தாவது படிமுறை வளர்ச்சியாக, மேற்குறிப்பிட்டபடி, ஒரே வகையிலேயே சிந்தித்து ஒரே வகையிலேயே செயல்பட வேண்டும் எனும் உளவியல் வன்அழுத்தத்தை ஏற்க மறுத்த தமிழ் மக்களை, கேவலப்படுத்தல் அல்லது இழிவுபடுத்தல் முறையான தந்திர உபாயத்தின் மூலம்/(put-down tactics or Intimidation tactics) அந்தரப்படுத்தி மீண்டும் அவர்களை இன உணர்வுக்கு உட்படுத்தி யுத்தத்திற்கு அவர்களைத் தயார் படுத்த இச் சாதனக் கவிதைகள் உதவின.

இக் கால கட்டத்தில் பல தமிழர்கள் சிங்கள சமூகத்துடன் நட்புறவாய் இருந்தனர். கூடவே பல தமிழர் தேசிய வலதுசாரி அல்லது இடதுசாரி கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டனர். இவர்கள் பேயன் என்னும் சாதனக் கவிதையில் **'பெரு மனத்தால கெட்ட பேயனுக்கு பேர்தமிழன்"** என இழித்துரைக்கப்பட்டார்கள். கூடவே **"துடில்லாத் தமிழன் தூடேற்று எனவும்,"** (எழடா)**"தின்னவா மண்ணில் பிறந்தோம்'** எனவும்,(நெருப்பு) **"நாம் வாழ்வு வாழவா**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பிறந்தோம்! நக்கிப்பிழைக்கவோ? நன்றடா நன்று '** எனவும் (நெருப்பு), **"உருப்படா திருந்த தமிழன்"** (முதல் சுவடுகள்...) எனவும், **"ஏழெட்டு தாளிட்டு வீட்டிலே கோழைகள் ஆகி இந் நாள் வழ்விட்ட படிவாழ்ந்தோம்... என வாழ்ந்தார் உதவாத தமிழர்"** (பரமதேவா) எனவும், **"எருமை"** , எனவும், இத் தமிழ் மக்களை சூடற்றவர்களாக இக் கவிதைகள் காட்டி நின்றன. இக் குறிப்புக்கள், உண்மையான தமிழன் எப்படி இருக்க வேண்டும் என்பதையும், தமிழன் அல்லாத தமிழன் எப்படிப்பட்டவன் என்பதையும் விளக்கி நின்றது. இவ்வாறான வன்அழுத்தத்தால் தமிழர் அல்லாத தமிழரும், உண்மையான தமிழனுக(நாங்கள்) மாறி போராட்டத்தில் சேர இனரீதியாக உளக்கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

இறுதியாக இச் சாதனக் கவிதைகள், இனத்தின் அக எதிரிகளின் தன்மையை, தாம் சார்ந்த அதிகார அரசியலின் இலட்சியத்திற்கேற்ப வரையறை செய்து, அவர்களை இனம்காட்டின. இது அக எதிரிகளை தண்டிக்க வல்லமை வாய்ந்தவர்களுக்கு எதிரிகளைச் சுட்டிக்காட்டியதோடு நின்றுவிடாமல், கூடவே அவ்வாறான அக எதிரிகளின் எதிர்காலம் எவ்வாறு நொறுக்கப்படும் என்பதையும் விபரித்து நின்றன. இக் காலத்தில் எழுந்த எதிரி, துரோகி, எட்டப்பன் போன்ற தமிழ் அரசியல் கலைச்சொற்கள் பல சாதனக் கவிதைகளிலும் புகுந்து கொண்டன. ஈயச்சன்னங்களை ஒத்த இச் சொற்கள் 70களின் ஆரம்பத்தில் சகிப்புத்தன்மை அற்ற அரசியலையும், பயங்கரவாதத்தையும் தமிழ்மக்களுக்கு அறிமுகப்படுத்தியது. களையெடுத்தல் என்ற சொல்லும் இதன் அடிப்படையில் தமிழ் அரசியலில் புகுந்து கொண்டது. தமிழர் அரசியலில் தனிநபர் பயங்கரவாதத்தின் வரலாறும் இதையடுத்து ஆரம்பமாகியது.

**களை எடுப்போம் வாரீர் தமிழரே!**
**தமிழரைக் காட்டிக் கொடுக்கும்**
**தமிழர்**
**தலை எடுப்போம் வாரீர்! மீண்டும்**
**நாம்**
**தலையெடுக்க வேண்டுமாயின்**
**இவரை**
**முளை தனிலே கிள்ளி எறிதலே**
**முதல்வேலை,ஓடிப்புறப்படுங்கள்!**
**கொலை நெடுவாள் தூக்கி இவர்**
**சிந்தும்**
**குருதியிலே பகைவரை**
**மூழ்கடிப்போம்!**
**சுமந்த தாய் எனினும் சரியே**
**இன்னல்**
**சிறிதளவுமின்றி எமை**
**வளர்த்தும்**
**சிறந்த தந்தை எனினும் சரியே**
**உறுபகைவர் நட்பில் மகிழ்ந்தெங்கள்**
**தமிழருக்குலை வைப்பாராயின் ஓடி**
**வெறியோடவர் உடலம்**
**வீழ்த்துமின்கள்!**
**அதன்பின்போர் விழாவும்**
**நடத்திவைப்போம்!**

**(களை எடுப்போம் வாரீர்)**

> **இக் காலகட்டத்தில் மண்டையில் போடுவதற்கான காரணங்களையும், கிரிகைகளையும் சாதனக் கவிதைகள் செம்மையாக வழங்கியதால், துவக்கை வைத்திருந்தவர்களுக்கு, எதிரிகள் எனத் தாம் சந்தேகப்பட்டவர்களை உளவியல் ரீதியாகவோ அல்லது உடலியல் ரீதியாகவோ மக்களிடம் இருந்து தந்திரமாகத் தனிமைப்படுத்தும் வேலையோ, முளையோ இருக்கவேண்டிய அவசியம் இருக்கவில்லை.**

இக் காலகட்டத்தில் கூட்டணியின் பிரச்சாரக் கூட்டங்களில் பேசிய கவிஞர் காசி ஆனந்தன் புனித இலட்சியக்கொலை அழைப்புகளை பகிரங்கமாக பிரச்சார மேடைகளில் விடுத்தார்.

"துரையப்பா, சுப்பிரமணியம் போன்றோர் தமிழ் சமூகத்தின் எதிரிகள், அவர்கள் இயற்கையாகவோ அன்றி விபத்தாகவோ மரணம் அடையத் தகுதியானவர்கள் அல்லர், அவர்களின் மரணம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை தமிழ் மக்கள், குறிப்பாக இளைஞர்களே தீர்மானிக்க வேண்டும்."

எனப் பல மேடைகளிலும் அறைகூவினர். **'கொலை நெடுவாள் தூக்கி இவர் சிந்தும் குருதியிலே பகைவரை மூழ்கடிப்போம்' என்ற கவிஞனின் கவிதையைத் தொடர்ந்து தமிழ்த் துரோகிகள் என நிறமடிக்கப்பட்டோரின் தலைகள் பல அடுத்தடுத்து வீழ்த்தப்பட்டன.** இக் களையெடுப்பு **யாழ்பாண மொழியாடலில் "மண்டையில் போடல்" எனச் செல்லமாக அழைக்கப்பட்டது. மண்டையில் போடல், தட்டுதல், போன்ற பயங்கரவாத அரசியல் சொற்பிரயோகமும் இதனடிப்படையில் அன்றுட தமிழ்மொழி வழக்கில் ஆயுத அரசியலின் ஆசியுடன் புகுந்து கொண்டது.** கோயில்களில் எவ்வாறு பலி ஆட்டினை வெட்ட முன் குளிப்பாட்டி திலகமிட்டு தூய்மை படுத்தும் கிரிகைகளை செய்வார்களோ அவ்வாறே அரசியல் எதிரிகள் என இவர்களால் நாமமிடப்பட்டவர்கள், கொலை செய்யப்பட முன் துரோகிகள், எட்டப்பர், கெட்டவர்கள், சமூகத்துக்கு **உதவாதவர்கள் விபச்சாரிகள்** எனச் சேறடிக்கப்பட்டார்கள். இதன் மூலம் தமது அரசியல் எதிரிகளுக்கு அசுத்தக் கிரிகைகள் கச்சிதமாய் செய்யப்பட்டு, மக்களிடம் இருந்து அவர்கள் தந்திரமாகப் பிரிக்கப்பட்டு மண்டையில் போடப்பட்டார்கள். இக் காலகட்டத்தில் மண்டையில் போடுவதற்கான காரணங்களையும், கிரிகைகளையும் சாதனக் கவிதைகள் செம்மையாக வழங்கியதால், துவக்கை வைத்திருந்தவர்களுக்கு, எதிரிகள் எனத் தாம் சந்தேகப்பட்டவர்களை உளவியல் ரீதியாகவோ அல்லது உடலியல் ரீதியாகவோ மக்களிடம் இருந்து தந்திரமாகத் தனிமைப்படுத்தும் வேலையோ, முளையோ இருக்கவேண்டிய அவசியம் இருக்கவில்லை. "நாங்களும்", "அவர்களும்" என்ற இராணுவ மனப்பாங்கிற்கு சிறிது காலமாகப் தமிழ் மக்கள் வளர்த்தெடுக்கப்பட்டதால், பிற்காலத்தில் துவக்கை வைத்திருந்தவர்கள் யாரைப் போடாலும் பழக்கப்பட்டதோஷத்தால் (பழக்கதோஷத்தால் அல்ல), பொடியள் செய்தால் ஏதோ விஷயம் இருக்கவேண்டும் நியாயத்தை வசதியாக வழங்கினர்கள். சாதனக்கவிதைகள் தமது எதிரிகளை

www.tamilarangam.net



(அவர்களை) மனிதனுக வாழத்தகுதியற்றவர் என மனித நேயத்திற்கும் புறம்பான முறையில் இழித்து நின்றது.

**ஏனடா, ஆண்டாள்**
**புள்ளினை நக்கிப்**
**போட்டதை விழுங்கும்**
**உன்னி நாயாளும்**
(அட தமிழா)

**காட்டிக் கொடுப்பவன் எங்கே**
**அந்தக்**
**கயவனைக் கொண்டு**
**வாசல் தூணேடு கட்டு!**
**சாட்டை எடுத்துவா இங்கே,**
**தம்பி சாகும்வரை அடி**
**பின்பு கொளுத்து!**
**தீயன் உடலைத் தீவை எங்கள்**
**தெய்வத் தமிழ்வாழ**
**இவன் சாவு தேவை**
**பாயும் புலியே தமிழா தம்பி**
**பச்சைத் துரோகி விழப்பாய்ந்து**
**வாடா**
(தழலிடு)

**நாயே உனக்குமொரு நாடா!**
**எச்சில்**
**நாடும் உனக்கு வரலாரு?**
**தாயார் புலம்புகின்ற வேளை**
**மாற்ருன்**
**தானைக் கழுவுகிற கோழை!**
**பேயா இறந்துதொலைவாயா**
**நமைப்**
**பெற்ருள் துயர் அகலவேண்டும்!**
**நீயே நடை பகைவர் அல்லர்**
**தமிழ் நிலத்தில் பிறந்த படுபாவி** (நாயே...!)

தமக்கெதிரானவரை கோழை, பச்சைத் துரோகி, நாய் என உணர்ச்சியூட்டும் சொற்களால் இழிவுபடுத்தி, அதே மூச்சில் **"தெய்வத் தமிழ்வாழ இவன் சாவு தேவை"** இக்கவிதைகளுக்குக் கூற அதிக சிரமம் இருக்கவில்லை. கொள்கை மாறுபட்டவர்கள் தெய்வத் தமிழ் உணர்வின் பெயரால் கொலை செய்யப்பட்டனர். ஸ்ரீலங்கா அரசுடன் தொடர்புள்ளவர்களை மாற்ருன்தாளைக் கழுவுகிற கோழை எனவும் துரோகியெனவும் கூட்டணி மற்றும் புலிக ளின் தத்துவங்களுக்கேற்ப இக்கவிதைகள் வரைவிலக்கணம் கொடுத்தாலும், தமிழ் விடுதலைப் போராட்டத்தில், கூட்டணி முதல் புலிகள் வரை, பல ஈழக்குழுக்கள் ஸ்ரீலங்கா அரசின் தயவில் காலத்திற்குக் காலம் வாழ்ந்து வந்தது யாருக்கும் தெரிந்ததே. சாதாரண பிரஜைகள் இக்காரியத்தைச் செய்தால் துரோகத்தனம் எனச் சுட்டப்பட்ட இச் செயல், கூட்டணியும் இயக்கங்களும் செய்தால் இராஜ தந்திரம் எனும் குளறுபடித் தத்துவத்தை இக்காலகட்டத்தில் மக்கள் புதிதாகக் கண்டார்கள். காலப்போக்கில் ஈழப்போராட்டத்தில் யாருக்கு யார் துரோகி என்ற விவஸ்த்தையையே இத்தத்துவம் இல்லாமல் செய்தது.

பட்டிமன்றங்களில் அடிக்கடி ஓர் தலைப்பு வாதத்திற்கு வரும். **"கலை கலைக்காகவா அல்லது மக்களுக்காகவா"?** இன்றைய காலகட்டத்தில் இத் தலைப்பை சற்று மாற்றி **"கொலை கொலைக்காகவா அல்லது மக்களுக்காகவா"?** என்ற கேள்வியை தமிழர் ஆயுதபோராட்டத்துடன் இணைத்து கேட்டல் அவசியமானது. தமிழீழப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் ஆயுதம் தாங்கியோர் அரசியல் எதிரிகளைக் களையெடுக்கும் திருப்பணியில் ஈடுபட்ட போது கொலைகள், கொலை கொலைக்காகவல்ல மக்களுக்காகவே செய்யப்பட்டது என நம்ப வைக்கப்பட்டது. அதிலும் விடுதலைப் புலிகளால் செய்யப்பட்ட கொலைகள் தமிழ் மக்களின் புனித நலன்களுக்காகவே செய்யப்பட்டதாக நியாயப்படுத்தப்பட்டது. இதனை விடுதலைப் புலிகளின் முன்னுள் உப தலைவர் மாத்தையா ஓர் பேட்டியில் இல் உறுதிப்படுத்தினர்,

**ஸ்ரீலங்கா அரசுடன் தொடர்புள்ளவர்களை மாற்ருன்தாளைக் கழுவுகிற கோழை எனவும் துரோகியெனவும் கூட்டணி மற்றும் புலிகளின் தத்துவங்களுக்கேற்ப இக்கவிதைகள் வரைவிலக்கணம் கொடுத்தாலும், தமிழ் விடுதலைப் போராட்டத்தில், கூட்டணி முதல் புலிகள் வரை, பல ஈழக்குழுக்கள் ஸ்ரீலங்கா அரசின் தயவில் காலத்திற்குக் காலம் வாழ்ந்து வந்தது யாருக்கும் தெரிந்ததே.**

**கேள்வி.** உங்கள் ஆட்கள் ஏன் அமிர்தலிங்கத்தையும், ஏனைய கூட்டணித் தலைவர்களையும் கொன்ருர்கள்?

**பதில்.** அவர்கள் கொல்லப்பட்டதிற்குக் காரணம் அவர்கள் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடுகளிருந்து வேருன கருத்துக்களைக் கொண்டு இருந்தார்கள் என்பதற்காக அல்ல மாருக அவர்கள் இந்தியாவின் பிரதி நிதிளாக, துரோகிகளாக, ஒன்ருக வேலை செய்தார்கள் என்பதே. போர்க்களத்தில் இலட்சியத்திற்கு துரோகம் செய்வோரை புலிகள் கொல்லும்,......தேசிய போராட்டத்தில் துரோகிகள் எங்கும் இருப்பர். போர்க்களம் எங்கும் இருக்கும்... .
**( "we know the Indian game" The vioce of Tamil Vol. 5 no3 April 240)**

எதிர்பார்க்கப்பட்ட படியே, கொலைகளுக்கு விதிகளை வரையறுத்த உப தலைவர் மாத்தையா அவர்களே பிற்காலத்தில் இந்தியாவின் உளவாளியா கச் சமைக்கப்பட்டு துரோகியாக்கப்பட்டார். இவரின் இருப்புப் பற்றிய தகவல் இதுவரை தெளிவாக இல்லை. யுத்த கொலைகள் இன்றும் தொடர்கின்றன இவற்றின் வளர்ச்சிக்கு சாதனக் கவிதைகள் பெரும் பங்கைச் செலுத்தியிருந்தன.

**தெருவ்படைலை**
**நாங்கள் அடக்கலாம்**
**புயலை திருப்பிப்**
**போர்செய்திடலாம்**
**சுடும் அனலை வென்று**
**நொடிப்பொழுதில**
**கொடியும் தூக்கலாம் போராடி**
**மாற்ருர்**
**விடுங்களைகள் கோடி எனிலும்**
**போய்**
**எதிர் நின்று வென்றி கொண்டு**
**வரலாம்!**
**கொடுங் கனைகள் இருக்கும் வரை**
**நாங்கள்**
**இவை செய்யோம் கனை**
**கொழுத்துவீரே!**

துரோகிகள், எட்டப்பர், கெட்டவர்கள், சமூகத்துக்கு உதவாதவர்கள் களைகள் எனத் தமது எதிரிகளை நிறமடித்த அதாவது

www.tamilarangam.net



எதிரிகளை(அவர்களை) வரையறுத்த சாதனக் கவிதைகள், அதேவேளை அந் நாணயத்தின் மறுபக்கமான தியாகிகளை (அதாவது நாங்கள்) இலட்சியப் படைப்புகளாக வரையறுத்து நின்றன. போராட்ட வளர்ச்சிப் போக்கில், விசுவாசிகளின் தியாகத் தன்மைகளை தமிழ்ச் சமுதாயத்தில் அவர்களுக்கு அளப்பரிய அதிகாரத்தை வழங்கியது. வீதியில் மண்டை ஒடு சிதறிக் கிடந்த பெயர் தெரியா பிணத்தைக் கண்ட மக்கள் **'பெடியள் போட்டால் அதில் ஏதோ விசயம் இருக்க வேண்டும்'** எனத் தாமே கொலைக்கு நியாயம் கூறிய போது இத் தியாகிகளின் அதிகாரம் பரி பூரணமானது. இத்தியாகிகள், பிற்காலத்தில் மகாவீரர்களானுர்கள்.

இவ்வாறு தமிழ்ச் சமுகத்தினிடையே இடம்பெற்ற அரசியல் அகப் போராட்டத்தில் யுத்தக் கோட்பாட்டின் சூத்திரத்திற்கு அமைய நாங்களும், அவர்களும் அல்லது தியாகிகளும், துரோகிகளும் என்ற வர்க்கங்கள் கச்சிதமாக உருவமைக்கப்பட்டன. ஆரம்பத்தில் சாதனக்கவிதைகளால் உதவப்பெற்று அக அரசியல் எதிரியை அல்லது துரோகியை அழிப்பதில் ஆரம்பமான கொலைக்கலாச்சாரம், பிற்காலத்தில் தமிழரின் விடுதலை ஒரே தியாகத்தலைமையின் கீழேயே இடம் பெறமுடியும் எனக் கருதியதால் புலிகளைத் தவிர்ந்த ஏனைய இயக்கங்களை அவர்கள் எனச் சுட்டிக்காட்டப்பட்டு அழித்தது. இது மண்டையில் போடு வதற்கான வரைவிலக்கணத்தை மீண்டுமொருமுறை மாற்றியது. துப்பாக்கிகளின் தரமும், தோட்டாக்களின் எண்ணிக்கைகளும், தம்மை எதிர்ப்போரை கொல்லும் திறனும், புலிகளின் அரசியல் ஆளுமையாக மாறிய தால், அவ்வாருன ஓர் இராணுவச் சமுதாயத்தில் புலிகள் மட்டுமே தியாகிக ளாகவும், அவர்களை ஆதரிப்பவர்கள் நாங்களாகவும் பார்க்க வேண்டிய அரசியல், உளவியல், சமூக நிர்ப்பந்தம் எமது சமூகத்தில் திணிக்கப்பட்டது. தியாகிகள் நாங்கள் எப்போதுமே நல்லவர்கள் எனச் **சாதனக்கவிதைகள் எமக்குச் மூளைச்சலவை செய்ததால், 'டெலோ' சிறுவர்களின் உடல்கள் சந்திக்குச் சந்தி அவலமாய் எரியும் போது 'அவர்களை' எரித்துக் களைப்படைந்தவர்க்கு எம்மால் குளிர்பானம் வழங்கி உபசரிக்கவும் முடிந்தது.**

இவ்வாறு பல படிநிலைகளில் சாதனக் கவிதைகள் யுத்தக்கோட்பாடின் முதல் அம்சமான "நாங்கள்" அல்லது உண்மையான தமிழன் யார் என்பதையும், "அவர்களின்" ஒரு அம்சமான துரோகி அல்லது அகஎதிரி யார் என்பதையும் நிர்ணயித்து தமிழனை யுத்ததிற்கு தயாராக்கியது,

**அவர்கள்**

இனி "அவர்கள்" அல்லது புறஎதிரி யார் எனும் அம்சத்தை வடிவமைக்க எவ்வாறு சாதனக் கவிதைகள் உதவின என்பதை நோக்குவோம். இக் கட்டுரையின் ஆரம்பத்தில் சுட்டிக்காட்டியவாறு எந்த ஓர் யுத்தத்திற்கும் "அவர்கள்" அல்லது பொது எதிரிகளை வடிவு கொடுப்பது அவசியமானது. ஓர் மனித கூட்டம் இன்னுமோர் மனித கூட்டத்தைக் கொல்ல அடிப்படையான சில நியாயங்கள் இருக்க வேண்டும். அதிலும் மிக முக்கியமாக எதிரியை வாழத்தகுதியற்றவராக, நாகரீகம் அற்றவராக, மிருகங்களாக காட்டுதல் அத்தியாவசியமானது.

தியாகிகளும், துரோகிகளும் என்ற வர்க்கங்கள் கச்சிதமாக உருவமைக்கப்பட்டன. ஆரம்பத்தில் சாதனக்கவிதைகளால் உதவப்பெற்று அக அரசியல் எதிரியை அல்லது துரோகியை அழிப்பதில் ஆரம்பமான கொலைக்கலாச்சாரம், பிற்காலத்தில் தமிழரின் விடுதலை ஒரே தியாகத்தலைமையின் கீழேயே இடம் பெறமுடியும் எனக் கருதியதால் புலிகளைத் தவிர்ந்த ஏனைய இயக்கங்களை 'அவர்கள்' எனச் சுட்டிக்காட்டப்பட்டு அழித்து.

மானிட வரலாற்றின் வளர்ச்சிப் போக்கின் ஆரம்பத்தில், மனிதர் தம்மை நாகரீகம் படைத்தவர் அல்லது "மனிதம்" எனும் மேம்பாட்டை உடையவர் எனக் கருதியதால் ஒருவரை ஒருவர் கொல்வது அநாகரீகம் எனக் கருதினர். இதே வேளை தமக்கும், தம்மைச் சார்ந்த மனித சமூகத்திற்கும் தீங்கிழைக்கும் ஜந்துக்களையும் மிருகங்களையும் கொல்லுதல் நியானமானது என்பதை தமக்கிடையே ஓர் சமூகக் நியதியாக ஏற்றுக்கொண்டனர். இதற்கான காரணம் இவ் ஜந்துக்களும், மிருகங்களும் சிந்திக்கத் தகுதி அற்றவை எனவும் கட்டுபாடு அற்றவை எனவும், கூடவே தமக்கு மேம்பட்ட, பெறுமதி மிக்க மனிதரைக் கொல்ல மிருகங்களுக்கு எவ்வித தகுதியும் நியாயமும் இல்லை எனவும் மனிதமேலாதிக்க வாத அடிப்படையில் கருதினர்.

இதேவேளை சமூதாயங்கள் வளர்ந்து ஒன்றை ஒன்று முட்டி மோதிக்கொள்ளும், போது ஓர் மனித கூட்டம் இன்னுமோர் மனித கூட்டத்தைக் கொல்லும் யதார்த்தத்தைக் கண்டனர். இவ் யதார்த்தம் மனிதர் ஒருவரை ஒருவர் கொல்லது அநாகரீகம் எனும் அவர்களது ஆரம்ப முடிவிற்கு முரணுக இருந்தது, இவ் முரண்பாட்டைத் தவிர்க்குமுகமாக தம் எதிரியை அபாயகரமான மனிதத் தன்மையற்ற மிருகங்களாகக் காட்டும் அவசியம் அவர்களுக்குத் தேவைப்பட்டது. இவ் அடிப்படையில் பிற்காலத்தில் மனித சரித்திரத்தில் இடம் பெற்ற யுத்தங்களில், போரிடுவோர், பொதுவாக ஒருவரை ஒருவர் ஒடுக்குபவராக, சர்வாதிகாரியாக, பயங்கரவாதியாக வாதிட்டு எதிரிகளை விரும்பத்தகாத பயங்கர காட்டு மிருகங்களாக காட்டி அழிப்பது வழக்கமாகியது, இதுவே "அவர்கள்" அல்லது "எதிரிகள்" என்ற யுத்தக் கோட்பாட்டின் மத்திய அம்சமாகும்.

இப்போது கவிதைகளுக்கு வருவோம், இக் காலகட்டத்தில் எழுதப்பட்ட காசி ஆனந்தனின் பல கவிதைகள் "அவர்கள்" எனும் நிராகரிக்கத்தக்க சிங்கள எதிரியைப் படைப்பதிலும், போதிப்பதிலும் ஆர்வம் காட்டி நின்றன. முக்கியமாக எதிரிகளைப் பொதுமைப் படுத்துவதில் இவை மிகவும் ஆர்வம் காட்டின. அதாவது குறிப்பிட்ட இனத்தின் ஒரு குழுவினர் செய்யும் நியாயத்திற்குப் புறம்பான செயல்களை ஓர் இனத்தின் குணும்சாமாகக் காட்டி, அதாவது பொதுமைப்படுத்தி நிராகரிக்க அல்லது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அழிக்கத் தூண்டி நின்றது. 1983ஆம் இனக்கலவரத்தையும், சிங்களஇனத்தையும் தூற்றி இக்கவிதைகள், இக்கலவரத்தில் நூற்றுக்கணக்கான தமிழர்களைக் காப்பாற்றிய, அடைக்கலம் கொடுத்த, உணவளித்த சாதாரண சிங்களப் பொதுமக்களைப் பற்றி ஒரு வரிகூடப் பாடவில்லை. அடிபட்ட அவலத்தில், வெறிகொண்ட கவிதைகள் அனைத்துச் சிங்களப் பொதுமக்களையும் அவர்களாக்கி, அவர்கள் அனைவரையும் எதிரிகளாக்கியது. இதன் அடிப்படையில் சிங்களமக்கள், சிங்களவராக்கப் பட்டனர். பின்னர் சிங்களர், சிங்களவனுக்கப்பட்டான். இறுதியாக சிங்களவன், சிங்களக் காடையனுனான்.

எதிரியின் தன்மையைப் ஓர் இனத்தின் தன்மையாக பொதுமையாக்கும் யுத்த தத்துவத்தின் போக்கு காசிஆனந்தனின் படைப்புக்களில் வெளிப்படையாகவே முன்வைக்கப்பட்டது. சிங்கள மக்களை பொதுவாகவே சிங்களவன் ( இனஉணர்வு), எதிரி, கொடிய பகைவன், கயவர் (தீப்பொறி, தைமகள் வந்தள்), தடியர், கொடியர் (கண்டேன்), சண்டியன் (பண்டிதர்), வெறியர் (எழடா, ஐங்கரன், தைமகள் வந்தள்), காடையர், (எழடா), தறுக்கன் (நெருப்பு, ஐங்கரன்), வஞ்சகர் (ஐங்கரன்), இடுங்கன், இடுகல் நெஞ்சர் (தீப்பொறி), கொலைஞர் (நெருப்பு), நஞ்சுள்ளத்தர் (நெருப்பு), கடித்த புடையன் (காயாத புதைகுழி கவனி), காலி வெறிமாடு (பாரதமே பாரதமே ) வெறிப்படைப் பன்றிகள் (தைமகள் வந்தள்), நாய், நரி (வேலி ஒருகேடா ) பேய்கள் (புறப்படடா!) என்ற விபரிப்புகளையும் வருணிப்புக்களையும் முன் வைத்தார்.

எதிரி பற்றிய இவ்வாருன வருணணைகள் ஆங்கிலத்தில் Dehumanizing process (மனிதப்பண்பற்றவராகக் வருணிக்கும் போக்கு) என்பர். இங்கு நாங்களும், அவர்களும் எனும் யுத்தக் கோட்பாட்டின் அடிப்படையில் சாதனக் கவிதைகள் எதிரிகளை பொதுமைப்படுத்தி மனிதப் பண்பற்றவராகவும், மிலேச்சத்தனமான மிருங்களாகவும் ஓர் சித்திரத்தை வெற்றிகரமாக வரைந்ததால் அவர்களை, அந்த மிருங்களை அழிக்க முனைவதில் தமிழ்ச் சிறுவர்களுக்கு எவ்வித சிந்தனைக் குழப்பமும் இருக்க வில்லை. அவர்கள் பற்றிய வெறுப்பு மனேபாவத்தில், களமேறிய பூக்களும், பிஞ்சுகளும் (எங்கள் தோழர்களின் புதைகுழியில்) எனப் போராளிச் சிறுவர்களை உருவேற்றிய இக் கவிஞன் தனக்கே உரித்தான பாஷையில் அவர்களை "செந்நீர் குளித்து சிங்களதை சேருக்கி உழக்க" (நெருப்பு) என வேண்டிநின்ருன்.

இவ்வாறு சிங்களத்தைச் சேருக்க விருப்புகொண்ட சாதனக் கவிதைகள் சிறுவர்களின் இனஉணர்வினைச் சுரண்டி, அவர்களைச் சகல சிங்களப்பொது மக்கள் மீதும் வெறிகொள்ளச் செய்தது. இவ்வாறு சாதனைக் கவிதைகள் சிறுவர்களை

> **நாங்களும் அவர்களும் எனும் போர் தந்திரம் அல்லது இராணுவ உலகப்பார்வை, தமிழ்சமூகத்தில் நீண்டகாலமாக சாதனக் கவிதைகளால் வளர்க்கப்பட்டு ஓர் தூரதிஷ்டமான விடயம். இவை ஈழப்போராட்டத்தை ஆயுத போராட்டத்துடன் இணைத்து மக்களைத் தயார்ப்படுத்துவதிலும், தமிழ்ச்சமூகத்தை இராணுவமயப்படுத்துவதிலும், கூடவே பயங்கரவாத அரசியலை வளர்ப்பதிலும், நியாயப்படுத்துவதிலும் பெரும் பங்கினைச் செலுத்தின.**

மூளைச்சலவை செய்ததால், சயனைட் குப்பிகளை அணிந்த தமிழ்க் குழந்தைகள், அனுராதபுர படுகொலை முதல் இன்றுவரை, சிங்களப்பொது மக்களுக்கெதிராக செய்யும் படுகொலைகளை, " இராணுவத்தாக்குதல்" என வெகுளித்தனமாக நம்பி வெற்றிகரமாகச் செய்யவும், கூடவே அவற்றைத் தமக்குத்தாமே குழப்பத்துடன் நியாயப்படுத்தவும் முடிந்தது. சகல சிங்கள மக்களும் "அவர்கள்" ஆனதால் ஆயுதம் தரிக்காத சிங்களப்பெண்களும் சிறுவசிறுமியர்களும் நூற்றுக்கணக்கில் கொலைசெய்யப்பட்டனர்.

இது தமிழ் விடுதலைப் போராட்டத்தில் பல பக்க விளைவுகளை ஏற்படுத்தியது. முதலாவது, எந்த அவலங்களுக்கெதிராக அரச படைகள் மீது, தமிழ் ஆயுதப்போராட்டம் தொடங்கப்பட்டதாக நாம் நியாயப்படுத்தினேமோ, அதே அவலங்களை நாம் சிங்களப் பொது மக்களுக்கெதிராகக் கூச்சமின்றிச் செய்ய அல்லது அப்படிச் செய்வதை நேரடியாகவோ, மெளனியாகி யோ ஆதரிக்கத் தள்ளப்பட்டோம். இரண்டாவது, இவ்வாருன யுத்த குற்றங்கள் (War crimes) சர்வதேச மட்டத்தில் தமிழர் விடுதலைப்போராட்டத்திற்கான தார்மீக ஆதரவைக் குறைத்ததோடு மட்டுமின்றி, எம்மை அவர்கள் முன் யுத்தக் குற்றவாளிக ளாகவும் காட்டியது. மூன்ருவதாக ஜெனீவா மற்றும் ஐ. நா. சபையின் மனித உரிமைகள் கோட்பாடுகளுக்கு எதிராக சிறுவர்களை (பூக்களும் பிஞ்சுகளும்) உருவேற்றி, அவர்களை இராணுவமயப்படுத்திய விடுதலைப்புலிகள், தமது இராணுவ நடவடிக்கையாக அச் சிறுவர்களை சிங்களப்பொது மக்களைக் கொல்வதற்காக ஏவியபோது, சர்வதேச மனித உரிமைக் கோட்பாடுகளை மீறிய ஓர் சிறுவர் கூட்டத்தையும் எமது சமூத்தில் அநியாயமாகக் உருவாக்க வழிசமைத்தது.

**நாங்களும் அவர்களும்**

நாங்களும், அவர்களும் எனும் போர்க்குணும்சம் இலங்கையைப் பொறுத்தவரை வெற்றிடத்தில் உருவான ஓர் தோற்றப்பாடு அல்ல. அதற்கு நீண்டகால வரலாறு இருக்கின்றது. இந்தியாவில், பெளத்த மதம் தோன்றினுலும் இம்மதத்தின்பால், இந்து மதத்தினர் கொண்ட சகிப்புத்தன்மை இன்மையும், இம் மனப்பான்மையின் வளர்ச்சிப்போக்கும், பெளத்த மதம் இந்தியாவில் சுயாதீனமாக இயங்க வழிகோலவில்லை. இதனுல் பெளத்தம் சீன, யப்பான்,இலங்கை போன்ற நாடுகளில் பரவவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டது. இலங்கையில் வேருன்றிய பெளத்த மதம், தமிழக மன்னர்கள், சக்கரவர்த்திகளால் தொடர்ச்சியான படையெடுப்புக்களால் காலத்திற்குக் காலம் தமது சுயாதீனத்தை இழக்க வேண்டி இருந்தது. இச்சமயப்போர்ச் சூழ்நிலை, தமிழ் பேசிய இந்துக்கள் பால், சிங்களம் பேசிய பெளத்தர்களுக்கு அச்சத்தையும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அதிருப்தியையும் ஏற்படுத்தி இருந்தது. இதனால் பௌத்தர்கள், குறிப்பாக பௌத்த குருமார், தமிழ் பேசிய இந்துக்களை போர்க்குணும்சம் கொண்டு அவர்களாகப் பார்க்கத் தொடங்கினர்.

இலங்கைத் தமிழர்களை கடந்தகாலத் தமிழகப் படையெடுப்புகளோடும், இராணுவ மேலாதிக்கத்தோடும், இன்றும் இணைத்துப் பார்க்கும் இப் பௌத்த குருமாரின் வரலாற்று உளப்பயமும், போர்க்குணமும் (ஒரு நாணயத்தின் இருபக்கங்கள்), இலங்கை தமிழர்கள் தமது உரிமைகளை பெற்று சுயாதீனமாக வாழப் இன்றும் பெரும் தடையாக இருந்து வருகின்றது. ஒவ்வொரு தடவையும் அரசாங்கங்கள் தமிழரின் சில உரிமைகளை வழங்க முன்வரும் போது, அவை பௌத்த குருமாரின் பலத்த எதிர்ப்பினால் கைவ ிடப்பட்டன.

அதேவேளை, எவ்வாறு சிங்கள மக்கள் தமிழரை வரலாற்று படையெடுப்புக்களுடன் இணைத்து ஆக்கிரமிப் பாளர்களாகவும், அஞ்சத்தக்கவர்களாகவும், இந்தியர்க ளாகவும் வடிவு கொடுத்து அவர்களாகக் கண்டார்களோ. அவ்வாறே தமிழர்களும் சிங்களவரை குடியேற்ற வாதிகளாகவும், மோடையவராகவும், காடையராகவும் இனம் கண்டு அவர்களாகப் பார்த்தார்கள். இவ்வாறு தமிழர்களும் சிங்களவர்களும் ஒருவரை ஒருவர் அவர்களாகப் பார்க்கும் இம் மனோபாவத்திற்கு பல காரணிகள் கொடுக்கப்பட்டு இருப்பினும் அவற்றை வெளிப்படுத்தி நின்ற இரு சாராரின் தேசியவாதப்பாஷையில் இறுக்கமான இனவாதம் இருந்தது. இவ் இனவாதம் "பற தெமிளோ" அல்லது "மோட்டுச் சிங்களவன்", என்ற நாளாந்தப் சிங்கள, தமிழ்ப் பரிபாஷைகளில் துல்லியமான, ரசமிக்க தொனியுடன் பிரயோகிக்கப்பட்டது. இவ் இனவாத பரிபாஷை பிரயோகம் அவர்களை மனிதர்களிலும் கீழாகப் பார்க்கும் பழக்கத்தை இரு சாராரின் குழந்தைகளுக்கு சிறு பராயத்திலிருந்தே பழக்கிக் கொடுக்கப்பட்டது.

வரலாற்று நிகழ்வுகளால் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் ஏற்பட்ட இன்றைய நம்பிக்கை முறிவு துரதிஷ்டவசமானது. இன் நம்பிக்கை முறிவின் வளர்ச்சி, 1958 ஆண்டின் பின் தமிழர் மீதான அரச படைகளின் மிலேச்சத்தனமான தாக்குதல்களிலும், கொடூரங்களிலும் அப்பட்டமாக வெளிப்பட்டது. பதிலடி (Law of retaliation) எனும் விதியை அடிப்படையாகக் கொண்ட வன்முறை அல்லது ஆயுதத் போராட்டத்தீர்வு மனோபாவம் காலப்போக்கில் பன்முறை இராணுவ முஸ்தீபாக, எதிரி அழிக்கப்படும் வரும் வரை அல்லது களைக்கப்படும் வரை முடிவற்ற வளர்ச்சியாக பரிணமிக்கும் போக்கைக் கொண்டது. 1970 ஆண்டின் பின்வன்முறை அல்லது ஆயுத போராட்டம் தமிழ் மக்களை விரும்பியோ விரும்பாமலே. இராணுவ பதிலடி விதியின் தாக்கத்திற்கு உட்புகுத்தியது.

தமிழர் ஆயுத போராட்டம், தமிழர் விரும்பிய ஒன்றல்ல அது வெறுமனே அரச படைகளினால் தமிழர் மீது நிர்ப்பந்திக்கப்பட்ட ஒன்றென்ற வாதம் எல்லோருக்கும் தெரிந்த ஒன்றே. இவ்வாதத்தில் பல உண்மைகள் இருந்தன. அதேவேளை இந் நாணயத்திற்கு ஓர் மறுபக்கமும் இருந்தது. அதாவது தமிழர் அரசியலை, இராணுவ மயமாக்க விரும்பிய பல யுத்தப்பிரியர்களும் எம்மிடம் இருந்தனர். உதாரணமாக தமிழர் ஆயுத போராட்டத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவர், தனது இளம் பராய விருப்புக்களைப் பற்றிக் கூறும் போது, தான் பள்ளிச் சிறுவனாக இருந்தபோது ஏனைய சிறுவர்களையும் சேர்த்து இராணுவ விளையாட்டுக்களில் ஈடுபட்டதாகக் கூறினார். காட்டிலுள்ள மரங்களும், செடிகொடிகளும் தனது உடைகளென பாராட்டி நிற்கும் இத்தலைவர், இராணுவ விழுமியங்களையும் அதன் வாழ்கை முறையையும் சாதாரண பொது மக்கள் வாழ்வில் முதன்மைப்படுத்துவது மிகமுக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். இவ்வாறாக, தனி மனிதர்களின் சிறு பராய விருப்புக்களும் இன்றைய தமிழர் ஆயுத போராட்டத்தை தீர்மானித்திருந்தன. இவ்வாறான யுத்தப்பிரியர்களின் தனிமனித இலட்சிய அபிலாஷைகள், தமிழர் அரசியல் அபில ாஷைகளுடன் இணைப்பதில் சாதனக் கவிதைகள் பெரும் பங்கைச் செலுத்தின.

நாங்களும் அவர்களும் எனும் போர் சூத்திரம் அல்லது இராணுவ உலகப்பார்வை, தமிழ்சமூகத்தில் நீண்டகாலமாக சாதனக் கவிதைகளால் வளர்க்கப்பட்டது ஓர் துரதிஷ்டமான விடயம். இவை ஈழப்போராட்டத்தை, ஆயுத போராட்டத்துடன் இணைத்து மக்களைத் தயார்ப்படுத்துவதிலும், தமிழ்ச்சமூகத்தை இராணுவ மயப்படுத்துவதிலும், கூடவே பயங்கரவாத அரசியலை வளர்ப்பதிலும், நியாயப்படுத்துவதிலும் பெரும் பங்கினைச் செலுத்தின. இவ்வாறான சக்திமிக்க இக்கலைப்படைப்புக்கள் குறித்து பொதுமக்கள் அவதானமாக இல்லாதபோது, அவற்றின் சமூக அபாயங்கள் பற்றி கவலைகள் கொள்ளாதபோது, அதனால் சமூக, கலாச்சார, அரசியல் விபத்துக்களும், அவற்றால் பல நிவர்த்தி செய்ய முடியாத இழப்புக்களும் தவிர்க்க முடியாதவையே. இன்று எமது சமூகத்தில் நடக்கும் அனர்த்தங்களும் அழிவுகளும் விதியல்ல. மாறாக அவை விபத்துக்களே. இவ்விபத்துக்கள், தற்செயலாக இடம் பெற்றவை அல்ல. அவை கணக்கிடப்பட்டுச் செய்யப்பட்டவை.

இலவசத்தொலைபேசிச்
செய்திச்சேவை
703-5690


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்டுரை



# தமிழ் இலக்கியம் காட்டும் நட்பும் புலம் பெயர்ந்த தமிழர்களும்

அழ. ராம்மோகன்

தமிழனுக்கு புலம் பெயர்தல் என்பது இன்று நேற்று நடந்து வரும் ஒரு நிகழ்ச்சி அல்ல. வரலாறு காலந்தொட்டே தொடர்ந்து நடந்து வரும் ஒரு நிகழ்ச்சி. பன்னெடுங்காலம் முன் குமரிக்கண்டத்தில் தொடங்கி கடல் கொண்டதால் தமிழர்கள் இரு தடவை புலம் பெயர்ந்து இந்தியத் துணைக் கண்டத்திற்குச் சென்று இருக்கிறார்கள். அதில் தமிழ்ச் சிந்தனையாளர்களின் பங்கும் படைப்பாளர்களின் பங்கும் பெரிது.

மொழி என்பது பலருக்கு ஒரு சமுதாயமாக வாழ, சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ள, உதவும் ஒரு கருவி. அந்தச்சமுதாயத்திற்கென ஒரு பண்பாடும் நாகரீக முதிர்ச்சியும் வளர வளர மொழியும் வளர்கிறது. இலக்கியம் படைக்கப்படுகிறது. இலக்கணம் வகுக்கப்படுகிறது. இந்தச் சிறந்த பண்பாட்டு நாகரீக முதிர்ச்சி மலர்வதற்கு எது அடிப்படை?. அதில் வெற்றி கண்ட ஒரு சமுதாய மக்கள், குடும்பம் சுற்றம் என்ற எல்லைக்குள் தங்களுக்குள்ளும், குடும்பம் சுற்றம் என்ற எல்லையைத் தாண்டி மற்றவர்களோடும் இணைந்து வாழ, எப்படித் தங்களைத் தயார் படுத்திக் கொண்டார்கள், அதற்குத் தேவையான மனித நேய ஒருமைப்பாட்டை வெளியிட எதைத் துணைக்கு எடுத்துக்கொண்டார்கள் என்று தேடிப்பார்த்தால் அது நட்பு என்ற உறவாய்த் தான் இருக்கும். அந்த நட்பின் அடிப்படை இலக்கண இலக்கியங்களை முறைப்படுத்தி வரம்பிட்டு காப்பதில் எந்தச் சமுதாயம் இன்று ஒரு ஒப்பற்ற நாகரீகப் பண்பாட்டு வளர்ச்சியை அடைந்து இருக்கும். நமது தமிழ் இலக்கியங்கள் அதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

நட்பே உலகிற்கு ஆதாரம். ஒரு மனித உயிர் பிறப்பு எடுக்கும் பொழுது, அதற்கு பாலூட்டும் தாயோடு நட்பு. அரவணைத்துக் கொள்ளும் எல்லோருடனும் முகம் மலரச் சிரிக்கும் நட்பு. குழந்தையாகி விளையாடும் பொழுது, குடும்பம் என்ற வட்டத்தை விட்டு ஓட உதவும் சிறுவர்களது நட்பு. பள்ளி செல்லும் பொழுது வழிகாட்டும் ஆசிரியரது நட்பு. அதுவே ஒருவனுக்கு ஒருத்தி என்று கனிந்தால் காதல் என்ற நட்பு. பொருளீட்டும் உலகில் பிறரோடு வேலை செய்யும் பொழுது ஏற்படும் மற்றவர்களது நட்பு.

நட்பு என்பது இயற்கையின் படைப்புக்களில் எல்லாம் மிக உன்னதமானது. நட்பு என்ற உறவு மொட்டுப் போல் அரும்பி, பூவாக மலர்ந்து, காயாகி, கனியாகக் கனிந்து, முடிவிலே பழுத்து மண்ணோடு முத்தமிடும் காப்பியம். எந்தச் செடிக்கு மொட்டாக வேண்டும் என்று தேர்ந்து எடுப்பதற்கு எப்படி மொட்டுக்கு உரிமை இல்லையோ அதுபோல பிறக்கின்ற உயிருக்கு குழந்தையின் வடிவம் கொடுக்கும் பெற்றோரைத் தேர்ந்து எடுக்கும் உரிமை இல்லை. காற்றோடும் மழையோடும் கதிரவனின் ஒளியோடும் உறவாடுவதே மொட்டு உலகோடு ஏற்படுத்திக்கொள்ளும் முதல் உறவு. குழந்தையும் அதுபோல மற்றவர்கள் நீட்டும் நேசக்கரங்களில் தான் தனது முதல் உறவை தொடங்குகிறது. சிறுவர் சிறுமியர் பூப்போல இளமையின் தனித்தன்மை மலர வளர்ந்து, பூக்கள் வண்டுகளை வரவேற்பது போல பலரை நண்பர்களாக, தன்னோடு நட்புறவு கொள்ள உறவாட அழைக்கிறார்கள். ஒரு வண்டின் நட்பினால் கருவுண்டு காயாகும் பூப்போல பருவ நங்கையும் நம்பியும் தங்களது முழுமை பெற்ற நிலைமையை மற்றொரு பரிமாணத்தில் காட்டுகிறார்கள். இங்கே தான் தங்களுக்கிடையே உள்ள நட்பை இன்னும் பலரோடும் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுகிறது. காய் கனிய காலம் தேவை. அதுபோல பலரோடும் உறவு கொள்ளும் நட்பு பக்குவம் அடைகிறது. வள்ளுவர் கூறும் உரிமை கொண்டாடும் பழைமை என்ற நட்பு வலுப்பெறுகிறது. வள்ளுவர் கூறியவாறு நட்பு ஆராயப்படுகிறது. தீய நட்பு என்றும் கூடா நட்பு என்றும் விலக்கப்படுகிறது. செய்நன்றி அறிதலின் மகத்துவம் உணரப்படுகிறது. கனிந்த கனி பழுத்து தானே விழுந்து மண்ணை முத்தமிடுவது போல, பக்குவப்பட்ட நட்பு தன்னை இழந்து நண்பருக்கு பயன் விளைவிக்கும் அருளாக இறுதியில் சங்கமிக்கிறது. இன மானத்திற்காகவும் மற்றவர்களது அடிப்படை உரிமைகளுக்காகவும் நலத்திற்காகவும் விலை மதிப்பு இல்லா தன் உயிரையே அர்ப்பணிக்கும் போராளிகளின் நட்பு இந்தச் சங்கமத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு.

தனி மனிதன், சமுதாயத்தோடு உறவாட நட்பு துணை செய்கிறது. அந்தத் தனி மனிதனுக்கு ஒரு தாய் ஒரு தந்தை, வாழ்க்கைக்கு ஒருத்தி, வாழ்வதற்கு ஒரு நாடு, ஆன்மீகப் பிணைப்பிற்கு ஒரு கடவுள், நெருங்கி வாழ ஒரு சுற்றம், தன்னை இனம் கண்டு கொள்ள ஒரு இனம், இவ்வாறாக ஒன்மையில் உறவு காணும் ஒருவனுக்கு, உலகளாவிய அளவில், மனித நேய ஒருமைப்பாட்டைக் காணும்படி பன்மையில் உறவு கொள்ள உதவுவது நட்பு. இந்தக் கேண்மையில் பிறந்தது தான் சங்ககாலத் தமிழர் கணியன் பூங்குன்றனார் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்று அன்று விடுத்த அறைகூவல்.

யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற நட்பின் ஒப்பற்ற கணிப்பு தமிழ் இலக்கியம் காட்டிய நட்பு என்ற மாளிகையின் நுழைவாயில். இது வாழும் இலக்கியத்தின் நட்பு மாளிகை. உள்ளே பல தமிழ் இலக்கியக் கர்த்தாக்கள், படைப்பாளிகள் இந்த நட்பு மாளிகையில் எண்ணற்ற அறைகள். எண்ணற்ற படைப்பாளிகள். எல்லாவற்றையும் கண்டு கேட்டு வருவது இயலாது. முடிந்த வரை அழியாப்புகழ் பெற்ற ஒரு சில தமிழ் இலக்கிய வேந்தர்களைப் பார்த்து விட்டு வந்து விடுவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


எல்லை இல்லாத உலகத்தையே ஊராக்கி உலகத்து மாந்தர்கள் யாவரையும் கேளிர் அல்லது நண்பர்கள் என்று பிரமாண்டமான நுழைவாயிலைத்தாண்டி போகிறோம்.

அதோ பாருங்கள். பெரிய புராணம் என்ற சைவ நூலை சேக்கிழார் படைக்கிறார். அவர் பாடும் முதல் பாட்டிலே முதல் அடியிலே "உலகெல்லாம் உணர்ந்து ஓதர்க்கரியவன்" என்ற பாட்டின் ஒலி நமக்குக் கேட்கிறது. அதோ! அங்கே கம்பராமாயணம் என்ற வைணவ நூலை கம்பர் இயற்றுகிறார். "உலகம் யாவையும் தாமுளவாக்கலும்" என்று தொடங்குவது நம் காதுகளுக்கு எட்டுகிறது. இன்னும் சிறிது உள்ளே செல்லுகிறோம். இலக்கணநூலாம் நம்பியகப் பொருள் ஆசிரியர் தன் முதல் பாட்டிலே முதல் அடியிலே "மலர்தலை உலகத்து" என்று பாட ஆரம்பிப்பது நமது காதில் விழுகிறது. இன்னும் நுழைந்து போகிறோம். சங்க நூலாம் பத்துப்பாட்டு முதற்பாட்டு திருமுருகாற்றுப் படை. முதல் பாட்டிலே முதல் அடியிலே முதற் சொல்லாக "உலகம் உவப்ப வலனேர்ப்ப திரிதரு" என்று ஆரம்பிப்பதைப் பார்க்கிறோம். அதோ அங்கு செல்வோம். ஆசிரியர் இளங்கோ அடிகள் என்ன எழுதிக்கொண்டு இருக்கிறார் என்று பார்ப்போம்.

ஐம்பெருங்காப்பியமான தனது சிலப்பதிகார முதல் பாட்டில் முதல் அடியில் "அங்கண் உலகளித்தலால் திங்களைப் போற்றுதும்" என்று பாடக் கேட்கிறோம். அதோ ஔவைப் பாட்டி தென்படுகிறார். அவர் "ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ உலகத்தீர் மாநிலத்தீர்" என்று கேட்பது தெரிகிறது. தமிழ்ப் பெரும் புலவனாம் கபிலர் ஏதோ பெருத்த சிந்தனையில் இருப்பது தெரிகிறது. அவர் தாம் செய்கிற அகவலுக்கு முதற் பாடலிலே "உலகத்தீரே உலகத்தீரே மனிதனுக்கு வயது நூறல்லதில்லை" என விளக்கம் கேட்கிறோம். அது சரி வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு என்று தமிழர் அனைவரையும் கூட்டாளியாக்கிச் சொன்னானே பாரதி, அந்த வள்ளுவரைப் பார்க்காமல் போக முடியுமா?. எப்போதும் போல பெருத்த சிந்தனையில் மூழ்கி இருக்கிறார். பக்கத்திலே திருக்குறள் தென்படுகிறது. அதன் முதல் அதிகாரத்தில் முதல் குறளில் என்ன தான் எழுதி இருப்பார் என அறிய ஆவல் தோன்றுகிறது. "ஆதி பகவன் முதற்றே உலகு" என்று உலகை முன் வைத்துத் திருக்குறள் விரிகிறது காண்கிறோம். அவரது சிந்தனைக்குத் தொய்வு ஏற்படா வண்ணம் அங்கிருந்து நகர்கிறோம்.

வெகு தூரம் சென்று விட்டோம். களைப்பாறிய பின் திரும்பவும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற நுழைவாயிலுக்கு வர பயணத்தைத் தொடருகிறோம். தமிழ் இலக்கிய படைப்பாளிகளின் இந்த உலகளாவிய பார்வை, பொதுநோக்கோடு, நட்புறவு, எவ்வாறு தனி மனித வாழ்வில் அடங்கி ஒடுங்குகிறது என வியக்கின்றோம். அதற்கு பதில் அளிப்பது போல் அதோ பாருங்கள்!, தமிழ் வேந்தன் அதிகமான் கிடைத்தற்கரிய நெல்லிக் கனியை தான் உண்ணாமல் ஔவையாருக்கு அளிக்கும் சொல்லோவியத்தை காண்கிறோம். சற்று தள்ளி நடக்கிறோம். அங்கே யார் மயிலுக்கு போர்வை போர்த்துகிறார்?. பேகனா? அனுபவித்து நடை போடுகிறோம். அதோ! யார்? வேள் பாரியா? தவழக்கொம்பு இல்லாமல் தவிக்கும் முல்லைக் கொடிக்கு தனது தேரையே தந்து நடந்து வரும் பறம்பு நாட்டு மன்னன் வேள் பாரியை வியப்புடன் பார்த்துக் கொண்டே செல்கிறோம். அதோ! கோவூர் கிழார் நட்பின் உரிமையுடன் மன்னனுக்கு இடித்துரைத்து பகை மன்னனின் இரு குழந்தைகளைக் காப்பாற்றும் ஒப்பற்ற காட்சியைப் பார்த்து பெருமை அடைகிறோம். அதோ! பிசிராந்தையார் தான் இதுவரை சந்திக்காத ஆனால் ஒத்த உணர்ச்சியால் நட்பு செலுத்தி வந்த ஒரு தமிழ் மன்னன் இறந்த செய்தி கேட்டு தானும் வடக்கிருந்து உயிர் விட்டுக்கொண்டு இருக்கிறாரே! புணர்ச்சி பழகுதல் வேண்டா ஒத்த உணர்ச்சி தான் நட்பாம் கிழமை தரும் என்ற வள்ளுவர் வாக்கு நினைவுக்கு வருகிறது. விட்டுச்செல்ல மனமில்லாமல் நுழைவாயிலுக்கு அருகில் வந்து விட்டோம். அது யார்? இரு பெரும் கர்ம வீரர்கள்! பெரியாரும் குன்றக்குடி அடிகளாருமா? இருவரும் இருவேறு நிலைகளில் இருந்து தொண்டு செய்தாலும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நட்புக்கு இலக்கணமாக இருக்கக் காண்கிறோமே? பொது நலம் வேண்டி தன் நலம் நெகிழ்ந்த தூய நட்பு அல்லவா?

தமிழ் இலக்கிய மாளிகைச் சுற்றுலாவிலே நாம் தெரிந்து கொண்டது என்ன? தமிழ் இலக்கிய படைப்பாளிகள் குறுகிய நாட்டிலே இருந்து கொண்டு அவரவர் செய்த இலக்கிய இலக்கண நூல்கள் உலக மக்களை நோக்கிச் செய்தவை என்று அறிகிறோம். இது தான் தமிழ் பண்பு. தமிழருடைய பண்பும் ஆகும். தமிழ் இலக்கியங்கள் காட்டும் இந்த உலகளாவிய நட்பினை தனி மனித வாழ்க்கைக்கு இலக்கணமாக ஒழுக்க சீலர் வள்ளுவர் தன் வாய்ச்சொல்லாக குறள்கள் மூலம் எவ்வாறு நமக்கு ஊன்றுகோல் போல தருகிறார் என்று பார்ப்போம். நட்புக்கென ஒரு சொல் ஓவியமே படைத்து இருக்கிறார் வள்ளுவர். நட்டல், கேண்மை என்ற நட்பை முதலில் விளக்கி, பின் அதனை ஆராய்ந்து, அதைப்பழுக்க வைத்து, உரிமை கொண்டாடும் நட்பாக பழைமை எனப்பெயரிட்டு, அதற்கு பிறகு தீய நட்பு என்றும் கூடா என்றும் அவைகளை விலக்கத்தக்க நட்பாக கூறி, இறுதியில் நட்பினை எவ்வாறு பாராட்டி போற்ற வேண்டும் என்று செய் நன்றி அறிதல் குறட்பாக்கள் மூலமாக முடித்திருக்கிறார். 6 அதிகாரங்கள். 60 குறள்கள் ஒவ்வொரு குறளும் ஒரு வண்ணம். இந்த 60 வண்ணங்களைக் குழைத்துத் தீட்டிய சொல்லோவியம் தான் தமிழ் இலக்கியத்தில் வள்ளுவர் வகுத்த நட்பு இலக்கணம். சுருங்க சொல்லுவதற்கு பெயர் போன வள்ளுவருக்கு உலக வாழ்வை எவ்வாறு வாழ வேண்டும் எனச்சொல்ல 1330 குறள்கள் வேண்டி இருந்தது. ஆனால் அதில் ஒரு அங்கமான நட்பு என்ற பொருளைச் சொல்ல மொத்தமாக திருக்குறளில் 4.5 சதவிகிதம் தேவைப்பட்டது. அதாவது 22 குறள்களுக்கு 1 குறள் விகிதம் நட்பு பற்றி விளக்கியுள்ளார்.

நட்பைப்பற்றிய அந்தச் சொல் ஓவியத்தின் முதற் பொருள் இந்த உலகமும் அதில் ஒரு தனி மனிதன் .வாழ்கின்ற காலமும். அதன் கருப் பொருள் அந்த தனிமனிதன் தேர்ந்து எடுக்கும் மனிதர்களின் நட்பும் அதை விளக்க எடுத்தாளப்படும் உவமைகளும். அந்த நட்பாகிய உறவில் அவனிடமும் அவனது நண்பர்களிடமும் எதிர்பார்க்கப்படுகின்ற அகவாழ்வு இயல்புகள் தான் உரிப்பொருள். இந்தக்காட்சியைத் தீட்டுகின்ற வள்ளுவர் எண்ணத்தால் உலகளாவிய அளவில் புலம் பெயர்ந்தவர். ஆனால் அவர் தமிழர். தமிழ் நாட்டில் பிறந்தவர். தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர். இருப்பினும் திருக்குறளில் தமிழையும், தமிழ் நாட்டையும், தமிழ் இனத்தையும் பற்றி கூறவில்லை. தமிழ் பண்பாட்டு நாகரீக முதிர்ச்சியை முற்றிலும் அறிந்து ஆராய்ந்ததின் வெளிப்பாடே அவரது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வள்ளுவம். உலகமே அவரது நாடு. உலக மக்கள் அவரது மக்கள். அவர்கள் வாழ வழி வகுப்பதே அவரது கருத்துக்கள். இது எவ்வாறு அன்று முடிந்தது?. எண்ணத்தால் புலம் பெயர்ந்ததால் அவருக்கு இது எளிதாக ஆயிற்று. கணியன் பூங்குன்றன் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று அன்று முழங்கிய முழக்கத்திற்கு தனது 60 குறட்பாக்களால் ஒரு விரிவுரையையே தந்துள்ளார் வள்ளுவர். அன்று அவர் எண்ணத்தால் புலம் பெயர்ந்து எழுதிய நட்பின் விளக்கத்தை இன்று உடலால் புலம் பெயர்ந்த நாம் கவனமாகக் கடைப்பிடித்தால் நாம் எதனை வேண்டுமானாலும் எய்தலாம். இன்று 7 கோடித் தமிழர்கள். நீங்களும் நானும் உட்பட. எவ்வாறு 300 கோடி மக்களோடு இணைந்து ஒரே சமுதாயமாக நட்புடன் வாழவேண்டும் என்பதையே விளக்குகின்றன நட்பு பற்றிய குறள்கள்.

நட்புப்பற்றி பொதுவாக சில கருத்துக்களை நம் முன் வைக்கிறார். நட்பு என்றால் என்ன என்ற கேள்விக்கு விடை கூறுவது போல. நட்பு என்பது செயற்கரிய செயல் அதுவே செய்யும் தொழிலுக்கு காப்பு என்றும். 'அறிவுடையார் நட்பு வளர்பிறை அறிவில்லார் நட்பு தேய்பிறை என்றும். பழகப் பழகப் பண்புடையாரது நட்பு நவில் தொறும் நூல் நயம் போல என்றும். சிரித்து மகிழ அல்ல நட்பு நெறி கடந்து செல்லும் பொழுது இடித்தல் நட்பு என்றும். நட்பிற்கு தொட்டுப்பழகுதல் தேவையில்லை புலம் பெயர்ந்து இருப்பினும் ஒத்த உணர்ச்சி தான் நட்பாம் உரிமை தரும் என்றும். முகம் மலர நட்புக் கொள்வது நட்பு அல்ல் நெஞ்சம் மலர நட்பு செய்வது தான் நட்பு என்றும். அழிவிலிருந்து நீக்கி நல்ல வழியில் நடக்கச் செய்வது தான் நட்பு என்றும். ஆடை இழந்தவன் கை போல ஆங்கே இடுக்கண் கழைவதாம் நட்பு என்றும். நட்பு சுமைதாங்கி போல வேறுபடுதல் இல்லாமல் ஊன்றி தாங்கி நிற்க வேண்டும் என்றும். பறைசாற்றும் நட்பு சிறப்பு இழந்து விடும் என்றும். கச்சிதமாக நட்பின் எல்லைகளை நட்டுச் செல்லுகிறார்.

நட்பினால் நண்பன் எதைச் சுதந்திரமாக ஒருவனுக்குச் செய்ய விரும்புகிறானோ அதை குடும்பத்தோடு இணைந்த சுற்றத்தார் அவனுக்குச் செய்ய கடமைப்பட்டுள்ளார்கள். நண்பன் நட்பினால் ஏற்படும் உரிமைகளை அவனிடத்திலிருந்து சம்பாதித்து கொள்கிறான். அதே உரிமைகள் குடும்பம் என்ற அமைப்பில் கடமைகள் ஆகி விடுகின்றன. குடும்பத்தையும் சுற்றத்தையும் ஒருவன் தேர்ந்து எடுப்பதில்லை. நண்பர்கள் தேர்ந்து எடுக்கப்படுகிறார்கள். நண்பர்களை தேர்ந்து எடுக்கும் இந்தச் சுதந்திரத்தன்மையே நட்பின் சக்தியும் பலவீனமுமாகும். சுதந்திரம் எந்தத் துறையிலும் ஓரளவு பாதுகாப்பையும். சீரான எதிர்பார்ப்புக்களையும் பறித்துக்கொண்டு விடுகிறது. இத்தகைய ஒரு நிச்சயமில்லாத சூழ்நிலையில் இயங்கும் நட்பு ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்க வேண்டிய ஒரு மனித இயல்பு.

உங்கள் நண்பரை ஆராய்ந்த பின் நட்பு கொண்டீர்களா? இல்லை என்றால் இந்த அவசர நட்பால் கேடு தான் விளையும். அதோடு மட்டுமல்ல ஆராய்ந்து ஆராய்ந்து கொள்வது தான் கேண்மை என்கிறார். நட்பாராய்ச்சி கூறவில்லையோ என நினைத்து அதற்காக "கூடா நட்பு" என்று ஒரு தனி அதிகாரத்தையே வகுத்து விடுகிறார் வள்ளுவர். அதிலே அகத்தே நட்பு இல்லாதவரை. தாங்குவது போல இருந்து பிறர் வெட்ட இடம் கொடுக்கும் பட்டடை (ANVIL) என்கிறார். சொல்லாலே மட்டும் வணங்கும் இயல்பை சொல்வணக்கம் என்று குறிப்பிட்டு அது வளைந்த வில்லின் தாக்குவதற்கான முயற்சி அதாவது வில்வணக்கம் என்கிறார் அதோடு மட்டுமல்ல இப்படிப்பட்ட நண்பர்களை கூடா நட்பு என்று சொல்லி அவர்களை அஞ்சுதல் வேண்டும் என்கிறார். இதை விட நட்புக்கு விளக்கம் சொல்லியவர் இந்த உலகில் யார்? வள்ளுவருக்கு தமிழ் இனம் நன்றி கூற கடமைப்பட்டு இருக்கிறது.

இதுவரை தமிழ் இலக்கியங்களும் குறிப்பாக வள்ளுவரும் நட்பு பற்றிய சமைத்த சொல் ஓவியங்களைக் கண்டோம். நேற்றைய தமிழனின் தனி முத்திரையையும் உலகளாவிய கண்ணோட்டத்தையும் கோடி காட்டினேன். மானிட ரீதியில் பார்க்கும்பொழுது மனித இனம் மொழிக் குடும்பங்களாக இயங்குகிறது. ஒவ்வொரு மொழிக் குடும்பமும். மனித நேய உணர்வுகள் செழித்தோங்க நட்பு என்ற உறவையே எல்லோரிடத்திலும் மேன்மேலும் விரிந்து பரவ வழி கோலுகிறது. அப்படி நட்பு மலரும் பொழுது ஒவ்வொரு சமுதாயமும் மொழிக்குடும்பம் என்ற அளவில் ஒரு சில எழுதா விதிகளை ஆவணங்களாக ஏற்படுத்துகிறது. உலகில் பெரும்பாலும் இருவருக்கிடையே எந்தவித சம்பிரதாயமும் சடங்கும் இன்றி பிறந்து இறந்து இந்த நட்பு. சில முறைக்குடும்பங்களில் மொழிப்படுத்தப்பட்டு கொண்டாடப் படுகிறது. மேற்கு ஜேர்மனியில் "டூசன்" என்ற சடங்கு இருவரின் நட்பை முறைப்படுத்துகிறது. டூசன் என்றால் ஜேர்மன் மொழியில் உறவு முறையில் மாற்றம் என்று பெயர். அந்தச்சடங்கில் இருவரும் கைகள் பின்னக்கோத்து. கோப்பைகளில் மதுவேந்தி. நெருங்கி வந்து என்றும் அழியாத சகோதர உறவு என் உறுதி மொழி கூறி மது அருந்துவார்கள். அதற்குப்பின் நீங்கள் என்ற உறவுமுறை மாறி நீ என மலரும். காமரூன் என்ற நாட்டில் பங்கவா குடியில். பெற்றோர்கள் தங்கள் குழந்தைக்கு முன்பின் தெரியாத மற்றொரு குழந்தையை நண்பனாக வலிய அறிமுகப்படுத்துவார்கள். அதன்பின் அந்த பின் அந்த இரு குழந்தைகளும் வாழ்நாள் முழுதும் ஒருவருக்கு ஒருவர் துணையாக நண்பனாக வலிய அறிமுகப்படுத்துவார்கள். அதன் பின் அந்த இரு குழந்தைகளும் வாழ்நாள் முழுதும் ஒருவருக்கு ஒருவர் துணையாக நண்பனாக விளங்கக் கடமைப்பட்டவர்கள். எந்த நண்பன் உன்னைப் புரிந்து கொள்கிறானோ அவனே உன்னை உண்டாக்குகிறான் என்று கூறினார் அதிலும் துன்பம் வந்த காலத்தில் உறுதுணையாக உதவியவர்களின் நட்பை விட்டு விடாதீர்கள் என்றும். உங்கள் துன்பத்தைப் போக்கிய நட்பை இனிவரும் 7 பிறவிகளிலும் நீங்கள் போற்ற வேண்டும் என்றும். நண்பர் செய்த நன்மையை மறப்பது அறம் அல்ல் ஆனால் அவர் செய்த தீமையை அப்பொழுதே மறப்பது அறம் என்றும். நன்றி மறந்தவருக்கு உய்வே இல்லை என்றும். சொல்லி நட்பிற்கோர் உன்னதமான இலக்கணம் சமைத்து விடுகிறார்.

பிறந்து நீண்ட நாள் உறவாடி. நெடுநாள் கனிந்து வளர்ந்த நட்பை. வள்ளுவர். பழைமை (INTIMACY) என்று போற்றி அதற்காக ஒரு அதிகாரத்தையே படைத்து விடுகிறார். நட்பின் அடிப்படையில் உரிமையோடு செய்யும் செயலை "கிழமை" என்று கூறுகிறார். அந்தக் கிழமையை அதாவது அந்த உரிமையோடு செய்யும் செயலை கீழ்ப்படுத்தாது ஏற்கும் நட்பே "பழைமை" எனும் நட்பு என்று அழகு படச்சொல்கிறார். நண்பருடைய உரிமைச் செயலே நட்பின் உறுப்பு ஆகும் என்றும் அதற்கு உடன்படுவதே நல்ல நண்பர்களின் கடன் என்றும். நண்பர்கள் தகாதன செய்தால். அறியாமலோ அல்லது மிகுந்த உரிமையாலோ செய்தவை என்று கொள்ள வேண்டும் என்றும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அத்தகைய பழையார்களது பண்பினை பகைவரும் விரும்புவர் என்றும் கூறி நட்பின் உச்ச நிலைமையைச் சுட்டிக் காட்டுகிறார்.

தீய நட்பு என்று வள்ளுவர் கூறுமிடத்து எது வேண்டாம் என் வள்ளுவர் கூறுகிறார் பாருங்கள். அதனை வைத்து உங்கள் நண்பர் குழாத்தை எடைபோட்டுப் பாருங்கள். அவர் அன்பொழுகப்பழகும் பண்பு இல்லாத— வரா? தமக்கு பயன் உள்ள பொழுது நட்பு செய்து விலகிவிடுபவரா? போர்க்களத்திலே தள்ளி விட்டு ஓடும் அறிவில்லாத குதிரை போல உங்கள் நண்பரின் உறவு இருக்கிறதா? அகத்தில் நட்பில்லாமல் புறத்தில் நகைத்திடும் நட்புடையவரா? சொல் வேறாகவும் செயல் வேறாகவும் உடையவரா? இருப்பின் அவரது நட்பை விலக்குங்கள் என் எச்சரிக்கை விடுக்கிறார்.

நட்பைப்பற்றி எல்லாம் சொல்லி விட்டோம் என்று மகிழ்ந்த வள்ளுவருக்கு ஒரு ஏக்கம். அகத்திலே நட்பில்லாமல் புறத்தே மட்டும் நட்புக் காட்டும் மாந்தரை நினைக்கிறார். அந்த நட்பை ஏற்க வேண்டாம் என்று இன்னும் அழுத்தமாகச் செய்வதற்கு ஒரு வரவு செலவு ஒரு கணக்குப் பட்டியலையே தந்து விடுகிறார். அவரது வரவுப்பட்டியலைப் பாருங்கள்! உங்கள் நண்பரிடம் குணம் இருக்கிறதா? நல்ல குடும்பத்தவரா? அவரிடம் உள்ள குற்றங்கள் எப்படிப்பட்டவை? அவரைச் சார்ந்தவர்கள் எப்படி? தனக்கு வரக்கூடிய பழிக்கு நாணுபவரா? நன்மை இல்லாத செயலைக் கண்டபோது அழ அழச் சொல்லி இடித்து உரைப்பவரா? மாசில்லா நட்பு உடையவரா? ஒத்த பண்பு உள்ளவரா? துன்பம் வரும்போது கை விடாதவரா? அறிவுடையவரா? இவை எல்லாவற்றிலும் தேறிய நண்பரை ஒரு அளவு கோலையும் தருகிறார் வள்ளுவர். உங்களுக்கு வரும் துன்பமே உங்கள் நண்பரை அளக்கும் அளவு கோல் என்பது வள்ளுவர் வாக்கு. இந்தக் கடினமான உளவியல் ஆராய்ச்சியை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் நட்பாராய்தல் என்ற அதிகாரத்தின் மூலம் செய்துள்ளார்.

நட்பு என்பது ஒரு ஆவணம் (CONTRACT). குறைந்தது இருவருக்கிடையே ஏற்படும் எழுதப்படா ஆவணம். அதில் ஒருவர் நீங்கள். மற்றவர் உங்கள் நட்பினால் பிணைக்கப்பட்ட நண்பர். ஆவணம் என்றால் அதில் இருதரப்பாரும் கடைப்பிடிக்க வேண்டிய நியதிகள் இருக்கும். நட்பினால் வழங்கப்படும் உதவிகள், அது எப்பேற்பட்டதாக இருந்தாலும், சில சமயங்களில் நீங்கள் அதை வழங்குவோராகவும், உங்களது நண்பர் அதை பெறுவோராகவும் இருக்கலாம். இன்னொரு முறை இருவரும் இடம் மாற்றிக் கொள்ளவும் நேரிடும். அப்பொழுது நட்பினால் உதவி பெறுவோர் எப்படி அந்த உதவிகளை அளந்து கணிக்க வேண்டும் என்று 10 குறள்களாக செய் நன்றி அறிதல் என்ற தலைப்பில் வள்ளுவர் சொல்லிச் செல்கிறார்.

நட்பினால் செய்த உதவிகளை அளவிட முயலும் வள்ளுவர் கையாளும் உவமை— களைப் பாருங்கள். செய்யாமல் செய்த உதவிக்கு கைமாறு செய்ய இந்த மண்ணும் விண்ணும் போதாதாம். காலத்தினால் செய்த உதவி சிறிது என்றாலும் அது இந்த உலகத்தை விட பெரிதாம். தினை அளவு உதவி செய்தாலும் நீங்கள் அதை பனை அளவாகக் கொள்ள வேண்டுமாம். அதோடு நிற்கவில்லை. நம்மை எல்லாம் தர்ம ரங்கடத்தில் ஆழ்த்தி விடுகிறார் நட்பினால் செய்யப்படும் உதவியின் அளவு அதைப் பெற்றுக்கொள்ளும் உங்களுடைய பண்பைப் பொறுத்ததாம். நட்பை எப்படி போற்ற வேண்டும் என்று கூறுகிறார் பாருங்கள். மாசில்லாத நட்பை மறவற்க் பிரன்ச் மொழி அறிஞர் ரொமேன் ரோலண்ட் நெடு நாளைய நண்பனே சிறந்த முகம் பார்க்கும் கண்ணாடி என்பது ஆங்கில முதுமொழி. நட்புறவில் கோடிக்கணக்கானவர்களை வெற்றி காண வைத்த டேல் கார்னீர்ஜ் என்ற அறிஞரின் கணக்குப்படி உங்கள் மீது மற்றவர்கள் ஈடுபாடு கொள்ள நீங்கள் முயன்றால் அதற்கு 2 வருடம் தேவைப்படும். ஆனால் மற்றவர்கள் மீது நீங்கள் ஈடுபாடு கொள்ள தேவை இரண்டு மாதம் மட்டுமே என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆங்கில வழக்கில் நாட்டைப்பாராட்டி வாழ்த்தும்போது, உண்மையான நட்பை விளக்கிற்கு ஒப்பிட்டு அதன் வெளிச்சம் துன்பமான ராக்காலங்களில் பிரகாசமாக ஒளிரட்டும் என்றும், சோதனைக் காற்றுக்களில் அசையாமல் நின்று எரியட்டும் என்றும் சொல்லுவார்கள். கிரேக்க மேதை அரிஸ்டோடில் நண்பனை இரு உடல்களில் வாழும் ஒரு உயிர் எனக் கூறினார். எல்லா மொழிகளிலும் நட்பைப் பற்றி வர்ணிக்கும் பொழுது பொதுவாக எழுத்தாளப்படும் வார்த்தைகள் இவை தான்—

நம்பிக்கை, மரியாதை, மாசற்றது, பாதுகாப்பு, உறுதுணை, உதவுதல், நீங்காதிருத்தல், தோழமை, மாறாதநிலை, புரிந்துகொள்ளுதல், ஏற்றுக்கொள்ளுதல்.

தமிழ் இலக்கியங்கள் மட்டுமல்லாது பிற மொழி அறிஞர்களும் வெகுவாக பாராட்டும் இந்த நட்பு என்ற உறவில் சரிவே இல்லையா? சராசரி நம்மைப்போன்ற தமிழர்களின் அன்றாட வாழ்க்கையில் நாள் தோறும் சந்திக்கும் நமது நண்பர்களிடம் வெறுக்கத்தக்கவை, மற்றும் விலக்கத்தக்கவை இல்லையா? இன்றைய தமிழர்கள், நேற்றைய தமிழர்கள் காட்டிய நட்பிலக்கியங்களை இன்று வாழ்ந்து காட்ட முயல்கிறார்களா?

நட்பு பற்றி நினைக்கையில், சீரிய குணங்களும், உடைத்து எறியவல்ல ஏளனக் குணங்களும், அன்புக்குக் கட்டுப்பட்டு கீழ்த்தரக் குணங்களும் கலந்து தான் தோன்றுகிறது. இதற்குச் சிறந்த உருவகம் சீசரின் "நீயுமா புரூட்ஸ்" என்ற ஷேக்ஸ்பியரின் வார்த்தைகள். இந்த இக்கட்டான நிலையில் நமக்கு வழி காட்டுவது திருக்குறள் காட்டும் நட்பே. திருக்குறள் மட்டுமே நான் இதுவரை காட்டிய அனைத்து மொழிகளின், தமிழ் உட்பட, நட்பு பற்றிய இலக்கிய இலக்கணங்கள் அனைத்தையும் உள்ளடக்கி நட்பை இன்னும் ஆழமாகத் தோண்டி ஆராய்ந்து அகன் உளவியல் அடிப்படையில் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உதவும் வகையில் விளக்கிச் சொல்கிறது.

நெஞ்சிலே ஈரமில்லாதவன் நட்பு உணர்ச்சி இல்லாதவன். மரத்துப்போனவன். அந்தப்பசுமை தான் நட்பு. அது தான் பண்பட்ட மனிதனின் ஆணிவேர்.

தான் என்ற நிலை நெகிழ்ந்து நாம் என்ற உணர்வு கனிகின்ற நிலை தான் நட்பு. அந்த நாம் ஒரு பெண்ணோடு அல்லது ஆணோடு இணைந்தால் அது காதல் அல்லது அன்பு. அந்த நாம் நமது நாம் அடிப்படை உரிமைகளுக்காக தன் உயிரையே தந்து போராடும் போராளிகளுடன் இணைந்தால் அது அந்த இனத்தின் நாகரீகப் பண்பாட்டு முதிர்ச்சி. அந்த நாம் ஒவ்வொரு உயிரின் கண்ணும் இணைந்தால் அது அருள்.

இந்த ஏணியில் எந்த நிலையில் நாம் இன்று இருக்கிறோம் என்று நாம் ஒவ்வொருவரும் கேட்கப் பழகிக் கொள்ள வேண்டும். விடையை சரி பார்த்துக்கொள்ள வள்ளுவரின் 60 குறள்கள் என்றுமே தயார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்டுரை



# கனடாவிற் தமிழ்க் கல்விபற்றி ஓராசிரியரின் நோக்கு

பொ.கனகசபாபதி

கனடா பெரும்பான்மையான குடியேறிகளைக் கொண்ட நாடு என்பது நாம் எல்லோரும் அறிந்ததே. இந்நாட்டுச் சுதேசிகளைப் பொறுத்த வரையில், அவர்கள் சிறுபான்மையினரே. ஆங்கிலேயர்களும், பிரான்சியர்களுமே இந்நாட்டுப் பெரும்பான்மையினர் என்ற வகையில், ஆங்கிலமும், பிரான்சியமும் இந்நாட்டு அரசுகளும் மொழிகளாகவும் தேசிய மொழிகளாகவும் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. சுதேசிய மொழிகளிலிருந்தும், பிரித்தானியாவினதும் பிரான்சினதும் ஏகாதிபத்திய, குடியேற்ற வல்லாதிக்கத்தின் காரணமாகவே ஆங்கிலமும், பிரான்சியமும் இவ்வந்தஸ்த்தைப் பெற்றுள்ளன. இருந்தாலும் "கனடா" உலகத்துப் பல்வேறு நாடுகளிலிருந்து குடியேறி, பிரஜைகளாகவும் நிரந்தர வாசிகளாகவும், அகதிகளாகவும் வாழ்கின்றவர்களை அதிகமாகக் கொண்ட நாடு என்ற வகையில், இந்நாட்டு அரசியலர்கள் தாராள பெருமனத்துடன், வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு, பல்கலாச்சார வாய்ப்புகளையும் வசதிகளையும் அளிக்கும் வகையில் நாட்டிற்கான ஒரு பல்கலாச்சாரக் கொள்கையை உருவாக்கி அதை நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள். இப்பல்கலாச்சாரத்துவக்கொள்கை இந்நாட்டின் மனித உரிமைச்சாசனத்தின் பிரதிபலிப்பேயாகும்.

இந்நாட்டு சமஷ்டி அதாவது மத்திய அரசின் இப்பல்கலாச்சாரத்துவக்கொள்கை, இந்நாட்டு மாகாண அரசுகளினால் திட்டமிடப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இதற்குத் தேவையான நிதியின் பெரும்பகுதி சமஷ்டி அரசினால் வழங்கப்படுகின்றது. மாகாண அரசுகள் அதிகளவு அதிகாரங்களைக் கொண்டிருப்பதால் சமஷ்டி அரசின் பல்கலாச்சாரக் கொள்கையை நடைமுறைப் படுத்தல், மாகாண அரசுகள் ஒவ்வொன்றையுமே பொறுத்தது. மாகாண அரசுகள் தங்கள் தங்கள் மாகாணங்களிலுள்ள வெவ்வேறு இன மொழி கலாச்சாரக் குழுமக்களின் பருமன்களையும் அவற்றின் இனமொழிக்கலாச்சாரத் தேவைகளையும் அடிப்படையாக வைத்தே, பல்கலாச்சாரத்திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்துகின்றன. இந்நாட்டு நிர்வாகத்தின் எல்லா மட்டங்களிலும் ஜனநாயகம் அதிகளவிற்குத் தொழிற்படுகின்றமையால் மாகாண அரசுக்களின் பல்கலாச்சாரத்திட்டங்கள், ஒவ்வொரு சமூகக் குழுமங்களின் அரசியல் செல்வாக்கையும் பொறுத்தது என்று கூறின் அது பிழையாகாது. அந்த வகையில் இந்நாட்டில் வாழும் பல்வேறு புலப்படு சிறுபான்மையோர் தங்கள் தங்கள் மொழிக்கலாச் சாரங்களை, பிரதான போக்கு மொழி கலை கலாச்சாரங்களுடன் முரண்படாத வகையில், பேணி வளர்ப்பதற்கான அரசியற் சமூகச் சூழல் இந்நாட்டில் நிலவுகின்றதென்பதை நாம் அறிவோம். இந்த வகையில் பல்வேறு சிறுபான்மை இனக்குழுமங்களிடையே, அவைகளின் மொழி கலை கலாச்சார வளர்ச்சிக்காகத் தொழிற்படும் நிறுவனங்கள், இயக்கங்கள், சங்கங்கள் ஆகியவற்றிற்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் வகையில், மாகாண அரசுகளும், அவற்றின் கீழ் தொழிற்படும் பல்வேறு ஆட்சி நிறுவனங்களும், முகத்துவ நிறுவனங்களும், மானிய அடிப்படையில் பண உதவியும், வேறு உதவிகளும் அளித்து வருகின்றன.

## கனடாவின் அநுத்தியோக மொழிகளுக்கான கல்வித்திட்டம்

இருமொழித்துவம், இரு கலாச்சாரத்துவம் பற்றிய கனடிய சமஷ்டி அரசினால் நியமிக்கப்பட்ட அரச ஆணைக் குழுவின் 1969 ஆம் ஆண்டு அறிக்கையில், கனடாவின் பல்வேறு இனமக்களின் கலாச்சார அடையா—ளத்தைப் பேணுவதற்கான அரசின் ஊக்குவிப்பு வலியுறுத்தப் பட்டிருப்பது மல்லாமல், ஆங்கிலம், பிரான்சியம் ஆகிய இரு உத்தியோக மொழிகளைத் தவிர்ந்த, மற்றைய புலப்படு சிறுபான்மை இனமக்களின் மொழிகளின் அதாவது அநுத்தியோக மொழிகளின் கற்கை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கையின் அடிப்படையிற் தான் சமஷ்டி அரசின் பல்கலாச்சாரத்துவக் கொள்கை 1971 இல் அறிமுகஞ் செய்யப்பட்டதுமல்லாமல், அநுத்தியோக மொழிகள் பற்றிய ஆய்வாணைக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. 1976 இல் வெளியிடப்பட்ட இவ்வாணைக்குழுவின் அறிக்கையில் அநுத்தியோக மொழிகளின் போதனை விதந்துரைக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மாகாண அரசுகள் பாரம்பரிய மொழிக்கல்வித்திட்டத்தை அறிமுகஞ்செய்தன.

ஒன்ராரியோ மாகாண அரசின் பாரம்பரிய மொழிக் கல்வித்திட்டமும் தமிழ் மொழிக்கல்வியும் எமது மக்கள் அதிகளவில் வாழும் அதாவது சுமார் எண்பத்தையாயிரம் எமது மக்கள் வாழும் ஒன்ராரியோ மாகாணத்தின் அரசு 1977 இல் பாரம்பரிய மொழிகளுக்கான கல்வித்திட்டத்தை அறிமுகஞ் செய்த பொழுது, மாகாணத்தின் கல்விச்சபைகள், தங்கள் தங்கள் தொடர் கல்வித்திட்டத்தின் கீழ், ஆரம்ப நிலைப் பள்ளி மாணவர்களுக்கென பாரம்பரிய மொழிக் கற்கைநெறி வகுப்புக்களை ஆரம்பித்தன. பாரம்பரிய மொழிக் கல்விக்கான சட்டமூலம் ஒன்று 1989 ஒன்றாறியோ மாகாண நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் மூலம், கல்விக்கான சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதையிட்டு மொழி இன உரிமைகளுக்காக தாயகத்தில் அடிபட்டு வெளியேறி, புலம் பெயர்ந்த நாம் எல்லோரும் பெருமை அடையாமல் இருக்க முடியாது. இன்று ஒன்ராரியோ மாகாணத்தில் சுமார் எழுபது மொழிகளில் ஆரம்ப நிலை பள்ளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாணவர்களுக்கான பாரம்பரிய மொழிக்கல்வி நடைபெறுகின்றதென கல்வி அமைச்சின் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. இவற்றில் எமது தாய் மொழியாகிய தமிழும் ஒன்று. இது எமக்குப் பெருமை தருவதாகும்.

ஒன்ராரியோ மாகாணத்தைப் பொறுத்தவரையில், ஆரம்ப நிலைப்பள்ளி மாணவர்களுக்கான தமிழ் மொழிக் கற்கை நெறி வகுப்பு 1978 இல் நோத்யோர்க் கல்விச் சபையினால் ஆரம்பிக்கப்பட்டதென அறியக்கிடக்கின்றது. இந்தியாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் தொழில் ரீதியாக குடியேறிய தமிழ்ப்பெற்றார்களின் பிள்ளைகளுக்காகவே சில பெற்றாரின் முயற்சியினால், இவ்வகுப்பு ஆரம்பிக்கப்பட்டதென்றும், ஹிந்தி, பஞ்சாபி, குஜராத்தி ஆகிய வட இந்திய மொழிகளுக்கான வகுப்புக்களைத் தொடர்ந்தே தமிழ் வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டதென அறியக்கிடக்கின்றது.

எண்பதுகளில் தாயகத்தில் இடம்பெற்ற இனக்குரோத வன்செயல்களால் பாதிக்கப்பட்ட எமது மக்கள் அகதி நிலைகோரி ஒன்ராரியோ மாகாணத்தில், குறிப்பாக ரொறன்ரோ பெரும்பாகத்தில் அதிகளவில் குடியேறியதைத் தொடர்ந்து, ஆரம்பநிலை பள்ளி மாணவர்களுக்கான தமிழ்மொழி வகுப்புகள் ரொறன்ரோ, ஸ்காபுரோ, எற்றோபிக்கோ, யோக், நோர்த்யோக், கத்தோலிக்க கல்விச் சபைகளாலும் ஆரம்பிக்கப்பட்டு விரிவாக்கம் பெற்றது. ஒன்ராரியோ மாகாணத்து ஆரம்பநிலை தமிழக்கல்வியை கருதுமிடத்து, சென்ற பாடசாலை வருடத்தில் (94—95) 10 கல்விச்சபைகளால் (இவற்றில் 9 ரொறன்ரோ பெரும்பாகத்தைச்சேர்ந்தவை) 34 பாடசாலை நிலையங்களில் சுமார் 2050 எமது ஆரம்பநிலைப்பள்ளி மாணவர்கள் சேர்ந்து படித்தார்கள் என்றும், இவர்களுக்குக் கற்றுக் கொடுக்க சுமார் 80 எமது ஆசிரியர்கள் பகுதிநேர அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்டார்கள் என்றும் அறியக்கிடக்கின்றது. இவ்வகுப்புக்களில் சேர்ந்து படித்த மாணவர்களின் எண்ணிக்கை, இங்கே ஆரம்ப நிலைக் கல்வி பெறும் எமது மாணவர்களின் மொத்த எண்ணிக்கையின் சுமார் 10 வீதமே ஆகும்.

ஆரம்பநிலை பள்ளி மாணவர்களுக்கான பாரம்பரிய மொழிக்கல்வியை தொடர்ந்து, இரண்டாம் நிலை பள்ளி மாணவர்கள் தங்கள் தாய் மொழிகளைக்கற்பதற்கென, பாரம்பரிய மொழிக்கல்வித்திட்டம் ஒன்ராரியோ மாகாண அரசினால் 1990 இல் விரிவு படுத்தப்பட்டு அதற்கான திறமைச்சித்தி வகுப்புக்கள் கல்விச்சபைகளால் தொடர் கல்வித்திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் சென்ற பாடசாலை வருடத்தில், ரொறன்ரோ பெரும்பாகத்திலுள்ள 5 கல்விச்சபைகள் 8 பாடசாலை நிலையங்களில் தமிழ் மொழிக்கான திறமைச் சித்தி வகுப்புக்களை நடாத்தின என்றும், இவ்வகுப்புகளில் சுமார் 375 எமது மாணவர்கள் சேர்ந்து படித்தார்கள் என்றும், இவர்களுக்கு தமிழ் தமிழ் மொழியைக்கற்றுக்கொடுக்க 15 எமது ஆசிரியர்கள் பகுதி நேர அடிப்படையில் வேலைக் கமர்த்தப்பட்டார்கள். இத்திட்டத்தின்கீழ் தமிழ் வகுப்புக்களில் சேர்ந்து படித்த எமது மாணவர்களின் எண்ணிக்கை, இரண்டாம் நிலைக்கல்வி பெறும் எமது மாணவர்களின் மொத்த எண்ணிக்கையின் 5 வீதமேயாகும்.

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, சென்ற 3 பாடசாலை வருடங்களில், தமிழ்மொழிக்கல்விக்கான வகுப்புக்களில் சேர்ந்து படித்த எமது மாணவர்களினதும், தமிழைக் கற்றுக்கொடுக்க வேலைக்கமர்த்தப்பட்ட ஆசிரியர்களினதும் எண்ணிக்கை விபரங்கள் பின்வருமாறு.

1) ஆரம்ப நிலைப்பள்ளி மாணவர், 2) இரண்டாம் நிலைபள்ளி மாணவர்களுக்கான தமிழ் கலைத்திட்டத்தில் சேர்ந்து படித்த மாணவர்கள்

1060 (92—93), 1500 (93—94), 2050 (94—95)
160(92—93), 325(93—94), 375(94—95)

எண்ணிக்கையும் நூற்றுவீதமும்.
8(92—93), 12(93—94), 16(94—95)
2(92—93), 4(93—94), 5(94—95)

வகுப்புக்கள் நடைபெற்ற நிலையங்களின் எண்ணிக்கை.
19(92—93), 26(93—94), 34(94—95)
6(92—93), 9(93—94), 8(94—95)

வகுப்புக்கள் நடாத்திய கல்விச் சபைகளின் எண்ணிக்கை
6(92—93), 10(93—94), 10(94—95)
4(92—93), 5(93—94), 5(94—95)

கற்றுக்கொடுத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை.
52(92—93), 58(93—94), 80(94—95)
8 (92—93), 10(93—94), 8(94—95)

இன்று இப்பாரம்பரிய மொழிக்கல்வித்திட்டம், சர்வதேசிய மொழிக்கல்வித்திட்டமென அழைக்கப் படுகின்றது. இத்திட்டம், ஆரம்பநிலை சர்வதேசிய மொழிக்கல்வித்திட்டமென்றும் அழைக்கப்படும் இரு மட்டங்களில் நடைபெறுகின்றது. ஆரம்பநிலைத் திட்டத்தின் கீழ் தரம் 1 இலிருந்து தரம் 8 வரைக்கான வகுப்புக்கள் அங்க பாடசாலை நிலையங்களில் வார இறுதி நாட்களிலும், சில நிலையங்களில் வாரநாட்களில், வழமையான பாடசாலை நேரத்திற்குப்பின்னரும், ஒருசில நிலையங்களில் பாடசாலை நேரத்திலும் நடைபெற்று வருகின்றன. இரண்டாம் நிலைத்திட்டத்தின் கீழ் தரம் 10, தரம் 11, தரம் 13க்கான வகுப்புக்கள் வார இறுதி நாட்களிலும், வாரநாட்களில் மாலைநேரங்களிலும் நடை பெற்றுவருகின்றன. இத்திட்டத்தின்கீழ் மூன்று திறமைச் சித்திகளை ஒரு மாணவனோ, மாணவியோ பெறலாம். இத்திறமைச்சித்திகள் ஒன்ராரியோ இரண்டாம்நிலைக்கல்வி டிப்ளோமா சான்றிதழைப்பெறுவதற்குத் தேவையான மூன்று பாடத்தகைமைகளாகவும், தரம் 13க்கான திறமைச்சித்தி ஒன்ராரியோ பல்கலைக்கழக பிரவேசத்திற்குத் தேவையான பாடத் தகைமைகளில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இருந்தும் இப்பாடநெறி வகுப்புகளில் சேர்ந்து படிக்க வரும் மாணவர்களின் எண்ணிக்கை அட்டவணையில் காட்டப்பட்டபடி எமக்கு திருப்தியளிப்பதாக இல்லை.

சென்ற பாடசாலை வருடத்தில் (94—95) ரொறன்ரோ கல்விச்சபை தனது தொடர்கல்வித்திட்டத்தின்கீழ் இரு பாடசாலை நிலையங்களில் தமிழ் மொழிக்கான திறமைச்சித்தி பாடநெறி வகுப்புக்களை ஆரம்பிப்பதென தொடர்கல்வி சம்பந்தமான தனது கைநூல் மூலமாக முன்னறிவித்தல் கொடுத்திருந்தும், ஒருநிலையத்தில் போதியளவு மாணவர்கள் தமிழ்ப்பாடத்திற்கு பதிவு செய்யாமையால், அந்நிலையத்தில் ஆரம்பிக்கப்பட இருந்த பாடநெறி வகுப்புக்கள் இறுதியில் ரத்தாகின.

ஸ்காபுரோ கல்விச்சபை தமிழ்மொழிக்கான ஆரம்ப நிலை வகுப்புக்களை எந்தவொரு கல்விச்சபையிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூடிய எண்ணிக்கை (94—95 இல் 525) மாணவர்களுடன் நடாத்திவருகின்றது. ஆனால் இது நாள்வரை தமிழ் மொழிக்கான திறமைச்சித்தி பாடநெறி வகுப்புக்களை அதாவது இரண்டாம் நிலைபள்ளி மாணவர்களுக்கான தமிழ்மொழி வகுப்புக்களை ஆரம்பிக்காதது ஏனோ? இருந்தும் சென்ற வருடம் ஸ்காபுரோ தமிழ் ஆலோசனைச் சபையினர் எடுத்தமுயற்சியின் பலனாக, இம்முறை அதாவது 95—96க்கான பாடசாலை வருடத்தில், கணிசமான எண்ணிக்கை எமது மாணவர்களுக்கும், இரு பாடசாலைகளின் வழமையான பாடவிதானத்தில் தமிழையும் ஒரு பாடமாக சேர்ப்பதென முடிவு செய்து, இது பற்றிய முன்னறிவித்தல் இவ்வருட ஆரம்பத்தில் ஸ்காபுரோ கல்விச்சபையால் செய்யப்பட்டது.

ஆனால் அவற்றில் ஒரு பாடசாலையிற்தான் ஓரளவு மாணவர்கள் தமிழையும் ஒரு பாடமாகக் கற்க பதிவு செய்தமையால், முன்னேற்பாடாக தமிழையும் வேறு பாடங்களையும் கற்பிப்பதற்கென அக்கல்விச்சபையில் பதில் ஆசிரியராகக் கடமை புரிந்த எமது எமது ஆசிரியர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளார். மறறைய பாடசாலையில் தமிழுக்குப் போதியளவு எமது மாணவர்கள் பதியாமையால் அப்பாடசாலையின் பாடவிதானத்தில் இம்முறை ஒரு பாடமாக அரியணை ஏறும் வாய்ப்பை இழக்கின்றதென்றே கூறவேண்டும். அத்துடன் எமது ஆசிரியர் ஒருவரும் ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியத்தானத்தை பெறும் வாய்ப்பையும் இழந்து நிற்கின்றார் என்றே கூறவேண்டும்.

நாம் புலம் பெயர்ந்ததற்கான காரணங்கள் பல இருந்தாலும் அவற்றுக்கெல்லாம் அடிப்படையாயிருந்தது எமது மொழியே. மொழியைச்சொல்லி, இனத்தைச் சொல்லி, மதத்தைச்சொல்லி, அரசியல் கட்சியைச்சொல்லி புலம்பெயர்ந்து வாழும் எமது சமூகம் குறிப்பாக மாணவ சமூகம் மொழியைக்கற்பதற்கான வாய்ப்பு வசதிகள் இருந்தும், தாய்மொழிக் கல்வியைப் புறக்கணிப்பது ஏனோ?

கல்விச் சபைகளின் தாய்மொழிக் கல்வித்திட்டங்களை விட சமூக நிறுவனங்களும் தங்கள் தங்கள் ஆரம்பநிலை நிலைப்பள்ளி மாணவர்களுக்கென தாய்மொழிக்கல்வி வகுப்புக்களை நடாத்திவருகின்றன. மொன்றியல், ஒற்றாவா, எட்மன்ரன், வன்குவர் போன்ற இடங்களிலும் சமயத்துடன் சேர்ந்த தமிழ் வகுப்புக்களும் எமது சமூகத்தவரின் கூட்டு முயற்சியால் நடைபெறுகின்றன என அறியக்கிடக்கின்றது. இருந்தாலும் ஒன்ராறியோ மாகாணத்தில் குறிப்பாக ரொறன்ரோ பெரும்பாகத்திலுள்ள கல்விச்சபைகள் தமிழ் மொழிக்கல்வித்திட்டம் எதையும் நடாத்துவதாக இல்லையென்றே கூறவேண்டும். இதற்கான காரணங்கள்

(1) போதியளவு நம்மக்கள் அப்பகுதிகளில் வாழாமை.

(2) போதியளவு வாழ்ந்தாலும் அரசியல் செல்வாக்கை ஏற்படுத்த முயலாமை.

(3) தாய்மொழி பற்றில்லாமை.

(4) தங்கள் அடையாள முத்திரைகளை பதிக்க விரும்பாமை போன்றவையே.

**கட்டுரை**



# கனடாவில் தமிழ் மொழி வளர்ச்சி மாணவர் பார்வையில்

**அ.அருட்செல்வி**

மொழி என்பதன் வரைவிலக்கணம் யாது? எனக் கேட்கப்பட்டால், மொழி என்பது மனிதர்கள் தமது எண்ணங்களை பரிமாறிக்கொள்கின்ற ஒரு ஊடகமாகும்" என்பதுதான் அதற்குப் பொதுமையானதொரு விடையாக இருக்க முடியும். ஆனால், இது எல்லா மொழிகளுக்கும் பொதுவான, பயன்பாட்டு ரீதியான விளக்கம் மட்டுமே இவற்றை விடவும், மொழி என்பது, தனக்கே உரித்தான தனித் தன்மைகளையும், தான் சார்ந்திருக்கும் இனத்திற்கான தன்னியல்புகளையும் கொண்டதாகவே விளங்குகிறது.

இதனால்தான் ஒவ்வொரு இனமும் தன் தாய்மொழியைத் தனித்துவமாகப்பேணி, தன் இனத்தின் சிறப்பியல்புகளை நிலைநிறுத்தி, தம் அடையாளத்தைப் புலப்படுத்துவதில் முனைப்பாக இருக்கின்றன.

இந்தப் பல்கலாச்சாரம் சார்ந்த புகலிட பூமியில், தம் தாய்மொழி மூலம் தம் அடையாளத்தை நிலை நிறுத்த வேண்டிய தேவை, இன்று ஒவ்வொரு இனத் திற்கும் கட்டாயமாக்கப் பட்டிருக்கின்றது, நம் தமிழ் இனம் உட்பட.

பலமொழி பேசுகின்ற பல்லின மக்கள் இணைந்து வாழுகின்ற இந்தச்சமூகக் கட்டமைப்பில், அம்மக்களை இணைப்பதற்கான, கருத்துப்பரிமாற்ற ஊடகமாகத் திகழ, ஒரு பொதுமொழியின் தேவை, இங்கு அவசியமாகின்றது. அவசியம் கருதி ஏற்பட்ட அந்தப் பொது மொழியின் தேவை, ஏறக்குறைய மக்களின் கருத்துப்பரிமாற்றத்தை பூர்த்தி செய்துவிட, அவர்களுக்கான இன்னொரு மொழியின் தேவை, அது தாய்மொழியாக இருந்தாலும் கூட, அவசியம் இன்றிப் போய்விடுகின்றது. இச்சூழ்நிலையில், ஒரு இனமானது, தன் இனத்தின் மீதான தாய்மொழியின் ஆளுமையை, மெல்ல மெல்ல, இழக்க ஆரம்பிக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இதுவே மொழி ரீதியாக நாம் இந்த மண்ணில் எதிர் நோக்குகின்ற பாரிய பிரச்சனையாகும். இது இங்கு வாழும் தமிழ் சமூகம் சார்ந்த அத்தனை பேருக்கும் பொதுவான பிரச்சனையாக இருந்தாலும், இந்தப்பிரச்சனைக்கு உட்பட்டவர்களாக இருப்பவர்களும், பிரச்சனைக்கான தீர்வு தேவைப்படுபவர்களாக இருப்பவர்களும் நம் இனத்தின் மாணவசமுதாயமே. இந்த இக்கட்டான சூழ்நிலையில் மாணவர் சமூகம், இந்தப் பிரச்சனைகளுக்கு எவ்வாறு முகம் கொடுக்கின்றது என்பதை சற்று நோக்குவோம்.

மொழி ரீதியான இந்தப் பிரச்சனைகளை ஓரளவு தெரிந்து கொண்ட நம் சமூகம், அதற்கான காரணகாரியங்களை ஆழமாக ஆராய்ந்து பார்க்குமுன், தமது சுட்டு விரல்களை அவசர அவசரமாக மாணவ சமுதாயத்தை நோக்கி நீட்டி விடுகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில், இப் பிரச்சனைக் குரியவர்களாக இருப்பவர்கள் என்று கருதலாமே தவிர, "பிரச்சனைகளுக்கு காரணமே மாணவர்கள்" என்று கருதுவது தவறாகும்.

முதலில், இந்த மண்ணில், மாணவர்களின் அடிப்படைச்சூழல் எவ்வாறு அமைந்திருக்கின்றது என்பதை நாம் நோக்குவோம்.

பல்லின மாணவர்கள் ஒருங்கிணைந்து கல்வி கற்கும் பாடசாலைகளில், போதானா மொழியாகவும், கருத்துப் பரிமாற்ற ஊடகமாகவும், ஒரு பொதுமொழியை பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அந்த வகையில் ஆங்கில மொழி, தன் ஆதிக்கத்தை முழுமையாகச் செலுத்தி வருகின்றது. இந்நிலையில், மாணவர்களும் ஆங்கிலமொழியில் தேர்ச்சி பெற்றுவிட, அவர்களது மொழித் தேவை, மிகச்சுலபமாக ஆங்கில மொழியால் நிறைவேற்றப்பட்டு விடுகின்றது. இங்கே இன்னொரு மொழியின் தேவை, அது தாய்மொழியாக இருந்தாலும்கூட அவர்களுக்குத் தேவையின்றிப் போய்விடுகின்றது. இந்நிலையின் தொடர்ச்சியும், வளர்ச்சியுமே தாய்மொழி பற்றிய சிந்தனையை இங்கு தூண்டக் காரணமாகின்றது.

இந்நிலை தொடர்பாக, மாணவர்களின் உளப்பாங்கையும், தமிழ் கல்வி வளர்ச்சி நோக்கி, அவர்கள் நகர முற்படுகையில், எதிர்கொள்கின்ற படிக்கற்களையும், தடைகளையும் நாம் சற்று நோக்குவோம்.

தமிழ் கல்வி பற்றிய சிந்தனை தொடர்பாக, மாணவர்களை நாம் இரு பெரும் பிரிவுகளாக பிரித்துக் கொள்ளலாம். தமிழைப் படிக்கின்ற மாணவர்கள், தமிழை அறவே படிக்காத மாணவர்கள் என இரு வகைப்படுத்தலாம்.

தமிழை அறவே படிக்க விரும்பாத மாணவர்கள். இந்த மண்ணில் தங்கள் வளர்ச்சியின் நிரந்தரம் பற்றிய உறுதியுடனும், எதிர்கால நோக்கில் எந்தளவுக்கு உபயோகமாகும், என்ற வினாவுடனும், தமிழ் கல்வி பற்றிய தமது கருத்துக்களை பின்வருமாறு சொல்கிறார்கள். "இந்த மண்ணின் பிரதான மொழியான ஆங்கிலமும், சகல தொடர்புகளுக்குமான இணைப்பு மொழியாகவும், நாட்டின் உத்தியோகபூர்வ மொழியாகவும், பிரஞ்சு மொழி விளங்குகிறது. இவை தவிர்ந்து நாம் தாய்மொழியைக்கற்பதால், எதிர்கால நோக்கில் எமக்கு, எவ்வித பயனும் இல்லை" என்று கருதுகின்ற, இம்மண்ணின் வாழ்க்கை முறையோடு அனுசரித்துப் போக முயல்கின்ற, இவ்வகை மாணவர்களின் கருத்தையும் நாம் கவனத்தி லெடுக்காமல் இருக்க முடியாது.

இனி, தமிழைப் படிக்கின்ற மாணவர்கள் பற்றி நோக்குகையில், அவர்களிடத்தேயும் நோக்கம் ஒன்றாக இருந்த போதும், அதற்கான காரணங்கள் வேறுபட்டிருப்பதையும் நாம் காண முடிகின்றது. இந்த மண்ணின் போதனாமொழி, இணைப்புமொழி என்று ஆதிக்கம் செலுத்தும் ஆங்கிலத்தையும் மீறி, மிக விருப்போடு, தமிழைக் கற்கின்ற மாணவர்களும் இங்கு இருக்கத்தான் செய்கின்றார்கள். இவ்வகை மாணவர்கள், தமிழ் வகுப்புக்களில் மிகக் குறைந்த வீதத்தில் காணப்பட்டாலும் கூட, இந்த மண்ணில் இவர்களின் ஆர்வம் மிக மிக பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

இவர்களுக்கடுத்ததாக, குறிப்பிடப்பட வேண்டியவர்கள் வெறும் சித்தியை மட்டுமே நோக்கமாகக் கொண்டு, தமிழைக் கற்பவர்கள். இவர்களுக்கு தமிழ்மீது குறிப்பிடும்படியான ஆர்வமேதும் இல்லையென்றாலும், இவர்களின் மேற்படிப்புக்களுக்குத் தேவைப்படுகின்ற சித்திகளின் எண்ணிக்கையில் ஒன்றை தமிழ் சுலபமாகப் பெற்றுத்தந்து விடும் என்ற எண்ணத்தில், வெறும் பாடம் என்கின்ற அளவில், இவர்கள் தமிழைக் கற்கின்றார்கள். இவர்களில் பெரும்பாலானோர் தாய் மொழி பற்றிய அடிப்படை அறிவை தாய் நாட்டிலேயே பெற்றவர்களாவர்.

தமிழைக் கற்கின்ற, மூன்றாம் வகை நிலை மாணவர்கள் யாரெனில், தமிழ் மீது எவ்வகை ஆர்வமும் அற்ற நிலையில், புறத்தூண்டுதல் அல்லது நிர்ப்பந்தங்கள் காரணமாக தமிழைக்கற்க வருகின்றவர்களாவர். குறிப்பாக தமிழ்மீது பற்றும், ஆர்வமும் கொண்ட பெற்றார்கள், இவ்வகை அழுத்தத்தை, பிள்ளைகள்மீது பிரயோகிக்கின்றனர். பெற்றாரின் அழுத்தத்தை, ஏற்கும் மனநிலை, அவர்களுக்கு இல்லையென்றாலும் கூட, அவர்களின் கருத்திற்கு மதிப்புக் கொடுக்க வேண்டிய மனோபாவம், இவ்வகை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிள்ளைகளிடத்தே இருப்பதால், இவர்களும் தமிழ் கற்க வருகின்றனர்.

இவ்வகையினர் தவிர, மேலும் சில மாணவர்கள் சுயதர்க்கங்களுக்குட்பட்டு தமிழ் கற்க வருகின்றனர். இங்கு பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் ஒரு சில மாணவர்கள், மிக நீண்ட இடைவெளிக்குப்பிறகு, தாயகம் சென்று திரும்பி வந்தனர். வந்த பின் மிக ஆவலோடு தமிழைக் கற்க முற்பட்டுள்ளனர். நம் தாய் நாட்டின் கலாச்சாரம், பண்பாடு சார்ந்த இலங்கைத் தமிழ்ச்சூழல், அவர்களிடத்தே ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

இவர்கள் தவிர, மொழி பற்றின்றி, ஆனால் கலாச்சாரம் சார்ந்த, நமது கலைகளை நோக்கும் மாணவர்கள் சிலரும் இங்கு இருக்கவே செய்கின்றனர். அக்கலை மீது கொண்ட ஆர்வம் காரணமாக, திறமை காரணமாக, அதை மேலும் தெரிந்து கொள்வதற்கு அவர்களுக்குத் தமிழின் தேவை அவசியமாகின்றது. இவ்வகையாலும் சில மாணவர்கள் தமிழைக் கற்கின்றார்கள்.

இவ்வகையாக, தமிழைக்கற்க முயல்கின்ற மாணவர்களின் ஆர்வம், இங்கு மெல்ல மெல்ல வளர்கின்றது என்று கருதி, நாம் மேலும் நோக்குவோமானால், அவ்வாறு முனைகின்ற மாணவர்களுக்கு, தமிழ் அறிவைத் தொடர, மேலும் இங்கு செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் என்ன? என்ற வினா முதலாவதாக எழுகின்றது.

நம் சமூக நலன் மீது, நாட்டம் கொண்ட பெரியார் சிலரின் முயற்சியால், இரண்டாம் நிலைப்பள்ளி வரை, நடத்தப்படுகின்ற தமிழ் வகுப்புக்கள், தொடர்ந்தும், கல்லூரி, பல்கலைக் கழகம் என்று விரிவடையாதிருப்பது, தமிழ் கற்க விரும்பும் மாணவர்களின் ஆர்வத்திற்கு தடைக்கற்களேயாகும். இவை, சில பல்கலைக்கழக மாணவர்களின் நிஜமான மனத்தாங்கல்களே!

"இந்நாட்டில், தமிழ் வளர்ச்சி குன்றிப் போகின்றது, மாணவர்களே, தாய் மொழி தமிழை மறக்காதீர்கள், தமிழைக் கற்றுக் கொள்ளுங்கள்", என்று சுலபமாக யாரும் சொல்லி விட முடியும். இன்று மாணவர்களின் யதார்த்த சூழலை நன்கு உணர்ந்து, அதற்கேற்ற வகையில் அவர்களோடு இணைந்து இயங்குவதே நம் சமூகத்தின் இன்றைய கடமையாகும்.

இந்த நாட்டின் இயந்திரத்தனமான சமூகக் கட்டமைப்பில், பெற்றாருக்கு ஏற்படுகின்ற பல்வேறு அழுத்தங்கள், பிள்ளைகள் மீது தனிப்பட்ட கவனத்தை, செலுத்த முடியாமல் செய்து விடுகின்றது. பெரும்பாலும் சுயமாக விடப்படுகின்ற பிள்ளைகள் மீது, இந்த மண்ணின் இயல்பான சூழ்நிலையும், பல்வேறு வியூகங்களில் இருந்து ஆதிக்கம் செலுத்தும் ஆங்கிலமும், பிரயோகிக்கும் பலமிக்க, அழுத்தங்களில் இருந்து, மாணவர்களால் "சுயமாக" நிச்சயம் மீள முடியாது. மாணவர்களின் பார்வையில், இதைப்பற்றி நாமும் சிந்திப்போமானால் இதில் உள்ள உண்மைகள் நமக்குப் புலப்படும்.

நம் தாய்மொழி தமிழ், வெறுமனே இலக்கணமும், இலக்கியங்களும் கொண்டதல்ல. வெறும் எண்ணங்களையும், உணர்வுகளையும் பரிமாறிக் கொள்ளும் ஊடகமாகவும் அல்ல, எம் இனத்தின் பாரம்பரியங்களையும், மிகச் சிறப்பான தன்னியல்புகளையும் ஒவ்வொரு தலைமுறைக்கும் எடுத்துச் சொல்கின்ற ஒப்பற்ற சாதனமாகும். மொழியை நாம் இழப்போமானால், அது காலங்காலமாய்ச் சுமந்து வரும், நம் சின்னங்களை, அடையாளங்களை நாம் நிச்சயமாக இழந்து விடுவோம்.

நாம், நம் தாய் நாட்டிலிருந்து, அகதிகளாய்ப் புலம்பெயர்ந்து இங்கு வந்தபோது, கொண்டு வந்தெல்லாம் சொத்தும், சுகமும் அல்ல, நம் உயிரும், அதற்கு நிகரான தாய்மொழியும், அது சார்ந்த கலாச்சாரம், பண்பாடு என்பன மட்டுமே. இவற்றை வைத்துத்தான் இந்த நாடு நம்மை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கிறது.

இந்தப் பூமியின் கலாச்சாரச் சுழற்சியில், எமக்கான தனித்தன்மைகள் அழிந்து போகாவண்ணம் காப்பாற்றவேண்டும் என்ற கடமை நம்ஒவ்வொருவருக்கும் உண்டு. நம் மாணவர்கள் மத்தியில் ஏற்படுகின்ற தமிழ் ஆர்வமே, எம் இனத்திற்கான எதிர்கால தனித்துவத்தின் நம்பிக்கை ஒளியாகும்.

## எந்த மொழியை நான் பேசுவது?

*பன்றிக்கறியை மென்றுகொண்டு*
*பாழ்நிலத்தில் என் பாட்டன்*
*என்னுடலின் குடிபெயரை*
*இழுப்பான்*
*மரபுச் சுமையின் குடும்பக்*
*கோலம்*
*முதுகில் குவிய அலறினான்*
*என் மீது*
*"முண்ட பெத்த மூதேவி*
*பேசேன் எங்களைப் போல*
*பேசு... நான் சொல்றேன்...*
*என் பேச்சை"*

*வேதங்கள் ஊடே விரல்கள் ஓட*
*உச்சுக்குடுமி நெய்பூசி நிழலாட*
*என் பிராமண குரு*
*எனக்குச் சொல்வார்;*
*"மூடமுண்டமே...*
*பாஷையை சரியா பிரயோகிடா"*

*நான் கேட்கிறேன்*
*உங்களை இப்போது*
*எந்த மொழியை நான் பேசுவது?*

— அருண் காம்ளே —

**"தலித்இலக்கியம்" இலிருந்து**
**தாமரைச்செல்வி பதிப்பகம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







# சர்வதேசிய மொழிக்கல்வித்திட்டங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன?

**செல்வா இலங்கையன்**

சர்வதேசிய மொழிக்கல்வித்திட்டங்கள். அதாவது ஆரம்பநிலை. இரண்டாம் நிலைப்பள்ளி மாணவர்களுக்கான இத்திட்டங்கள். மாகாணக்கல்வி அமைச்சின் பொது வழிகாட்டற் குறிப்புக்களுக்கமையவே கல்விச்சபைக—ளால் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. அந்த வகையில் எந்தவொரு மொழிக்குமான விரிவான பாடவிதானம். ஆங்கிலம். கணிதம். போன்ற பாடங்களுக்கிருப்பது போல். கல்வி அமைச்சினால் ஆக்கப்பட்டிருக்க வில்லை. ஒவ்வொரு மொழிக்குமான விரிவான பாடவிதானத்தை ஆக்கும் பொறுப்பு கல்விச்சபைகளையே சார்ந்தது.கல்வி அமைச்சின் இம்மொழிக் கல்வித்திட்டங்களுக்கான துணைவள வழிகாட்டற் கைநூல்கள்

(1) நோக்கங்கள். குறிக்கோள்களையும்

(2) உள்ளடக்கம் பற்றிய வழிகாட்டற்குறிப்புக்களையும்

(3) உள்ளடக்கத்தைக்கற்பித்தல் கற்றல் சம்பந்தமான முறைமைகள் பற்றிய குறிப்புக்களையும்

(4) மாணவர்களை மதிப்பீடு செய்யும் முறைமைகள் பற்றிய குறிப்புக்களையும்

கொண்டுள்ளன. இக்கைநூல்கள் கல்வி அமைச்சினால் *1990* இல் வெளியிடப்பட்டன. ஆரம்பநிலை பள்ளி மாணவர்களுக்கான சர்வதேசிய/பாரம்பரிய மொழித்திட்டத்தை பொறுத்தவரையில் ரொறன்ரோ பெரும்பாக பாடசாலைச்சபை (metropolitan Toronto school board) ரொறன்ரோ பெரும்பாகத்திலுள்ள கல்விச்சபைகளின் கூட்டு முயற்சியைக்கொண்டு பொதுப்படையான ஒரு பாடத்திட்டத்தை *1993* இல் வெளியிட்டுள்ளது.இதன் அடிப்படையில் ஆசிரியர்கள் தங்கள் தங்கள் மொழிக்கான பாடத்திட்டங்களை தயார் செய்து கற்பிக்க இப் பொதுப்படையான பாடத்திட்டம் மிக உபயோகமான ஒன்றாகும். இதன் அடிப்படையில் அந்தந்த மொழிகளுக்கான பாடத்திட்டங்களை தங்கள் தங்கள் மொழி இணைப் பாளர்களினதும். ஆசிரியர்களினதும் துணைகொண்டு தயாரிப்பதில் கல்விச்சபைகள் இறங்கியுள்ளன — என அறியப்படுகின்றது.

இரண்டாம் நிலைப்பள்ளி மாணவர் களுக்கான மொழிக்கல்வித்திட்டத்தைப் பொறுத்தவரையில். கல்வி அமைச்சின் பாடத்திட்டத்திற்கான வழிகாட்டற் குறிப்புக்களைக் கொண்ட கைநூல்களின் அடிப்படையில்தான். ஆசிரியர்கள் தங்கள் தங்கள் மொழித்தகமைகளுக்கேற்றவாறு பாடத்திட்டங்களை வகுத்து எவ்வித இணைப்புமின்றி தாங்கள் தாங்கள் பாட்டிற்குக்கற்பித்து வருவதைத்தான் காணக்கூடியதாயிருக்கின்றது. எமது மொழியைப் பொறுத்தவரையிலும் இது உண்மையென்றே கூறவேண்டும். இதற்கு அடிப்படையான காரணமும் ஒன்றுண்டு.

கனடாவைப் பொறுத்தவரையில் கல்விகான பொறுப்பு சமஷ்டி அரசினதல்ல. ஆனால் மாகாண அரசுகளினதே. அந்தவகையில் கல்வித்திட்டங்களை வகுப்பதில் "மாகாண அரசுகளுக்கே" அதிகளவு சுயாதீனமுண்டு .ஆரம்பநிலை. இரண்டாம்நிலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கல்வித்திட்டங்களை வகுக்கும் பொறுப்பு, மாகாண அரசின் கல்வி அமைச்சினதாயிருந்தாலும், அவற்றை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு கல்விச்சபைகளையே சாரும். கல்விச்சபைகள் கல்வித்திட்டத்திற்கான பாடத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு, பாடசாலை அதிபர்களிடமும் ஆசிரியர்களிடமும் பொறுப்புவிடப்படுகின்றது. அந்தவகையில் பாடத்திட்டங்களின பூர்த்தியும் வெற்றியும் இறுதியில் அதிபர்களையும், ஆசிரியர்களையுமே சாரும்.

மாகாணமட்டத்திலோ அல்லது கல்விச்சபை மட்டத்திலோ பாடத்திட்டங்களின் பூர்த்தியையும், வெற்றியையும், மாணவர்களின் கல்வித் தேர்ச்சியையும் மதிப்பீடு செய்வதற்கான பொதுப்பரீட்சைத்திட்டம் இங்கே இல்லாமையாலும், அந்தந்த ஆசிரியர்களிலேயே இவை தங்கியுள்ளன என்றமையாலும், மாகாணத்துக்கென்றோ அல்லது கல்விச்சபை பிரதேசத்துகென்றோ ஒரு கல்வித்தரத்தைத் தீர்மானிக்கமுடியாத நிலை காணப்படுகின்றது. இன்நிலைமை மாணவர்களின் கற்றலுக்கான ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிப்பதாகயில்லையென்றே கூறவேண்டும். எனவே பாடத்திட்டங்களின் பூர்த்தியும், வெற்றியும் மாணவர்களின் கல்வி தேர்ச்சியிலும், மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலே அதிபர்களும், ஆசிரியர்களும் கொண்டுள்ள அக்கறையையும் ஆர்வத்தையும் பொறுத்தனவென்றே கூறவேண்டும்.

சர்வதேசிய/பாரம்பரிய மொழிக்கல்வியைப் பொறுத்தவரையில் சிறப்பாக இரண்டாம் நிலை மாணவர்களுக்கான மொழிக்கல்வியைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு மொழிகளுக்குமான வரையறுக்கப்பட்ட பாடத்திட்டமில்லாமையாலும், ஆசிரியரே தனது மாணவர்களை மதிப்பீடுசெய்வதற்கு பொறுப்பாயிருப்பதாலும் ஒரு மொழிக்கான, ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடத்திட்டங்களின் ஒன்றிணைப்புப்பற்றி ஆசிரியர்களோ மொழி இணைப்பாளர்களோ அக்கறை கொள்ளாத நிலைதானுள்ளது.அந்த வகையில் மாணவர்களின் மொழித் தகைமையில் ஒரு பொதுவான தரத்தை எதிர்பார்க்க முடியாது. அது ஆசிரியர்களைப் பொறுத்து வேறுபடலாம்.

இங்கே மாகண அரசின் சர்வதேசிய/பாரம்பரிய கற்கை நெறிகளின்கீழ் தமிழ் மொழியைக்கற்கும் எமது மாணவர்களின் சராசரி மொழித்திறனையும் அறிவையும் கூட்டுவதற்கு கல்விச்சபைகளை நாம் எதிர்பார்க்க முடியாது. கல்விச்சபைகள் எமது மாணவர்கள் தமிழ் மொழியைக் கற்பதற்கான வாய்ப்பையும், ஓரளவு வசதிகளையும் அளிக்கின்றன. மாணவர்களோ "குறிப்பாக இரண்டாம் நிலைப்பள்ளி மாணவர்களோ" மூன்று திறமைச்சித்திகளையும், OAC மட்டத்தில் பல்கலைக்கழகப் பிரவேசம் கிடைப்பதற்கான அதிகளவு புள்ளிகளை எதிர்பார்த்துமே இவ்வகுப்புக்களில் சேர்ந்து படிக்க வருகின்றார்கள் போற் தெரிகின்றது. தமிழ் மொழியின், பாரம்பரியத்தையும் அதன் இலக்கிய இலக்கணச் சிறப்பையும் தொன்மையையும் படித்தறிந்து, அவற்றைப்பற்றி மேலாய்வுகளுக்கான வாய்ப்புக்களை வருங்காலத்தில் இந்நாட்டு பல்கலைகழகங்களிலும் உருவாக்கலாம், அந்தவகையில் எமது அடையாள முத்திரையை, புலம்பெயர்ந்த இந்த நாட்டில் பதிக்கலாம் என்ற எண்ணக்கருத்துடனும் நோக்குடனும் இக்கற்கை நெறிவகுப்புக்களில் சேர்ந்து படிப்பவர்கள் இல்லையென்றே கூறலாம்.

## தமிழ் மொழிக்கற்கை நெறிகளை எவ்வாறு ஜனரஞ்சகப்படுத்தலாம்?

நாம் புலம் பெயர்ந்து வாழும் இப்பகுதியில் தமிழ் மொழியின் தேவையையும், பயனையும், அவசியத்தையும் எமது பெற்றோரும் மாணவரும் உணரும் வகையில் சில வேலைத்திட்டங்களை மேற்கொள்வதால், மாணவர்கள் மொழியைக் கற்கத் தூண்டப்படுவார்களென்பது நிச்சயம்.

இதை எவ்வாறு செய்யலாம்?

(1) வீடுகளில் தமிழில் உரையாடுதல்

(2) கலைவிழாக்களின் பேச்சுப் போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகளில் மாணவர்களை பங்கு பற்றச் செய்தல்

(3) தமிழில் இசை, கலை சமய வகுப்புக்களை ஒழுங்கு செய்து சிறார்களைச்சேர்த்தல்

(4) இவற்றிற்கான பரீட்சைகளையும் போட்டிகளையும் நடாத்தல்

(5) இரண்டாம் நிலைப்பள்ளி மாணவர்களுக்கான தமிழ் மொழிப்பாட நெறிகளைப் பொறுத்தவரையில், கல்விச்சபைகளினதும், ஆசிரியர்களினதும், தமிழ் அறிஞர்களினதும் கூட்டுமுயற்சியாக, கல்வி அமைச்சின் வழிகாட்டற் குறிப்புக்களுக்கமைய, விரிவான பாடத்திட்டங்களை அமைத்து, அதற்கேற்ப பரீட்சைகளையும், போட்டிகளையும் நடாத்தல்.

(6) பல்கலைக்கழகங்களில், எமது மாணவர்கள் தமிழையும் ஒரு துணை மொழிப்பாடமாகக் கற்பதற்கான வழி வகைகளைத் தேடி, மாணவர்களை கற்கத்தூண்டல்.

(7) இன்றய தொழில்நுட்பவியல் வளர்ச்சிக்கேற்ப தமிழை மொழியியல் ரீதியாக நவீனப்படுத்தும் ஆய்வு களுக்கான சூழ்நிலையை ஏற்படுத்தும் வகையில், மாணவர்களை நோக்கத் தூண்டல்

முடிவுரை

மாணவர்களின் கல்வியில் சமூகத்துக்கும் பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் பெரும்பங்குண்டு. அந்தவகையில் புலம்பெயர்ந்து வாழும் எமது மாணவர்களின் தமிழ் மொழிக்கல்வியில் எமக்கு மிகப் பெரும்பங்குண்டு என்பதை மனதிற் கொண்டு ஸ்தாபனரீதியாக நாம் இயங்கி, தமிழ் மொழிக்கல்வியின் மேம்பாட்டிற்காக, அரசுக்கும், கல்விச் சபைகளுக்கும், கல்விநிறுவனங்களுக்கும் வேண்டிய ஆலோசனைகளையும், தூண்டுரைகளையும் வழங்கவேண்டியது எமது கடமையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறப்புக் கட்டுரை

***"எதனை நாம் அறியவில்லையோ அதனை அறிய முனைவதும்***
***எதனை நாம் புரியவில்லையோ***
***அதனைப் புரிய அவாவுவதும்,***
***எது நமக்குத் தெரியவில்லையோ அதனைத் தேடுவதுமே அறிவு"***
***ஹெகல்.***

## 1986 இலிருந்து

புலம் பெயர்ந்து பாரிசில் வாழ்ந்து அங்கேயும் தனது இலக்கியப்பணியை தொடர்ந்து 8-12-1995 இல் காலம் சென்ற ஈழத்து பிரபல்ய முற்போக்கு எழுத்தாளராகிய அமரர் எஸ் அகஸ்தியர் அவர்களின் ஞாபகார்த்தமாக அவர் நோய்வாய்ப்பட்டிருந்த இறுதிக்காலத்தில் எழுதப்பட்ட இக்கட்டுரை அஞ்சலி செலுத்தும் முகமாக பிரசுரமாகிறது.

# இயக்கவியலும் கலை இலக்கியமும்

**எஸ். அகஸ்தியர்**

தமிழ் ஒரு மொழி. ஆனால், மொழி தமிழ் அல்ல. சிங்களம் ஒரு மொழி ஆனால், மொழி சிங்களம் அல்ல. ஆங்கிலம் ஒரு மொழி ஆனால், மொழி ஆங்கிலம் அல்ல. இது உன்னிப்பான கவனத்திற்குரியது மொழிகள் மூலம் இனங்கள் கணிக்கப்படுவதால் மனிதர்களுக்குள் மொழி ஒரு வாழ்க்கைச் சாதனமாகிறது. இந்தச் சாதனம் அதிகார அல்லது ஆளும் வர்க்கங்களால் பாராதீனப் படுத்தப்படும்போது இனங்கள் பேதப்படுகின்றன. எந்த ஓர் இயக்கத்துள்ளும் வர்க்கம் சார்ந்த செயற்பாடு இருப்பதே இதற்குக் காரணம். எந்தமொழியும் வர்க்கம் சார்பு வாதமாகின்றன. ஆக, நாம் கருத்தியல் மூலம் வெளிப்படுத்தும் வர்க்க வேறுபாட்டின் தன்மைகளைப் புரியாமல் எந்த இனத்தின் பிரச்சினைகளையும் ஒருபோதும் சரியாக அணுகவோ தீர்க்கவோ முடியாது. வர்க்கபேதம் ஒழிக்கப்படாதவரை ஓர் இனத்துள்ளும் 'இரண்டு வர்க்க வேறுபாடு' இருப்பதைக் காணும் ஒருவரால்தான், இனப்பிரச்சினைகளுக்கும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் ஒரு சரியான தீர்வைக்காணமுடியும். இதுபோன்றே சகல பிரச்சினைகளையும் இயக்கவியல் சார்ந்து அணுகவேண்டும்.

மொழிகளும் மொழிகள் சார்ந்த இனங்களும் தத்தம் இனங்களடர்ந்த நாடுகளில்- பிரதேசங்களில் இயல்புபூர்வமாகச் சமூகவாழ்வைத் தரிசிக்கின்ற சீரிய முறையாலேயே வளர்ச்சியடைகின்றன. ஒரு நாட்டின்- பிரதேசத்தின் 'மனித கலாசாரத்' தைப் பலாத்காரமாகவோ மறைமுகமாகவோ நய வஞ்சகமாகவோ அதிகார பலம் கொண்டு,- விஞ்ஞானத்திற்குப் புறம்பான 'சமயாச்சாரங்கள்' மூலம் திணிப்பதானது அந்நாட்டின் அப்பிரதேசத்தின் ஆத்மாவையே நச்சுப்படுத்துவதாகும். யாழ்ப்பாணத்துச் 'சாதியம்' இவ்வாறே தோன்றியது. ஸ்ரீலங்காவின் கரையோர கண்டிச் சிங்கள வேறுபாடும் இவ்வாறே தோன்றியது. ஒல்லாந்தரும் போத்துக்கீசரும் தம் அதிகாரத்துவ முறை மூலம் இலங்கைக் கரையோரம் உள்ள மக்களை மதம் மாற்றி ஓர் இனத்தின் தனித்துவத்தைப் பேதப்படுத்திய வரலாறு இதற்கு உதாரணம். மதம் மாறித் தமிழ் இனத்தைக் காட்டிக்கொடுத்த கிறீஸ்தவர்களையே சங்கிலியன் எதிர்த்துப் போராடினான். போர்த்துக் கீஸ்-ஒல்லாந்து ஆளும் வர்க்கத்துக்கு அப்போராட்டத்தையும் காட்டிக்கொடுத்தபோது சங்கிலியனால் வெட்டி வீழ்த்தப்பட்டவர்களையே, 'வேதசாட்சிகளாக மரித்தார்கள்' என்று மதங்களால் புகழாரம் சூட்டப்பட்டது. சங்கிலி அரசன் வரலாறு ஓர் வர்க்கம் சார்ந்து இயக்கம் பெற்றதையும், மதங்கள் எந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வர்க்கம் சார்ந்து, செயற்பட்டன–செயற்படுகின்றன என்பதையும் இதன் மூலமும் அறியலாம். இவ்வாறுள்ள நாடுகள் தம் இயல்புவாதத்தை முற்ருக இழப்பதோடு ஒரு போலியான வாழ்க்கை முறையின் கலாச்சாரத்திற்கும் அக்கால நிலைக்குத் தள்ளப்பட்ட மனிதர்களின் சமூகவாழ்வியல்பு கடைசியில் ஒரு 'சம்பிரதாயம்' என்ருகிவிடுகிறது. இப் பொய்மையான சம்பிரதாய முறை சமூகவியல்புக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். இதனுல் யதார்த்த வாழ்வு நோக்கிற்கும் சம்பிரதாயக் கலாச்சாரத்திற்கும் முரண்பாடு தோன்றுகின்றது. உண்மையில் சம்பிரதாயம் வாழ்க்கையல்ல, வாழ்க்கை சம்பிரதாயமுமல்ல. சம்பிரதாயம் வாழ்க்கையானுல் அந்த வாழ்க்கை முழுப் போலியாகிவிடுகிறது. இந்தப் போலித்தனப் பொய்மை வாழ்வின் பலவீனத்தையே சகல மதக்கலாச்சாரங்களும் தவருகப் பயன்படுத்தி ஆளும் வர்க்கங்களின் அதிகாரங்களுக்கு அதிகாரபலம் சேர்க்கின்றன. இதனை இந்தியா இலங்கை போன்ற நாடுகளிலும், உலக முதலாளித்துவ நாடுகளிலும், இஸ்லாமிய மதம் சார்ந்த நாடுகளிலும் பார்க்கலாம்.

இந்த உண்மையினூடாக வாழ்வை நோக்கும்போதுதான் மொழி, கலை, இலக்கியம், கலாச்சாரம், அரசியல், தத்துவம் என்பன இயக்கவியல் சார்ந்து அன்றேல்–மாறுபட்டு இருப்பதை அவதானிக்க முடியும். இவ்வாறே சகல படைப்புத்துறைகளும் கணிக்கப்படுகின்றன.

சகல படைப்புகளும் கருத்துக்களும் மனிதனுல் தோற்றுவிக்கப்பட்டவை, கற்பனுலோகமும் மனிதனுல் தோற்றுவிக்கப்பட்டதே. மனிதனுல் தோற்றுவிக்கப்பட்ட இப்படைப்புகளின் வடிவங்களும் கருத்தியலும் மனிதகுல முன்னேற்றத்திற்குப் பயன்படவேண்டுமாயின், இவை சமுதாய இயல்பினூடு யதார்த்த பூர்வமாக வெளிப்படவேண்டும். கலை இலக்கியங்கள் உருவத்தில் மாத்திரமன்றி, பிரதானமாக உள்ளடக்கத்திலும் இயக்கவியல் அம்சம் கொண்டிருந்தால் மாத்திரமே சிறப்படைகின்றன, கற்பனுவாதக் கருதுகோள்களாலோ, சமயக் கலாச்சார யாத்திரையாலோ, நிதர்சன உலகவாழ்க்கைப் பிரச்சனைகளை ஒருபோதும் யதார்த்தபூர்வமாக பார்க்கவோ, தீர்க்கவோ முடியாது. (இலங்கை இனப் பிரச்சனையைத் தீர்க்க 'ஓமகுண்டம்' வளர்த்தவர்களையும், 'பிரார்த்தனை' செய்தவர்களையும் விஞ்ஞான உலகம் அறியும். இலங்கையில் பௌத்த குருமாரும், சைவப் பெரியார்களும், கிறீஸ்தவ ஆயர்களும், இஸ்லாமியக் கோட்பாட்டாளர்களும் கலை இலக்கிய அரசியல்வாதிகளை முந்திக் கொண்டு 'ஞானப்பிரமுகர்'களாகி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வெளிக்கிட்ட கோலம்–நோக்கம் இதை மேலும் புலப்படுத்தப்போதுமானது. கற்பனுவாதக் கருத்துருவவாதிகளால் நிஜ உலக வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கு ஒரு போதும் தீர்வுகாண முடியாதது மட்டுமல்ல, மேலும் சிக்கல்களையே தோற்றுவிப்பார்கள் என்பதை இதன்மூலம் நிருபணமாவதைப் பார்க்கலாம்.

> **'யதார்த்த வாழ்வு நோக்கிற்கும் சம்பிரதாயக் கலாச்சாரத்திற்கும் முரண்பாடு தோன்றுகின்றது. உண்மையில் சம்பிரதாயம் வாழ்க்கையல்ல, வாழ்க்கை சம்பிரதாயமுமல்ல. சம்பிரதாயம் வாழ்க்கையானுல் அந்த வாழ்க்கை முழுப் போலியாகிவிடுகிறது. போலித்தன வாழ்வின் பலவீனத்தையே சகல மதக்கலாச்சாரங்களும் தவருகப் பயன்படுத்தி ஆளும் வர்க்கங்களின் அதிகாரத்திற்கு பலம் சேர்க்கின்றன.**

அண்மையில் அயோத்தியில் ராமர் பஜனை மடாலயத்தினர் மசூதிகளை வலு சந்தோஷமாக இடித்து ஆயிரக் கணக்கான மக்களைப் பலி எடுத்த நாடகமும் உலகம் அறிந்தே இத்தகையோரை அரசியலுக்கும் சமூகப்பிரச்சினைகளுக்கும் கலை இலக்கியத்துக்கும் நுழையவிட்டு, முழுச் சமுதாயத்தையே வணிகமயமாக்கிவிட்ட வர்க்கம் எது என்பதைக் கண்டுகொள்வதில்தான் இதன் உண்மையான அர்த்தம் புலப்படும் ஆக, உருவமும் உள்ளடக்கமும் இயல்புவாதமாக இணைந்த யதார்த்தபூர்வக் கலைகள் உய்த்துயர்வதற்கான இயக்கவியல் சார்ந்த ஆய்வைத் தேடினுல் மட்டுமே, சமூகவியல்வாதக் கலை இலக்கியம் அரசியற் சித்தாந்தம் ஆகிய துறைகள் சரியாக உருவாகமுடியும்.

மொழியின் சிறப்பு அது உள்வாங்கியிருக்கும் அறிவியலில் எவ்வாறு தங்கியிருக்கிறதோ, அவ்வாறே கலை இலக்கியம் அரசியற் தத்துவங்களின் சிறப்பும் அவை கொண்டிருக்கும் கருத்துருவம் என்னும் உள்ளடக்கத்தில் தங்கியிருக்கிறது. **உருவம் உள்ளடக்கம் என்னும் அழகியல்பற்றி ஆழ்ந்த சமூகவியல் விமர்சகர்களான சிதம்பர ரகுநாதன், கே பாலதண்டாயுதம், நா வானமாமலை, கா. சிவதம்பி, திரு தோத்தாரி, க.கைலாசபதி, இ முருகையன், பொன்னீலன் போன்றோர் விளக்கியிருப்பதால் இங்கே ஒருப்பாகவே குறிப்பிடநேர்கிறது.**

மனிதர்கள் தம் கருத்துக்களையும் தேவைகளையும் பரிமாறிக்கொள்வதற்கான சாதனமாகத் திகழும் மொழி, அதன் சமூகவியல்புகளினூடாகப் பரிணமம்பெறும் சீரிய கருத்துவருவங்களால் மட்டுமே அர்த்தமும் ஆளுமையும் கொள்கின்றது. மொழியின் வளமும் சிறப்பும் அதன் 'பெருமை'யில் ஒருபோதும் தங்கியிருக்கவில்லை. அது சங்கமித்திருக்கும் சமூகத்தின்பால் கொண்டுள்ள ஆழ்ந்த கருத்துக்களை வெளியிடும் போதுதான் சிறப்படைகின்றது. 'சிங்களம் மட்டும்' சட்டத்தின் மூலம் தமிழ் மொழிக்குள்ள உரிமையை மறுப்பதால் சிங்கள மொழி சிறப்போ வளர்ச்சியோ அடைவதற்கில்லை. சிங்களச் சட்டம் வரமுன் யாழ்ப்பாணப் பிரதேசங்களிலும் சிங்களப் பாடசாலைகள் இருந்தன. ஏராளமான தமிழ் மாணவர்கள் சிங்களம் படித்தார்கள். அதுபோல் சிங்கள மாணவர்களும் கணிசமாகத் தமிழ்படித்தார்கள். சிங்களச் சட்டம் வந்தபின் சிங்கள மொழி வளர்ச்சி தடைப்பட்டது. ஒரு மொழியின் வளர்ச்சி, அடுத்தமொழியின் வளர்ச்சியிலும் உய்த்துயர்கிறது என்னும் கருத்தியல் ஆளுமை பெருமையே, இனப் பிரச்சினை தலை எடுக்க ஏதுவாகிறது. ஆளும் வர்க்கம் இதற்கு மாருகத் தன் கருத்தியலை இப்படித் தக்க வைத்திருப்பதன் நோக்கமுமே, அதற்கென்று ஒரு வர்க்கத்தன்மை இருப்பதன் நோக்கமே, அதற்கென்று ஒரு வர்க்கத்தன்மை இருப்பதேயாகும். இவ்வாறு மனிதனுல் தோற்றுவிக்கப்பட்ட கலை இலக்கியம், மொழி என்பன மனிதகுலத்தை முழுமையாக உய்விக்கச் சேவகம் செய்வதேயன்றி, மனிதனுல் தோற்றுவிக்கப்பட்ட கற்பனுலோக ஆஷாடபூதிகளுக்குத் 'தொண்டு' புரியவல்ல. நாம் வாழும் சமூக நிலைப்பாட்டுக்கு மாருகவும் மனிதகலாச்சாரத்திற்கு விரோதமாகவுள்ள சமயாச்சாரங்கள் மனித இயல்புக்குள்ள மானிடத்தைப் பேதப்படுத்தி நாடு பூராவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஊழிக் கூத்தாட வைத்திருப்பதையும் அவதானிக்கலாம். **மொழியின்பால பேதப்படாத மனிதர்களே சமயக்கலாச்சாரங்கள் பேதப்படுத்தி ஜாதியத்தைப் பரப்பியதையும் யாழ்ப்பாணத்துச் சமூகவாழ்வு அறிவுறுத்துகின்றது. மனித வாழ்வின் இயல்புமுறையை விஞ்ஞான வளர்ச்சி அனுமதிக்காமல் தடுக்கும் இயல்பற்ற இம்முறை நாவலர் பெருமான் போன்றவர்களால் எப்படியெல்லாம் யாழ்ப்பாணத்து மக்களை நச்சுப்படுத்தியது.** நச்சுப்படுத்துகின்றது என்பதற்கு இது சான்று. 'நாவலர் பெருமான்' தனது நூலில் கவிபொதி சுத்தானந்த பாரதி யார், 'நல்லை நகர் நாவலர் பிறந்தவரேல் அன்று தமிழ் எங்கே சுருதி எங்கே? என்று விதந்து போற்றுகின்ருர். முற்றிலும் உண்மை நாவலர் பெருமான் தமிழ்மொழி இலக்கணத்தின் பிதா மகன் என்பதில் ஐயமில்லை. ஆனுல், தமிழ் மொழி மூலம் சமூகத்தில் சமயத்தினுடாக வைதிகக் கலாச்சாரத்தைப் பரப்பிய முறைகேட்டையே இங்கு குறிப்பிட நேர்கிறது. அவர் எழுதிய 'ஆபேதவாதம்' என்ற நூலில் முற்றிலும் மாறப்பட்டு முற்போக்குக் கருத்துக்களையே குறிப்பிடுகின்ருர்.

இவ்வாருகவுள்ள நமது மொழி, கலை, இலக்கியம், கலாச்சாரம், பண்பாடு என்பன பற்றி நாம் 'பெருமை' ப்படுவதில் உள்ளார்த்தமாக விளங்கும் போலித்தனம் பெரும்பாலும் நம் தமிழர்களாலேயே ஓயாமல் பேசப்படுவதையும் வெளிப்படுவதையும் தமிழகத்திலும் அவதானிக்கலாம். இந்தப் போலித்தனம் விலாங்குபோல் அந்தர வாழ்வுக்குட்பட்ட நடுத்தர வர்க்கத்தாரிடமும் மிதவாதப் பூர்ஷவாக்களிடமும் ஒரு புற்றுநோயாகப் பரவிவிட்டதால், சகல கலைப்படைப்புகளுக்கும் பெரும் காரணகர்த்தாக்களான மக்களும் பாட்டாளி வர்க்கமும் சமூகவியற் சிந்தனைவாதிகளும் இவர்களிடமிருந்து பேதப்படுவதையும் அவதானிக்கலாம்.

யாழ்ப்பாணத்திலோ அன்றேல் லண்டனிலோ அல்லது வேறு நாட்டிலோ இவ்வகையான இரண்டு தமிழர் சந்தித்துக்கொண்டால் எந்த நிர்ப்பந்தமுமின்றியே தங்கள் சொந்த மொழியில் சம்பாஷியாமல் ஆங்கிலத்தில் மட்டுமல்ல, ஆங்கிலேயர் பாணியிலும் வில்லங்கமாகப் பேசுவதைப் பார்க்கலாம். இந்த 'வருத்தம்' இன்றும் தீர்ந்த பாடில்லை.

இயல்புவாதமற்ற இந்தப் பழக்க தோஷத்துள்ளே ஒரு 'மேதைக் கான 'மவுசு' தேடும் பம்மாத்தை எந்த ஒரு சாதாரண மனிதனுலும் சுளுவாகக் காணமுடிகிறது. நாம் அறிந்தவரை வீணுக அதிகம் பெருமை பேசி மிகவும் மோசமாகச் சிறுமைப்பட்ட ஓர் இனம் உண்டென்ருல் அது நம் தமிழ் இனம்தான். கலியாணத்திலிருந்து செத்தவீடுவரை நமது கலாசாரப் பண்பாடு படும்பாட்டையும் எப்போதும் பார்க்கலாம். 'கல்தோன்றி மண்தோன்ருக் காலத்தே முன்தோன்றி மகிழ்த்த மூத்த குடி நம் தமிழ்க்குடி' என்று விஞ்ஞான வரலாற்றுக்குப் புறம்பாகவும் பெருமை பேசுவதில் இன்றுகூட நம்மவர் கோசுபோவதோ வெட்கப்படுவதோ இல்லை.

**மொழி, கலை, இலக்கியம், அரசியல், விஞ்ஞானம் தத்துவம், சட்டம், சித்தாந்தம், தர்க்கவியல் என்னும் கூறுகள் சமுதாயத்தின் எத்துறையோடும் இணைந்து செயற்படுவதானது ஒரு மரபுவாதமாகவன்றி, ஓர் இயல்புவாதமாகத் திகழ்வதைப் பார்க்கின்ரேம். கலை இலக்கியம் சமூகவியல் சார்ந்து எவ்வாறு இவை கருத்துருவங்களாகவும் வெளிப்படுகின்றவோ அவ்வாறே ஏனைய சகல கூறுகளும் கருத்துருவங்களைத் தாங்கியே வெளிப்படுகின்றன.**

உலகில் முதன் முதல் தோன்றிய மனிதக் குரங்கும் தமிழ்க்குரங்கு என்று சொன்னுல்தான் நமது தமிழன் திருப்தியடைவான் என்று புதுமைப்பித்தன் ஓரிடத்தில் இதனையே உவமானத்துடன் குறிப்பிடுகிருர். ஈவெ.ரா பெரியாரும் கல்தோன்ருக் காலத்துக்கு முன்தோன்றிய மொழியென்ருல் அது காட்டுமிராண்டி மொழிதானே என்ருர் பேராசிரியர் கா. சிவதம்பி எழுதிய 'யார் இந்த யாழ்ப்பாணத்தான்' என்ற நடப்பியல்வாதக் கட்டுரையில் இதனை இயல்புநெறியோடு விளக்கியுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

ஆங்கிலம் பேசுபவன் அறிஞனென்ருல், லண்டனில் தெருக்கூட்டுகிறவனும் அறிஞன்தான் என்று ஒருமுறை ராஜாஜி கூறினர். இதன் அர்த்தம், மொழி மூலம் ஓர் ஆழ்ந்த கருத்தை அ இயல்பினூடு நயம்பட வெளிப்படுத்த முடியாதபோது அந்த மொழிக்கு அர்த்தமே சிறப்போ இருப்பதில்லை என்பதாகு இதனையே ராஜாஜி அவ்விதம் கூறுகிருர்.

ராஜாஜிக்கு ஒருபோது மொழியறிவு இருந்ததில்லை சமஸ்கிரு சுலோகங்களை யாவரும் ஓதிக்கொண் யிருக்கவேண்டும் என்று கருத்துள்ளவ குலத்தொழில் கல்விச் சட்டம் கொண் வந்ததற்கு இதுவும் ஒரு காரணம்.

ராஜாஜி சிறந்த தமிழரல் தமிழ்மொழிமூலம் பிற்போக்கு வாதத் அதிகம் பரப்பியவர் பிற்போக்கு–முற்போக்குக் கருத்தையும் ஒ மொழிமூலம் செய்யமுடியாவிடின் அந்த மொழ பிரயோசனமற்றது என்பதே காட்டுகிரு ஆயினும் ஆங்கில அறிவும் முதலாளிய வர்க்க சார்ந்தே எப்போதும் செயல்பட்டது. ஆனுல் அவர் எழுதிய, மொழியும் இலக்கணமும் இலக்கியத்திலிருந்தும் அதன் இயக்கத்திலிருந்தும் தோன்றியவை. இவ்வகைத் தோற்றுவாயான மொழி, கலை, இலக்கியம், அரசியல், விஞ்ஞானம் தத்துவம், சட்டம், சித்தாந்தம், தர்க்கவியல் என்னுங் கூறுகள் சமுதாயத்தின் எத்துறையோடும் இணைந்து செயற்படுவதானது ஒரு மரபுவாதமாகவன்றி, ஓர் இயல்புவாதமாகத் திகழ்வதைப் பார்க்கின்ரேம். கலை இலக்கியம் சமூகவியல் சார்ந்து எவ்வாறு இவை கருத்துருவங்களாகவும் வெளிப்படுகின்றவோ அவ்வாறே ஏனைய சகல கூறுகளும் கருத்துருவங்களைத் தாங்கியே வெளிப்படுகின்றன.

மானிடரின் வாழ்வு நிலைக்கேற்ப இயல்பாகக்கிளரும் பாலுணர்வையே வெறும் தசைத்துடிப்பாக வர்ணித்து மிகையல் கொண்ட விரசத்தைத் தூண்டும்படி நச்சுக் கருத்தியல்கொண்ட படைப்புகளை விகாரக் கலையை. இன்னெர் படைப்பாளன் கற்பனுவாத உலகில் தானே உருவாக்கிய தெய்வங்களை மேல் சுமத்தி கருத்தியலாக வெளியிடுகிருன். மற்ருேர் படைப்பாளன் இரண்டுமுரண்பட்ட கருத்தியலையும் ஒருசேர வெளியிட்டுத் தனது சந்தவர்ப்பவாத வணிக இலக்கிய இலக்கியத்திற்குப் பயன்படுத்துகிருன். இன்னெர் படைப்பாளன் சமூகவியல் பற்றிய ஆய்வில் வர்க்கம் சார்ந்து கருத்தியலை அழுத்தி எழுதுகிருன். எந்தக் கருத்தியற் படைப்புகளுக்குள்ளும் ஏதோ ஒரு

www.tamilarangam.net



வர்க்கச் சார்பு நோக்கம் மறைந்திருப்பதை இதன் மூலம் பார்க்கிறோம் இயக்கமும் அது சார்ந்த கருத்தியலும் இதனுல் உரம் பெறுவதையும் வச்சிரமிழந்து போவதையும் கருத்தியலே நிர்ணயிக்கிறது என்பதற்கு இது சான்று. இவ்வாறமைந்த நிலைபேற்றினூடாகவே சமுதாயத்தில் நிகழும் சகல இயக்க நிகழ்வுகளும் நடைபெறுகின்றன.

கருத்தியல் என்னும் கருத்துருவம் அல்லது கருதுகோள் எப்போது மனிதனில் தோற்றம் பெற்றதோ அப்போதிருந்தே இயக்கவியலுக்கு மாறுபட்டதும் உடன்பாடானதுமான கருத்துக்கள் முரண்பட்டு வெடித்தன. கருத்தியல் பிற்போக்கு முற்போக்கு என இரு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. கலை இலக்கிய அரசியல் களத்தில் பிற்போக்குவாதம் முற்போக்குவாதம் என நிர்ணயிக்கப்படும். சார்பு நிலை, அவை இயங்கும் முறையிலும் வெளிப்படுத்தும் கருத்தாலுமே கணிக்கப்படுகின்றன. இவ்வாறே மனித தோற்றத்தின்பால் வெளிப்படும் முரண்பாடான கருத்துருவம் அஞ்ஞான எண்ணமுதல் வாதம் Spritualistic jdealism என்ற பிற்போக்குவாதத்திற்கும், 'விஞ்ஞானப் பொருள்முதல்வாதம் Sceintific materialism என்ற முற்போக்கு வாதத்திற்கும் வித்திட்டது. மனிதன் தோற்றுவிக்கப்பட்டானு அல்லது தோன்றினுை? தோற்றுவிக்கப்பட்டானெனில், யாரால் தோற்றுவிக்கப்பட்டான்? தோன்றினுனெனில், எவ்வாறு தோன்றினுன்? நமது கண்களுக்குப் புலப்படுகின்ற அண்டசராசரர்கள் பற்றியும் கண்களுக்குப் புலப்படாத கோளங்கள் பற்றியும் மேற்கொண்ட ஆய்வு, விஞ்ஞான வரலாற்றுப் பொருள்முதல் வாதத்திற்கு இட்டுச்சென்று இதற்கு விடைகாண்கிறது.

உலகத்தில் தோன்றிய மாமேதைகளும், மாபெரும் சிந்தனுவாதிகளும் அஞ்ஞானிகளும், விஞ்ஞானிகளும் பன்னெடு காலமாக இந்தத் தேடலுக்கான விடையைக் காண்பதற்காகத் தங்கள் மூளைகளைப் போட்டுச் சலவை செய்துகொண்டிருந்தார்கள் சமுதாயச் சிந்தனுவாதிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், அரசியல் மேதைகள், தர்க்கவியலாளர், தத்துவ சித்தாந்தவாதிகள், வரலாற்ருசிரியர்கள், புதைபொருள் ஆராய்சியாளர்கள் என்று ஆயிரக்கணக்கான அறிவு ஜீவமேதைகளும் இந்தச் சமுதாயத்தைப் பற்றிய தேடலிலும் ஆய்விலும் தங்களை அர்ப்பணித்தார்கள். ஹெகல், ரூஸோ, அரிஸ்டாட்டல், வால்டேயர், சோக்கிரடீஸ், பேட்டன்ரஸல், எங்கர்ஷால், கரிபோல்டி, டூரிங் : போன்ற பலவேறு துறை உலகசிந்தனையாளர்களும் இந்தச் சமுதாயத்தின் சீர்கேடுகளையும் நடப்பியல் வாழ்க்கைச் சோகங்களையும் கட்டங்கட்டமாக விமர்சித்தார்கள் பண்டைய காப்பியங்களும், சமய சித்தாந்த நூல்களும், நமது சங்ககால பேரிலக்கியங்களும் இந்த விமர்சனத்திற்கு விதிவிலக்காயிருக்கவில்லை.

பொருள்முதல்வாதம், கப்சாவான எண்ணமுதல் வாதத்தையும் அது சார்ந்த போலியான நபுஞ்சகக் கலை இலக்கிய அரசியற் களத்தையும் முன்னையிலும் பார்க்க இன்று அறிவுலகு சார்ந்த சமூகவியல் படைப்புகள் அம்பலப்படுத்தி வருவதை அவதானிக்கலாம்.

> **இன்று தேசிய போராட்டம் ஒரு தமிழ்தேசியப் போராட்டமாக உருவெடுத்திருக்கும்போது. உருப்படியான மாற்றுவேலைத்திட்டம் எதுவும் இல்லாமல் எந்த இனவிடுதலை இயக்கமும் தீர்வுக்கு முனைவது நடைமுறைச் சாத்தியமற்றது. அப்படியாயின் இனவிடுதலைப் போர் முறை எந்த வர்க்கத்தின் அதிகாரத்தைப் பலப்படுத்தும் என்பதுதான் முக்கிய பிரச்சினை. எந்த விடுதலைப்போராட்டமும் இயக்கவியல் ரீதியாக வர்க்கம் சார்ந்திருக்கும்போது தமிழீழத்திற்கான விடுதலைப்போராட்டம் மட்டும் இதற்கு விலக்காக இருக்கமுடியாது.**

'ஒரு புரட்சிகரமான தத்துவம் இல்லாமல் புரட்சிகரமான கலை இலக்கியம் இயக்கம் என்ற எதுவும் இருக்க முடியாது இது தவிர்ந்த எதுவுமே போலியானது' என்பதையும் உலகில் அது அன்ருடம் நிருபித்தும் வருகிறது.

இக்காப்பியங்களும் சமுதாயத்தை அக்குவேறு ஆணிவேருகப் பிய்த்துப் பிடுங்கி விமர்சித்தன. பத்தொன்பதாம் நூற்ருண்டுவரை இவ்வாறெல்லாம் இவர்க ளால் இச்சமுதாயம் சமுதாய இயக்கமுறைகளும் விமர்சிக்கப்பட்டபோதும், மனித குலத்தின் தோற்றுவாய்க்கும் கருத்தியலுக்கும் சரியான ஒரு நிருபணம் காணமுடியாமலே இருந்தது. 'இப்படியாக விமர்சிக்கப்படுகின்ற சமுதாயத்தை எப்படி மாற்றியமைப்பது எப்படி மாற்றியமைக்கமுடியும்' என்று விஞ்ஞான வரலாற்றுப் பொருள் முதல்வாத இயக்கவியல் ரீதியான ஆய்வுமூலம் கண்டுபிடித்து முதன்முதல் பிரகடனப்படுத்திய மகோன்னத மேதைகள் மார்க்ஸ் மட்டும்தான், 'மாற்றமே புரட்சி' என்ற கருத்தியலை முதன்முதல் விளக்கியவர்களும் மார்க்ஸ்' –எங்பல்ஸ்தான் உயிரினத்தின் தோற்றுவாய்பற்றியும், மனித இன விருத்தியின் பரிணும வளர்ச்சியின் இயக்கவடிவம் பற்றியும், மனித தோற்றுவாய் பற்றிய டார்வினின் விஞ்ஞான பூர்வக கண்டுபிடிப்புடன் இணைந்து இச்சமுதாய மாற்றத்திற்கான புரட்சிகரச்சித்தாந்த தத்துவத்தை முதன் முதல் உலகிற்கு அறிக்கை செய்தவர்களும் மார்க்ஸ்–எங்கல்ஸ்தான் மார்க்ஸ்–எங்கல்ஸ் தோற்றுவித்த இவ்வியக்கவியற் தத்துவத்தை எதிர்த்தவர்களும், விமர்சித்தவர்களும், திட்டித்தீர்த்தவர்களும் உண்டு. ஆனுல், வென்றவர்களோ வளமான மாற்றுக்கருத்தை யதார்த்தபூர்வமாக முன் வைத்தவர்களோ எவரும் இல்லை. மார்க்ஸ்–எங்கல்ஸ் தோற்றுவித்த புரட்சிகரமான பொருள்முதல்வாதம், கப்சாவான எண்ண முதல் வாதத்தையும் அது சார்ந்த போலியான நபுஞ்சகக் கலை இலக்கிய அரசியற் களத்தையும் முன்னையிலும் பார்க்க இன்று அறிவுலகு சார்ந்த சமூகவியல் படைப்புகள் அம்பலப்படுத்தி வருவதை அவதானிக்கலாம்.

ஒரு புரட்சிகரமான தத்துவம் இல்லாமல் புரட்சி கரமான கலை இலக்கியம் என்ற எதுவும் இருக்க முடியாது இது தவிர்ந்த எதுவுமே போலியானது' என்பதையும் உலகில் அது அன்ருடம் நிருபித்தும் வருகிறது.

மற்ற எல்லா நாடுகளையும்விட சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் புரட்சிகரமான மார்க்ஷிய தத்துவம் முழுமையாகப் பேணப்பட்டதாலேயே 1917 ம் ஆண்டு சோவியத் ஒக்டோபர் புரட்சி சாத்தியமாயிற்று. கோர விறுகாயங்களிலிருந்தும், சகிக்க முடியாத பஞ்சத்திலிருந்தும் மக்களைக் காப்பாற்ற முடிந்தது. நடைமுறை சாத்தியமான வேலைத்திட்டங்களை அமுல்படுத்த முதல் ஹிட்லரின் படையெடுப்பால் ஏற்பட்ட இரண்டாவது உலக பாசிச யுத்தத்திற்கு முகங்கொடுத்து உலக மக்களையே காப்பாற்றியது. காலகெதியில் கம்யூனிஸ்ட் கட்சியில் தத்துவார்த்த பிரச்சனை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தலையெடுத்தபோது கட்சிக்குள் புரட்சிகரத் தத்துவார்த்தம் ஸ்தம்பிக்க நேரிட்டமையே பெரியளவில் சரிவு ஏற்பட்டது. புரட்சிகரத் தத்துவங்களை முழுமையாகக் கடைப்பிடியாத சீனத் தலைமை இதன் சரிவுக்கு வாகையாக இருந்ததோடு தானும் சரிந்துகொண்டது. ஆனால் அவ்வாறு உலகம்பூராவும் இப்புரட்சிகரத் தத்துவம் புதிய பரிணாமம் பெற்று விசால வெல்வதை அன்றாடம் உலகில் நிகழும் விடுதலைப்போராட்டங்களிலிருந்து கணித்துக்கொள்ளலாம். கரையடுத்த நீரிருக்கக் கானலை நாடி அலையும் மானினம்போல் சூன்யத்திலிருந்து ஞானத்தைதேடி வீணே மாயும் வேதாந்திகளையும், கற்பனாவாதக்கலை இலக்கியக்காறர்களையும், 'கலை கலைக்காக' என்னும் அகம்புறம் பாதியாத சுயவாத இலக்கியக் கோஷ்டிகளையும் மார்க்ஸிய அழகியலே சரியாக இனம் பிரித்துக்காட்டியிருக்கிறது. எனினும், பொருளார்ந்து மனசிற் தோன்றும் கற்பனையே பொருளைத் தோற்றுவிப்பதாகப் பாவனை பண்ணும் பஜனைக் கோஷ்டிகள் யதார்த்த பூர்வ உலக நடபடிகளில் நேர்மையாக இறங்கத்தயாரில்லை. ஆத்தாக்கடைசியில் 'எல்லாம் அவன் செயல்' என்ற முய்த்தாப்போடு விஷயங்களை முடித்துவிடுகின்றன. சமூகவியல் சார்ந்த யதார்த்தபூர்வ நெறி, இந்தக் கற்பனாவாதிகள் மூளைகளுக்குள் பூர்வதில்லை. இவர்களால் தோற்றுவிக்கப்பட்ட தெய்வங்களும், பூதகணங்களும், பேய்பசாசுகளும், தேவதூதர்களும் இவர்களை ஆட்டிப் படைப்பதால் இவர்கள் மக்கள் பிரச்சினைகளையும் வெறுங் கற்பனாவாதமாகவே பார்க்கிறார்கள் இவ்விதமே கலை இலக்கியத்தையும் படைக்கிறார்கள் இப்பேர்ப்பட்ட இயக்கவியல் மறுப்பு வாதிகளே சுத்த சுயம்புவான சார்புவாதமற்ற தூயமொழி கலை இலக்கியம் பற்றியும் அதிகம் உரத்துப் பேசுகிறார்கள். இந்தச் சைவப்பெரியார்களும் ஆருட ஆன்மீகவாதிகளும் சமயப் பீடாதிபதிகளும் பரப்பிய-பரப்புகின்ற கலை இலக்கியப்பட்டியலையும், சமூகவியலாளர் படைத்த-படைக்கின்ற கலை இலக்கியப் படைப்புகளையும் சீர்தூக்கி ஒப்பாய்வு செய்வதால் இது புலனாகும்.

இந்த உதாரணங்களோடு அடுத்த கட்டத்தைப் பார்ப்போம்.பௌத்த சிங்கள மக்கள் வேறு. பௌத்த சிங்களப் பேரினவாதிகள் வேறு கிறீஸ்தவச் சிங்கள மக்கள் வேறு கிறீஸ்தவச் சிங்களப் பேரினவாதிகள் வேறு. இந்துத் தமிழ் மக்கள் வேறு? இந்துத் தமிழ் இனவாதிகள் வேறு. கிறீஸ்தவத் தமிழ் மக்கள் வேறு. கிறீஸ்தவத்தமிழ் இனவாதிகள் வேறு. இனங்கள் சார்ந்த மதப்பிரிவினர்க்குள் பேரின-சிற்றினவாதம் இவ்வாறே கணிக்கப்படுகின்றது. எந்த நாட்டிலும் எந்த மக்களுள்ளும் இனவாதம் என்பது பிற்போக்கானது பௌத்த சிங்களப் பேரினவாதமோ இந்து தமிழ்ச் சிற்றினவாதமோ இரண்டுமே வடிவத்தில் வேறாகவும் சாராம்சத்தில், ஒரே விதமாக இருப்பதால் அவற்றின் 'வர்க்க நிலப்பாடும் ஒரே விதமாகவே அமைகிறது. பௌத்த

**'கொழும்பில் கம்யூனிஸ்டுகள் தமிழுக்காக இரத்தம் சிந்தினர்' என ஆகஸ்ட் 1953ல் 'சுதந்திரன்' பத்திரிகை வெளியிட்ட உண்மைச் செய்திக்காக, அதன் ஆசிரியர் எஸ்.டி.சிவநாயகம் தமிழரசுக்கட்சித் தலைமையால் எச்சரிக்கப்பட்டார். மார்க்ஸிய இடதுசாரிகளுடன் எக்காலமும் இணையாமல், சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களை ஒரே நோக்கில் பிசாசாகப் பார்க்கும் பாணியிலும், தமிழ்ச் சிற்றின வாதிகள் சிங்கள மக்களை பார்க்கும் பாணியிலும், ஒரே வர்க்க நலனே காணப்படுகிறது.**

சிங்களப் பேரினவாதத்தை ஓயாது எதிர்த்துப் போராட வேண்டியது அவசர அவசியம். இது இனவாதமாகாது. பௌத்த சிங்களப் பேரின வாதம் எந்த வர்க்கத்தின் ஆயுதம் என்பதை நுண்ணி ஆராய்ந்து எடைபோடாமல் சகல பௌத்த-கிறீஸ்தவச் சிங்கள மக்களையும் எதிர்ப்பதே இனவாதம். பௌத்த-கிறீஸ்தவச் சிங்கள பேரினவாதிகளை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்துப் போராடிய -போராடுகின்ற இடதுசாரிகள் வரலாறு இன்றுவரை முழு இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது. இதற்குக் காரணமே, இனவாதங்களின் 'வர்க்கநிலைப்பாடு' ஒரேவிதமாக இருப்பதுதான். 'கொழும்பில் கம்யூனிஸ்டுகள் தமிழுக்காக இரத்தம் சிந்தினர்' என்ற தலைப்பிட்டு அக்காலம் ஆகஸ்ட் 1953ல் 'சுதந்திரன்' பத்திரிகை வெளியிட்ட உண்மைச் செய்திக்காக, அதன் ஆசிரியர் எஸ்.டி.சிவநாயகம் தமிழரசுக்கட்சித் தலைமையால் எச்சரிக்கப்பட்டது, அதன் 'வர்க்க நிலை'க்கு எடுத்துக்காட்டு. மார்க்ஸிய இடதுசாரிகளுடன் எக்காலமும் இணையாமல், சிங்களப் பேரினவாதிகள் முழுத் தமிழ் மக்களையும் ஒரே நோக்கில் பிசாகாகப் பார்க்கும் பாணியிலும் தமிழ்ச்சிற்றினவாதிகள் முழுச் சிங்கள மக்களையும் பார்க்கும் பாணியிலும் எந்த வர்க்கத்தின் சார்புவாதம் தென்படுகிறது என்பதை இயக்கவியலாக இனங்காணுதலே விவேகம். பேரினவாதத்தைச் சிற்றினவாதம் பலவீனப்படுத்தமுடியாது. பதிலாக பலப்படுத்தும் அத்துடன் தன் புரட்சிகரத் தன்மையும் முற்றாகவே இழந்து விடுகிறது. வர்க்கப் போராட்டத்தினூடாகவே இனவிடுதலைப் போராட்டமும் நடத்தப்படவேண்டும் என்று இயக்கவியல் மார்க்கம் நடைமுறைப்படுத்தப்படும்போதுதான் அது சுலோகத் தன்மையிலிருந்து விடுபட்டு, அதிகார வர்க்கம் முற்றாகத் தனிமைப்படும் நிலையை எய்தும்.

இவ்வியல்புவாத்தைத் தவிர்த்து வெறும் கற்பனாவாதப் படைப்புகளைத் தோற்றுவிக்கும் கலைஞர்கள் எந்த வர்க்கத்தின் சார்புவாதத்தில் மூழ்கின்றனர் என்பதை உணர்வதாகத் தெரியவில்லை. பெரும்பாலான இயக்கவியல் மறுப்புவாதமாக வரும் தற்கால வெளியீடுகள் இதை நிரூபிக்கின்றன. ஜாதி, குல,இன, மதவாதமும், உயர்வு தாழ்வுச் சிக்கலும் பிடித்து இவர்களை இக்கருத்துருவக் கலை இலக்கிய வெளியீடுகள் ஆக்கிரமிப்பதால், தன்னிச்சாவதப் போக்கு மர்ம நிலையாகி மனிதகுல நிலையிலிருந்தும் சுரண்டும்-சுரண்டப்படும் நிஜமான வர்க்கப் பார்வையிலிருந்தும் விலகி, மனிதகுலதுள் இனபேதம் காட்டி உலகைச் சின்னாபின்னப்படுத்துவதையும், நாடுகள் தோறும் பாஸிஸ்டுகளையும் நாஜிஸ்டுகளையும் தோற்றுவிப்பதையும் இன்று பார்க்கமுடிகிறது. குவைத்தில் புண் வந்தால் அமெரிக்காவில் நெறிகட்டுவதும், ஈராக் குவைத் நாடுகள் தமக்குள் தீர்க்கும் பிரச்சினைக்கு அது உலகச்சண்டியனாகமாறி 'ஜனநாயக வெடிகுண்டு'களோடு குதிப்பதும் இஸ்ரேலை ஆசீர்வதித்துக்கொண்டு பலஸ்தீனியர்களின் சுயாதீனத்திற்குப் 'பேப்பே' காட்டுவதும், 'கம்யூனிஸம் செத்துவிட்டது' என்று கெக்கலிகட்டிச் சிரித்துக் கொண்டு, கல்லறையைவிட்டு இந்தக் கம்யூனிஸம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உயிர்த்தெழுந்து வருகிறது' என்று உள்ளூர அஞ்சுவதும் இப்படியாக அது தன் ஏக ஆதிபத்தியத்தைத் தக்க வைத்துக்கொண்டிருக்கும்போது, அது நீட்டிய நச்சு நாக்கில் பூச்சிகளாக அகப்பட்ட கிழக்காசிய நாடுகளில் இலங்கையும் ஒன்று என்பதைத் தெரிந்து அல்லது புரிந்து கொண்டால் தான் இலங்கையின் சகல பிரச்சனைகளையும் சரியாக எடை போடமுடியும்.

இதுபற்றி மூன்றும் உலக வறிய நாடுகளுக்கோ இந்திய தேசத்திற்கோ சீனதேசத்திற்கோ யாரும் புதுப்பாடம் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை. இந்தியாவைவிட இந்தியத்தின் இயல்புவாதம் மகாத்மாகாந்தி, நேருஜி, சுபாஸ் சந்திரபோஸ் காலத்திற்குமுன்பே உலகத்துக்குப் புலப்படுத்தப் பட்டுவிட்டது. 'இந்தியாவைப்பற்றி' என்ற ஆய்வு நூலில் மாக்ஸ் இயக்கவியலூடாக எழுதியதைப் படித்த ஒருவருக்கு இது புரியாத விஷயமாக இருக்காது பொதுவுடமை வாதம் இந்தியாவூடாக எழுதியதைப் படித்த ஒருவருக்கு இது புரியாத விஷயமாக இருக்காது பொதுவுடமை வாதம் இந்தியாவூடாகத்தான் கிழக்காசியாவில் பரவும் என்று அவர் அதில் ஆருடம் கூறவில்லை. ஆனால் பொதுவுடமை வாதத்திற்கான வளர்ச்சிக்கு அங்கு நிலவும் நிலவிய நுகத்தடி கொடுமையும் அதனை எதிர்க்கும் விவசாயப் பாட்டாளி மக்கள் வர்க்கப் போராட்டங்களுக்கு வித்திடும் வாய்ப்பை அளிக்கின்றன. எதிலும் எப்போதும் ஒரு வர்க்கச் சார்பு வாதம் இருப்பதையும், அதன் இயக்க முறையையும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஈவிரக்கமற்ற கொடூரமான சுரண்டலையும் அதில் அவர் வரலாறு பூர்வமாக விளக்கியமை மனங்கொள்ளத் தக்கது. ஏகாதிபத்திய 'ஜனநாயக வெடிகுண்டு' வெளியீடுகளைப் பொறுக்கி 'ஜனநாயக சுதந்திரம்' பற்றி விஷேச கட்டுரை எழுதும் தமிழ்ப்பெயர்ப்பாளர்கள், இந்திய சுதந்திரப்போராட்ட வரலாற்று நிகழ்வுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கின் இயக்கவியல் தத்துவம் அதன் வர்க்க நிலைப்பாட்டில் புரிந்த மகத்தான சாதனைகளை அவதானிக்கலாம்.

இனி நம் நாட்டுக்கு வருவோம்

இலங்கையின் அரசியல் இந்தியாவைப்போல் இடியப்பச் சிக்கல் நிறைந்ததல்ல இந்திய சுதந்திரப் போராட்டத்தின் சூறைக்காற்றில் ஒரு தெற்போட்டமாக இலங்கை விளங்கியதே தவிர, முழு நாடு தழுவிப்போராடிப் பெற்ற அரசியற் சுதந்திரமாகவும் அது இருக்கவில்லை. அதனால்தான் பிரிட்டிஷ் தனது பாதுகாப்புத்தளங்களைக் கையளிக்காமலே தனது ஏவலாளர் கைக்கு அதிகாரத்தைக் கையளித்துவிட்டு வெளியேறியது. டி.எஸ். சேனநாயக்க தலைமையில் அரச அதிகாரம் கையளிக்கப்பட்டது. பாதுகாப்புத்தளங்களைக் கையளிக்காமலே 'சுதந்திரம்' வழங்கியமை முக்கிய அம்சமாகும். குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரும். தரகுமுதலாளித்துவ சக்திகளும் இணைந்து அரசக்கட்டில் ஏறினர். டி.எஸ். தலைமையில் உள்ள ஐக்கிய தேசியக்கட்சியும் தமிழ்க் காங்கிரஸ்

> **தமிழ்க்காங்கிரஸின் அங்கீகாரத்தோடு மலையகத் தொழிலாளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. இது தமிழ் மக்களின் பலத்தைக் கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கையாகத் தமிழ் தலைமைகளால் பிரசாரம் செய்யப்பட்டபோதும், உண்மையில் இது இனரீதியிலும் பார்க்க 'வர்க்க நோக்கில்' இடது சாரிகளின் பலத்தைத் தகர்க்கவே கையாளப்பட்டது. இலங்கையில் மலையகத் தொழிலாளர் வர்க்கமே ஊசலாட்டமின்றி முதலாளித் துவத்துக்கெதிராகப் போராடும் முழுத்தகமை பெற்றிருந்தது.**

தலைமையில்' இருந்த ஜி.ஜீ பொன்னம்பலமும் அதில் அங்கம் வகித்தனர். மலையகத்தில் இடதுசாரிகளுக்குள்ள செல்வாக்கைக் கண்டு மிரண்ட டி.எஸ்.அரசு, தமிழ்க்காங்கிரஸின் அங்கீகாரத்தோடு மலையகத் தொழிலாளர்களின் பத்துலட்சம் வாக்குரிமையைப் பறித்து அவர்களை நிர்க்கதியாக்கிற்று. இது தமிழ் மக்களின் பலத்தைக் கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கையாகத் தமிழ் தலைமைகளால் பிரசாரம் செய்யப்பட்டபோதும், உண்மையில் இது இனரீதியிலும் பார்க்க 'வர்க்க நோக்கில்' இடது சாரிகளின் பலத்தைத் தகர்க்கவே கையாளப்பட்டது. இலங்கையில் மலையகத் தொழிலாளர் வர்க்கமே ஊசலாட்டமின்றி முதலாளித்துவத்துக்கெதிராகப் போராடும் முழுத்தகமை பெற்றிருந்ததே இதன் முக்கிய காரணமாகும். தமிழ்த் தலைமையில் ஒரு பகுதி இன ரீதியாக இதனைப் பார்த்து தமிழ்க்காங்கிரஸிலிருந்து பிரிந்து எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் சென்றது. இவ்வாறு பிறந்த தமிழரசுக்கட்சியின் தோற்றம், ஏலவே சிங்கள மகாசபை மூலம் ஜே.ஆர் ஜெயவர்தன போன்றவர்களால் 1939 வாக்கில் தோற்றுவிக்கப்பட்ட 'தனிச்சிங்களப்' பிரகடனம் 'பேரினவாதிகளுக்கும்– சிற்றினவாதிகளுக்கும் உத்வேகம் அளித்ததோடு, முதலாளித்துவ அரசையே பலப்படுத்தியது. இதனை வாருகப் பயன்படுத்திய ஏகாதிபத்தியம் இலங்கையிலும் ஓர் இளம்பிள்ளைவாதநோயைப் பரப்பி 1971ல் ஜே.வி.பி இயக்கத்தால் ஆயுதக் கலாச்சாரத்தை உருவாக்கி அதனைச் சந்தைப் படுத்திக் கொண்டே கூதல்காய ஆரம்பித்தது. இந்தக் கிளர்ச்சிக் காறர் 'உண்மையானகம்யூனிஸ்டுகள்' என்று முதலாளித்துவங்களால் வர்ணிக் கப்பட்டார்கள். பௌத்த சிங்களத் தீவிரவாதம் உசாரடைந்தது. கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்துபோன தீவிரக் கோஷ்டியில் ஒரு பகுதி ஜே.வி.பியுடன் ஒட்டிக்கொண்டது. இளம் தமிழ்த் தீவிர இயக்கங்களின் நிலை தமிழ்ப்பகுதியில் தர்மசங்கடமாயிற்று. இதனால் இயக்கங்கள் பலப்பரீட்சைக்குத் தள்ளப்பட்டன. இன்று தேசிய போராட்டம் ஒரு தமிழ்தேசியப் போராட்டமாக உருவெடுத்திருக்கும்போது, உருப்படியான மாற்றுவேலைத்திட்டம் எதுவும் இல்லாமல் எந்த இனவிடுதலை இயக்கமும் தீர்வுக்கு முனைவது நடைமுறை சாத்தியமற்றது. அப்படியாயின் இனவிடுதலைப் போர் முறை எந்த வர்க்கத்தின் அதிகாரத்தைப் பலப்படுத்தும் என்பதுதான் முக்கிய பிரச்சினை எந்த விடுதலைப்போராட்டமும் இயக்கவியல் ரீதியாக வர்க்கம் சார்ந்திருக்கும்போது தமிழீழத்திற்கான விடுதலைப்போராட்டம் மட்டும் இதற்கு விலக்காக இருக்கமுடியாது. இடதுசாரிகளுக்கெதிரான பேரின–சிற்றின வாதங்கள் முதலாளித்துவ வர்க்கம் சார்ந்து வெளிப்படுவதையும் இலங்கை இனப்பிரச்சினையிற் காணலாம். ஆக, இத்தகைய விடுதலைப் போராட்டம் அதிகார வர்க்கத்தைப் பலப்படுத்தும் போக்காகவே அமைந்து விடுகிறது.

விதேசிய–சுதேசியப் பாட்டாளி வர்க்கம் தம்மீது முதலாளித்துவ வர்க்கத்தால் சுமத்தப்பட்ட சகலவிதமான சுரண்டும் ஒடுக்குமுறை அமைப்பை நீக்காதவரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எந்தவோர் இனத்திற்கோ தேசத்திற்கோ நாட்டிற்கோ சுய விமோசனம் ஏற்படப்போவதில்லை. தொழிலாள வர்க்கம் அதன் புரட்சிகரத் தத்துவ இயக்க முறையிலிருந்து பிறழுமாயின் அது பேரின, சிற்றின, குழுவாத, மதவாத, மொழிவாத வெற்றுச் சுலோபத்துள் சிக்கிவிடுவது இயல்பு. இவ்வியல்புவாதம் ஓர் அனுகூலப் பரிணாமத் தொடர்பற்றிருப்பின், அதன் விளைவான வெளிப்பாடு இயல்பின்மையாகும். பாட்டாளி வர்க்கப் போராட்டம் இவ்வாறான பிறழ்வுகளால் சிதைவுண்டு தோற்கடிக்கப்படும்போது, அராஜகம் தலைதூக்குவது இயல்பு. இயக்கவியல் புரட்சிகரமான தத்துவத்தைக் கைவிட்டு ஒரு போராட்ட நடவடிக்கையில் இறங்கும்போதுதான் அராஜகம் தலையெடுக்கிறது. அராஜகம் புரட்சியல்ல. அராஜகத்தைத் தூண்டிவிடுவதே அதிகார வர்க்கம்தான். அது இயக்கப் பிறழ்வின் தோற்றம் அராஜகம் இயக்கத்தில் உருவானால் அது புரட்சிகரத்தன்மையை மழுங்கடிப்படுதுடன், புரட்சிகர மார்க்கத்தையே தகர்த்து விடுகிறது. இதன்பால் அது இயக்கவியலுக்கு அப்பாற்சென்று மறுப்பு வாதமாக உருவெடுத்துப் பலாத்காரம் தலைதூக்க வைத்துவிடுகிறது இயக்கத்துள்ளும் சுயவிமர்சனம் மரித்துவிடுகிறது.

புரட்சியானது கத்தி விளம்பில் நடக்கும் நிதானத்தோடு நிறைவேறும் வெகுஜனப்பாட்டாளி வர்க்கத்தின் புனித கைங்காரியம் அது முன்னைய இருத்தலை மாற்றிவிடுகின்ற வெறும் முறையே தவிர வேறல்ல. கொடுமைகளைச் சகியாமல் பெருவாரியான மக்கள் இயக்கம் எப்போ மாற்றத்தை வேண்டி நிற்கிறதோ அதுவே புரட்சிக்குத் தகமையாகித் தன்னைத் தயார்ப்படுத்துகிறது. இந்த வாய்ப்பு இந்தியாவில் மட்டுமல்ல, இலங்கையிலும் பெரிதாக இல்லை. உலகம் பூராகவும் உள்ள நாடுகளில் மதங்களுக்குள் மதங்கள் மோதியதும், மதங்களால் அதிகம் பின்னுக்குத் தள்ளப்பட்டதும், விஞ்ஞான வளர்ச்சி தொழில் நுட்ப வசதிகள் அற்ற நாடுகளாய் இந்தியாவும் இலங்கையுமே முக்கிய இடம் வகிக்கின்றன. 'மதச்சார்பற்ற' அரசியற் சட்டம் உள்ள இந்திய நாடே மதாலையப் பேரழிவையும் குரோதத்தையும் வளர்த்து விட்டிருக்கும்போது, பௌத்தமதமே அரசியற் சட்டத்தில் முக்கிய இடம் பெற்ற இலங்கையில் வர்க்கப்போர் நிகழ்வும் மழுங்கடிக்கப்படுவதும் இயல்பே இதனால்தான் பெரும்பாலும் இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் வர்க்கப்போராட்டத்திற்கான வாய்ப்பு பெரும்பாலும் இல்லாமல் இருக்கிறது. அதனால்தான், கலை இலக்கியம் உட்பட அரசியற் களமும் 'அடிகாய்ப்பழங்'களாக ஆகிவிட்டது. அவசியம் மாற்றப்படவேண்டிய சுரண்டும் முதலாளித்துவ அமைப்பை அப்படியே வைத்துக்கொண்டு, அதனைச் சீண்டி அதனையே பலப்படுத்திக்கொள்வதோடு, அதனூடாகவே ஒரு புதிய மாற்றத்தைக் காணமுனைவதானது புரட்சிகரத் தன்மையாகாது. இது வெறும் சீர்த்திருத்தம் சீர்த்திருத்த வாதத்தைச் சரியாகச்

**செஞ்சீனத்தின் புரட்சிகரத் தன்மை முற்றாகப் பிறழ்ந்து அராஜகங்களும், கோஷ்டிவாதமும் தலைதூக்கின. இவ்வாறே பின் சோவியத்திலும் நிகழ்ந்தது. உலகப் பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தைக் கட்டி எழுப்பும் பணியானது புரட்சிகர இயக்கங்களுக்குப் படிப்பினையாகவும் சவாலாகவும் உள்ளமை இதன் சிறப்பம்சமாகும். முதலாளித்துவமும் ஏகாதிபத்தியமும் பலமாக இருக்கும் வரை அடிப்படையில் புரட்சிகரமான மாற்றத்துக்குச் சீர்த்திருத்தவாதம் ஒரு கேலிக்கூத்தாகும்.**

சொல்வதானால், அது சுரண்டும் வர்க்கத்தின் நய வஞ்சகமான ஒரு தற்காப்புச் சுலோகமாகும். சீர்த்திருத்தவாதம் சுரண்டும் மார்க்கத்தின் அடிப்படை அரசியல் அம்சம்.

சிறு உதாரணம் பார்ப்போம்.

நவசீனம் அதிகாரத்தைக் கைப்பற்றிய (1950 வாக்கிலிருந்தே) காலந்தொட்டே பண்டைய இதிகாச கலை இலக்கியங்களின் கருத்தியல்கள் நிராகரிக்கப்பட்டு மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்து போயின. இருந்தும் அத்தகைய கலை இலக்கியப் பதிவுகள் பாதுகாக்கப்பட்டே வந்தன. அப்படியிருக்க 1960 கலாச்சாரப் புரட்சி தோற்றுவிக்கப்பட்டதானது புரட்சிகரத் தத்துவத்திலிருந்து பிறந்து தேசியத்தன்மைக்கு சீனத்தலைமை இட்டுச் சென்ற சீர்த்திருத்தவாதமாகும். இந்தச் சீன சீர்திருத்தம்தான் அடிப்படைமாற்றங்களையும் தடுத்தனர் கலாச்சாரப் புரட்சி என்ற போர்வையில் பழமைவாதத்திற்கும் புத்துயிரூட்டியதோடு, சிறந்த தத்துவார்த்த நெறிகளை அழிதொழிக்கவும் வகை செய்தது. இதன் பின்பே அதன் தேசியவாதம் ஏகாதியபத்தியத்தைப் பரப்பி பலப்படுத்தியது. சோஷலிச முகாம் பலவீனப் படுத்துவதற்கான பங்களிப்பை நவசீனமும் இவ்வாறு தான் ஆரம்பித்தது.

தேசியவாதத்தை கலாசாரப்புரட்சி முன் வைத்து நிகழ்த்திய அதிகாரம் செய்யும் ஒரு குழுவைப் பலப்படுத்துவதற்காகியதே தவிர, புரட்சிகரத் தத்துவத்தையோ, மாற்றத்தையோ, பாட்டாளிவர்க்க அதிகாரத்தையோ பலப்படுத்தத் தோற்றுவிக்கப்பட்டதாக இருக்கவில்லை. இதன்பேறாக செஞ்சீனத்தின் புரட்சிகரத் தன்மை முற்றாகப் பிறழ்ந்து அராஜகங்களும், கோஷ்டிவாதமும் தலைதூக்கின. இவ்வாறே பின் சோவியத்திலும் நிகழ்ந்தது. இந்நிகழ்வுகளே இன்று மார்க்ஸிய சிந்தாந்தம் உலகரீதியாக உத்வேகங்கொள்ள வழிவகுத்துமுள்ளன. உலகப் பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தைக் கட்டி எழுப்பும் பணியானது புரட்சிகர இயக்கங்களுக்குப் படிப்பினையாகவும் சவாலாகவும் உள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

முதலாளித்துவமும் ஏகாதிபத்தியமும் பலமாக இருக்கும் வரை அடிப்படையில் புரட்சிகரமான மாற்றத்துக்குச் சீர்த்திருத்தவாதம் ஒரு கேலிக்கூத்தாகும். எதிரியின் பலத்தைக் குறைத்து மதிப்பிடுவது அதைவிட மோசடியானது. அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒரு காகிதப் புலி' என்ற மாவோ குழுவின் கோஷமும் அப்படியானதுதான் இத்தகைய சீர்த்திருத்தவாதம் கேலிக்கூத்து என்பதற்குச் செஞ்சீனச் சரிவும், சோவியத் சிதைவும் தக்க சான்று. இத்தவறுகள் சீர்செய்யப்பட்ட வேண்டியனவே தவிர, குழுவாதக் கட்சி அதிகாரத்தைக் காவாந்து பண்ணுவதற்கான சீர்த்திருத்தவாதங்களையல்ல கட்சிக்குள் அப்படி ஒரு அதிகாரத்துவம் இருக்கவும் முடியாது. கட்சியின் கட்டுப் பாட்டோடு வேலைத்திட்டத்தை ஜனநாயகபூர்வமாக மக்களிடம் சரியாக எடுத்துச் செல்லப்பட்டிருப்பின் இத்தகைய தவறுகள் நேர்ந்திரா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேலும் சில உதாரணங்களைப் பார்ப்போம்.

தென்னிந்தியாவில் திராவிடக் கழகத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம்வரை 'பார்ப்பானிய எதிர்ப்பு' என்ற கோஷத்தின் கீழ்புரிந்த தீவிர சீர்த்திருத்தவாதம், சுரண்டும் முதலாளித்துவ அமைப்பை மேலும் பலப்படுத்தியதே தவிர, பழமை வாய்ந்த பிற்போக்குச் சமுதாய அமைப்பின் எந்த ஒரு புதிய மாற்றத்தைக்கூட அதனால் செய்யமுடியவில்லை. முதலாளிய வர்க்கத்தை தி.மு.கழகம் பலப்படுத்தியதுமன்றி, இதனைப் பாதுகாக்கவும், 'கடமை', கண்ணியம், 'கட்டுப்பாடு' கொண்டு சேவகம் செய்தது. இதன் விளைவுதான் இன்று தமிழகம் கலை இலக்கிய அரசியலைக் கலாசார ரீதியாகவும் புழுத்த நாற்றமெடுக்க வைத்திருக்கிறது. சீர்த்திருத்தவாதக் கருத்துக்களைச் சுகமாகச் சொல்லிச் சேமமாகச் சிறை சென்ற தலைவர்கள், எந்த வர்க்கத்தின் கைக்கூலிகளாகச் செயற்பட்டார்கள் என்பதும் நாடறிந்த அரசியல் வரலாறு. இந்தக் கழகத்தில் இருந்து எதையும் செய்யமுடியாது என்று உள்ளூர உணர்ந்த சி.என்அண்ணாத்துரை சீன ஆக்கிரமிப்பின் போது இந்திய தேசத்தின் குரலை வரித்துக்கொண்டார். அவர் இழப்பு இன்னும் சரியாக நிரப்பப்பட்டதாக இல்லை.

இன்று தமிழகம் என்றுமில்லாதவாறு தன் ஆரோக்கிமான சமூகவியற் கலை இலக்கியச் சிந்தனையையே பெருவாரியாக இழந்துவிட்டது. கருத்தாழம் மிக்க இரண்டுவசனம் பேசத்தெரியாத அடுக்குமொழி வசனகாறர்களும் சீழ்பிடித்த சினிமா நடிகர்களும் தமிழகத்தைக் கழிசடைக் கலைக்கோலமாக்கியதோடு கலைகளையும் முழு வணகமாக்கிவிட்டனரென்ருல், சீர்த் திருத்தவாதம் எப்படிச் சீர்கெட்டுப் போய்விட்டது என்பதைப் பார்க்கலாம். தாய்மார்கள் தம் அரும்பெரும் செல்வர்களான கைக்குழந்தைகளை நஞ்சூட்டிக் கொன்று வாழ்வு ஓட்டும் கோரத்திற்கும் ஆளாகிவிட்டது.

யாழ்ப்பாண மக்களை இலங்கை அரசு பட்டினி போட்டுக் குண்டுவீசி அழித்தும் அகதிகளாக்கியபோதும் அங்கே எந்தத் தாயானவளும் தன்குழந்தைச் செல்வங்களை இப்படி ஈனத்தனமாகக் கொன்றதில்லை. தமிழகத்திலோ எந்தப் போர் முறையுமின்றியே சினிமாச் சுலோகத்துள் தாய்க்குலமும் சிக்குண்டு இந்த அவல நிலைக்கு ஆளாகிவிட்டதென்ருல், சீர்த்திருத்தவாதம் எத்தகைய சீர்கேடாகத் தலைவிரித்தாடுகிறது என்பதை அவதானிக்கலாம். அங்கே சீரழிந்த சினிமாச் சினி இன்று ஐரோப்பாவில் 'கலைப்பணி' ஆற்றுகிறது.

கலை இலக்கியங்களும் தமிழகத்தில்தான் அதிக வியாபாரப் பண்டங்களாகிவிட்டன. ஆளையாள் புளுகுவதும் கலையின் 'சாதனை' யாகிவிட்டது. தொண்ணூற்றெண்பது சதவீதமான இன்றைய தமிழ்சினிமா இதற்குச் சான்று. தமிழகத்தின் ஈயடிச்சான் காப்பிக் கலை இலக்கியங்கள் இலங்கைத் தமிழ்க்கலை இலக்கிய உலகத்தையும் விட்டுவைக்கவில்லை. இவ்வாருன சினிமாத்தனக் கலை இலக்கியங்கள் ஈழத்திலும் தற்போது ஐரோப்பிய நாடுகளிலும்

**'பார்ப்பானிய எதிர்ப்பு' என்ற தீவிர சீர்த்திருத்தவாதம், சுரண்டும் முதலாளித்துவ அமைப்பை மேலும் பலப்படுத்தியதே தவிர, பழமை வாய்ந்த பிற்போக்குச் சமுதாய அமைப்பில் எந்த ஒரு புதிய மாற்றத்தைக்கூட அதனால் செய்யமுடியவில்லை. முதலாளி வர்க்கத்தை தி.மு.கழகம் பலப்படுத்தியதுமன்றி, இதனைப் பாதுகாக்கவும், 'கடமை', கண்ணியம், 'கட்டுப்பாடு' கொண்டு சேவகம் செய்தது. இதன் விளைவுதான் தமிழகம், கலை இலக்கிய அரசியலைக் கலாசார ரீதியாகவும் புழுத்த நாற்றமெடுக்க வைத்திருக்கிறது.**

கங்குகரையின்றிப் படையெடுத்திருப்பதால் சமூகவியல் யதார்த்தக் கலை இலக்கியங்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. சமூகவியற் கலை இலக்கியக் களத்தை நாடாதோர் கையில் ஐரோப்பிய நாட்டுப் பணம் புரளப் புரள சினிமா ரசிகர்களுக்கென்றே கலை நிகழ்ச்சிகள் என்ருகிவிட்டன. இந்தக் 'கலை ஆர்வம்' கொண்டவர்களும் 'கலைஞர்களாகி'விட்டனர். இவர்களின் 'சாதனை'களால் கலையுலகம் தவண்டையடிக்கிறது சீர்த்திருத்த வாதம் பணம்பறிக்கும் வித்தையில் இதுவும் ஒன்று.

சீர்த்திருத்தவாதம் பற்றி மேலும் சில உதாரணங்கள் இடது சாரிகளை 'பாராளுமன்றத் திரிபு வாதிகள்' என்று நகிடதம் பண்ணும் அதிதீவிரவாதிகள், சதாகாலமும் பாராளுமன்றம் செல்வதற்கெனக் கட்சி ஆணையையும் மீறக் கொழும்பு மாநகர சபை ஆசனத்திற்காகத் தேர்தலில் ஒழுங்காகக் குதித்து மும்முறை தோல்வி கண்டனர். அமரர் என் சண்முகதாசன் கட்சிக்குள் கோஷ்டி சேர்த்துச் செய்த சீர்த்திருத்தம் இது அவரோடு இணைந்திருந்த பதினைந்து ஆண்டுகாலம் இயங்கிய அனுபவம், அவர்பால் பெருமதிப்புக் கொள்ள வைத்தது ஆனுல்,அவர் கோஷ்டி சேர்த்துக் கண்ட பலன் முதலாளித்துவ சக்திக்கும்,ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியான பூர்ஷவா மிதவாதக் கூட்டுக்கும் பலம் சேர்த்ததுதான் அவரோடு போனவர்களிற் சிலர் கட்சிக்கு வந்தனர்.– சிலர் சுதந்திரக்கட்சியில் இணைந்தனர். இது சோக வரலாறு அதிதீவிரவாதம் எப்போதும் அதிதீவிர வலதுசாரி வாதத்துக்கே இட்டுச் செல்லும் என்பதற்கு இது சிறுசான்று. இத்தகைய போக்கால் உலகப் பாட்டாளி வர்க்கத்தையும் புரட்சிகரப் போராட்டத்தையும் பேசிய தீவிரவாதிகள் இன்று அதிதீவிர வலது சாரியத்தில் வந்து விழுந்துவிட்டனர்.

சோஷலிச முகாமை எப்படியாவது தகர்க்கவேணும் என்ற ஏகாதிபத்தியத்தின் உளவுஸ்தாபனமான மூளே, கிஸிங்கர் வாயில ாகக் கிளர்ந்து 'மாவோ சிந்தனை'யாக உருவெடுத்து நவசீனத்தின் தேசியவாதக் குழுவோடு அரங்கேற்றப்பட்ட விறுத்தம் காலஞ்சென்று வெளிச்சமான சங்கதி. 'சோவியத் நாய்கள், சோவியத் திரிபுவாதிகள்' என்று தங்கள் எஜமானர் மனங்குளிரப் பேசிப் 'பொச்சம்' தீர்க்காத தீவிரவாதக் கோஷ்டி அக்காலம் இருந்ததில்லை. கண்மூடித்தனமான சோவியத் எதிர்ப்பு எங்கு கொண்டு செல்லும் என்பதை உணராத இளம்பிள்ளைவாதம் ஈற்றில் எப்படி ஆயிற்று? சோவியத் உந்துதலால் உருவாக்கப்பட்ட நவசீனத்துக்கு 'சோஷலிஸ முகாமுக்குத் தலைமை தாங்கவேண்டுமென்ற ஆசை 'திடீர்' என்று உதித்தது? 'என்று அன்று அர்த்தத்தோடு வியூசோஷி கேட்கப்போய், ஈற்றில் அந்த மேதையும் 'கலாசாரப் புரட்சி'யாளர்களால் 'திரிபுவாதி' யாக்கப் பட்டார் இத்தகைய பிறழ்வுகளால் சீனவில் எழுந்த சீர்த்திருத்தக் கோஷமே தேசியவாதம். இந்தத் தேசியவா தந்தான் அண்டை நாடான இந்திய தேசத்தின் மத்மோகன் எல்லைப்பிரச்சனைக்கு 'யுத்தமூலம்' பரிகாரம் காண முனைந்தது. தேசியவாதம் மார்க்ஸிய சித்தாந்தத்திற்கு முழுமையாகவே எதிரானதல்ல. தேசியவாதம் முதலாளித்துவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமைப்புக்குள் ஒரு கட்டம் வரை முற்போக்கு அம்சமாகவிருக்கலாம். முதலாளித்துவ அமைப்புத் தகர்க்கப்பட்ட பின் தேசியவாதம் முழுப் பிற்போக்கானதாகும். சீனுவில் ஏழு கட்சிகள் கூட்டணி அமைத்து அதிகாரத்தைக் கைப்பற்றிய பின், பலம் வாய்ந்த கம்யூனிஸ்ட் கட்சிக்கே தேசிய வாதத்தின் மூலம் வேட்டு வைத்த தீவிரக் குழுவின் செயலை இன்று சீனு அனுபவிக்கிறது ஆயினும், அது தன் தவறுகளைத் திருத்தி மீண்டெழும் என்பது உறுதி இயக்கவியல் நோக்கில் சமுதாயத்தையோ இயக்கத்தையோ பார்க்கத் தவறின் அனர்த்தங்களே விளையும் என்பதற்கு இவ்வாறு ஆயிரக்கணக்கான உதாரணங்களைக் கூறலாம். 'புரட்சியை ஏற்றுமதி' செய்யாமல் தவறுகளைத் திருத்தி முன்னேறும் தத்துவ பலங்கொண்ட மார்க்ஸிஸ அழகியலுக்கு இது ஒன்றும் புதிதல்ல.

உதட்டிலே சர்வதேசயமும், உள்ளத்தில் தேசியவாதமும் மனசுள் ஜாதியப் பெருமையும், போக்கில் குல வரலாறுமாக இடம் பொருள் ஏவல் அறிந்து சந்தர்ப்பவாதிகளாக எவரும் எப்போதும் இருப்பதைப்பற்றி யாரும் எப்போதும் அசட்டையாக இருப்பதில்லை. 'சந்தர்ப்பவாதம்' என்ற 'சாணக்கிய'த்தைக் காட்டப் பட்டபாடு உலகத்துக்குத் தெரியும். ஒருவர் சந்தர்ப்பவாதியாகவோ பிற்போக்குவாதியாகவோ இருக்க அவருக்குச் சுதந்திரம் உண்டு ஆனுல் அவர் அப்படி எப்போதும் இருக்கமுடியாது. பிரசார பலம் முதலாளித்துவத்தின் கையில் வெவ்வேறு கூறுகளில் இருப்பது உண்மைதான் ஆனுல், மக்கள் எல்லோரும் எப்போதும் மூடர்களாக இருப்பதில்லை அவர்கள் இனங்கண்டு கொள்வார்கள்.

இனி இன்றுள்ள முக்கிய இலங்கைப் பிரச்சினைக்கு வருவோம்.

வடகீழ் மாகாணம் தமிழ் மக்கள் செறிந்து பரந்து வாழும் பாரம்பரியப் பிரதேசம் என்பதை எவரும் அறிவர் இப்பிரதேசத்தின் தமிழ் மக்களுள் இனப்பிரவினை இருந்ததே இல்லை இந்து சமயத்தவர்கள், இஸ்லாமிய சயத்தவர்களான முஸ்லீம் மக்கள், கிறீஸ்தவ சமயத்தவர்கள், சமயாச்சாரம் அல்லாதவர்கள் என்று தமிழ் பேசும் மக்கள் செறிந்த பிரதேசமே வடகீழ் மாகாணம் பிரிவினையற்ற தமிழ்பேசும் மக்களின் பிரதேசத்திற்குப் புதிதான 'வடகீழ இணைப்பு' என்ற பதச் சேர்க்கை எழவேண்டிய எந்தவித அவசியமுமே இல்லை. 'மொழிகள் மூலம் இனங்கள் கணிக்கப்படுகின்றன.' என்று முதலே குறிப்பிட்டிருப்பது கவனிப்புக்குரியது. மொழியால் பிரிந்திருந்தாலல்லவா இணைப்புப் பற்றிப் பேசவேண்டும்? தமிழ் மக்கள் இணைந்து ஒன்ருக வாழ்ந்த பிரதேத்திற்கு, வேருேர் மொழிபேசும் மக்கள் தீர்ப்பு வழங்க உரிமை இல்லை. தமிழ்பேசும் மக்கள் ஒன்ருக வாழ்ந்த பிரதேசத்திற்கு மாருக எந்தவரைவிலக்கணம் கூறவேண்டி அவசியமும் இல்லை. 'வடகீழ்இணைப்பு' என்ற பதத்தினை ஆளும் வர்க்கமும் அதன் கைக்கூலிகளுமான பேரினவாதிகளும் வலுவில்லங்கப்பட்டு வலிந்து சொல்வதானது 'வடகிழக்கு இணையக்கூடாது என்ற கெம்பர் எண்ணத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் உளவியல்ரீதியாகவும் இன ரீதியாகவும் தோற்றுவிக்க எடுத்த முழுச் சந்தர்ப்பவாதமாகும். இச்சாணக்கியம்

> உதட்டிலே சர்வதேசியமும், உள்ளத்தில் தேசியவாதமும் மனசுள் ஜாதியப் பெருமையும், போக்கில் குல வரலாறுமாக இடம் பொருள் ஏவல் அறிந்து சந்தர்ப்பவாதிகளாக எவரும் எப்போதும் இருப்பதைப்பற்றி யாரும் எப்போதும் அசட்டையாக இருப்பதில்லை. 'சந்தர்ப்பவாதம்' என்ற 'சாணக்கிய'த்தைக் காட்டப் பட்டபாடு உலகத்துக்குத் தெரியும். ஒருவர் சந்தர்ப்பவாதியாகவோ பிற்போக்குவாதியாகவோ இருக்க அவருக்குச் சுதந்திரம் உண்டு ஆனுல் அவர் அப்படி எப்போதும் இருக்கமுடியாது.

இங்ஙனமாயின் வடகீழ் பிரதேசத்துக்கான இணைப்புக்கு ஒரு புதிய 'நிலமீட்சி' அல்லது 'பிரதேச மீட்சிப் போராட்டத்தைத் தோற்றுவிக்க வழி சமைப்பதாகவே முடிந்துள்ளது. 'ஒரு மொழி இரு நாட்டை உருவாக்கும்' என்ற டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா 'தனிச் சிங்களச் சட்டத்'தை எதிர்த்துப் பேசியதை நினைவு கூர்தல் நன்று இவர் தமிழர்களுள்ள 2? சரத்தை நீக்கியதிலிருந்து ட்ரொஸ்கிய சந்தர்ப்பவாதம் புலப்படுகிறது.

தமிழ்ப்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை பிரதேச சுயாட்சிமூலமே சாத்தியமாகும் அது வடகீழ் மாகாண இணைப்பின் ஒரே நிர்வாகத்திற்குட் படுதலால்தான் சாத்தியமாகும் 1957ல் எஸ்.டபிள்யு.ஆர் டி. பண்டாரநாயக்கா –எஸ்.ஜே.வி செல்வநாயகம் ஒப்பந்தம் இதை வலியுறுத்துகிறது. இது தவிர, வடகீழ் மாகாணப் பிரதேச நிலமீட்சிப் போராட்டம் வெடிக்குமாயின் வெடித்துவிட்டதற்கு, இன்றுள்ள ஆளும் வர்க்கத்தின் சந்தர்ப்பவாதச் சாணக்கியமே காரணமாக அமையும். முற்றிலும் சர்தர்ப்பவாதமற்ற நேர்மையான பண்டா–செல்வா ஒப்பந்தத்தின் ஆறு அம்சத் திட்டத்தில் ஒன்று 'வடகீழ் மாகாணம் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசம்' என்பதையும், 'அப்பிரதேசத்தில் ஏலவே குடியமர்த்தப்பட்ட சிங்கள மக்கள் தத்தம் பிரதேசங்களுக்குக் குடிபெயர்க்கப்படுவார்கள்' என்பதையும் 'இதன் பின் சிங்கள மக்கள் குடியேற்றம் முற்ருக நிறுத்தப்படும்' என்பதையும் அழுத்தமாகக் குறிப்பிடுகிறது. முக்கிய ஆறு அம்சங்களைக்கொண்ட இந்த ஒப்பந்தம் இரகஸ்யமாகச் செயற்பட்டதல்ல அது ஒன்றுதான் இலங்கையில் பகிரங்கமாகச் செய்யப்பட்ட ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தமே முழுத் தமிழ்பேசும் மக்களாலும் இடது சாரிகளாலும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்களில் ஒருவரான அமரர் பொன் கந்தையா பருத்தித்துறை எம்.பி. இந்த ஒப்பந்தத்தை உருவாக்க இரு முனைப்பாளராகச் செயற்பட்டமை மனங்கொள்ளத்தக்கது. ஆனுல், அந்த அருமையான ஒப்பந்தத்தைக் கர்ண கடூரமாக எதிர்த்து நாடுபூராவும் கிளர்ச்சி செய்ததும், 'சிங்கள மக்களை தமிழர்களுக்குப் பண்டாரநாயக்கா விற்றுவிட்டார்' என்ற சிங்கள பௌத்த வகுப்புவாதத்தைக் கிளறிவிட்டுக் 'கண்டி யாத்திரை' செய்ததும் ஜே.ஆர் அவர்களும், அவர் தலைமையில் உள்ள யூ.என்.பி.யும் ஆகும். இந்த ஒப்பந்தத்தை விளக்கி ஆதரவுதிரட்டி நாடுபூராவும் பண்டாரநாயக்கா சூருவளிப்பிரசாரம் செய்த அதேவேளை, இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்ட செல்வநாயகம் தலைமை எந்த ஒரு ஆதரவுப் பிரசாரம் செய்யாமல் மௌனித்திருந்தமை முக்கிய கவனிப்பிற்குரியது. இரண்டுங் கெட்டான் நிலையில் இக்கொடிய நெருக்கடியால் அந்த ஒப்பந்தம் 'ரத்துச்செய்விக்க' நேர்ந்தது. மிகப் பரிதாபமான விஷயம் என்னவென்ருல், இந்த ஒப்பந்தத்தைச் செய்த தமிழரசுக்கட்சித் தலைமையே முதலாளித்துவ யூ.என்.பியுடன் இணைந்து 1962ல் மாவட்டசபைக்காக 'டட்லி செல்வா' ஒப்பந்தம் இரகஸ்யமாகச் செய்ததோடு அதன் ஆட்சிபீடத்திலும் சேர்ந்து


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டட்லி–ஜே.ஆர் அதிகாரத்துக்கும் பலம் சேர்ந்தது. சட்டத்தரணி எம் திருச்செல்வம் கியூ.சி. உள்நாட்டு அமைச்சராக பதவி ஏற்றார் தமிழ்த்தலைமையின் மிதவாதச் சந்தர்ப்பவாதமும், ஜே.ஆர் –டட்லியின் சாணக்கியமும் இப்படி ஆயிற்று. 'இவர்களின் சந்தர்ப்பவாதச் சாணக்கியம் தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்தது' என்ற பச்சை உண்மையை இன்றுவரை எந்தச் சோதிட சிகாமணிகளும் தமத் குறிப்புகளில் சொல்லவில்லை முதலாளித்துவப் பிரசாரப் பத்திரிகைகளும் சொல்லவில்லை.எனினும் சந்தர்ப்பவாதமும் இயக்கவியல் மறுப்புவாதச் சாணக்கியமும் எந்தத் தமிழ் மக்களையோ நாட்டையோ காப்பாற்றவில்லை என்பதே இலங்கை அரசியலின் கறைபடிந்த யதார்த்த வரலாறு.

நிகழ்ச்சிகளைவிட நிகழ்வுகளின் முன்னனி பின்னணியைச் சரியாகக் கணிப்பதில்தான் அந்த நிகழ்ச்சிகள் தவறு சரியா என்ற கருான முடிவையும் அர்த்தத்தையும் காண முடியும். இதுதான் இயக்கவியற் பார்வை. இந்தப் பார்வை எல்லோருக்கும் ஒரேவிதமாக இருப்பதில்லை என்பது உண்மையே.

1983 ஜூலை யாழ் திருநெல்வேலியில் வெடித்த குண்டு 'சுதந்திரக்குண்டு' என்று எழுதியவர், அதிகாரவர்க்கத்தின் நிலையையும், அதன் எதிர் நிலையையும் சரியாக எடைபோட்டால் அது சுதந்திரக்குண்டுதானா என்பது புலனாகும். கொரில்லாப் போர் முறையைச் சரியாக அறிமுகப் படுத்திய வியட்நாம் மக்கள் தலைவர் ஹோஷிமின் தலைமை ஏகாதிபத்தியத்தையே கதி கலங்க ஓட வைத்தது. ஒரு தயார் நிலை இல்லாமல், மக்கள் பாதுகாப்பு மயப்படாமல், ஒரு 'திடீர்' நிகழ்வு நடக்குமாயின், அது ஏதும் அறியாத பாவப்பட்ட மக்களுக்கு எத்தகைய அழிவு நாசத்தை உண்டாக்கும் என்பதையும் ஆளும் வர்க்கம் இனரீதியாக ஏலவே என்ன நிலை எடுத்திருந்தது என்பதையும் முறையாகக் கணித்திருந்தால் அந்தக் குண்டு வெடிப்பு நடந்திருக்காது. இதில் ஒரு சமூகவியல்பு வாத இயக்கவியல் முறை கையாளப்படாததாலேயே மறுநாள் வெளியேறிய இராணுவத் தர்பாரைக் கட்டுப்படுத்த முடியாமல் இயக்கங்கள் இருந்தன. இதனால் வீதிகளில் கண்ட நிண்ட இளைஞர்கள் நாய்கள் போல சுட்டுத் தள்ளப்பட்டார்கள். இது சரியா பிழையா என்று ஆராய முதலே சமூகவியல் பற்றிய போதம் இல்லாத எழுத்தர்– அதுவும் அரசாங்க உத்தியோகத்தில் அரச கருத்தைப் பரப்பும் பெரிய பதவி வகுப்பவர் அதனை எப்படி வர்ணித்தமை எந்த வர்க்கத்தின் பாலானது? அந்தக குண்டு எந்த இயக்கத்தால் வெடிக்கப்பட்டது என்றும் இதுவரை பொதுமக்களுக்கு சரியாகத் தெரியாது. இதனையும் கணக்கில் எடுக்காது எழுதுவது வேடிக்கை. ஆனால் கலை இலக்கியம் அரசியல் விவகாரம் அப்படி ஒன்றும் வேடிக்கையான விசயம் அல்ல, அரங்கேற்றம் முடிந்த பின் சோடனைகளைக் கழற்றிப் போட்டு வீட்டு மூலையில் கிடக்கும் நடன மங்கையும் அல்ல. அது அனைத்து மக்கள் வாழ்க்கையுடன் பிணைந்தது. இந்த நேசிப்பின் உள்ளார்த்தம் இல்லாத சமூகவியல் எழுத்தாளருமல்லர்.

இன்னோர் முக்கிய விசயத்தை பார்ப்போம். 'தனிச்சிங்களம்' என்ற பதத்தை

> **1939ல் ஜே.ஆர் 'சிங்களம் இலங்கையின் ஒரே அரச கரும மொழியாக இருக்க வேண்டும்' என்று தனது சிங்கள மகாசபையில் முன்மொழிந்து இயக்க ரீதியாக கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1953ல் யூ.என்.பி களனி மாநாட்டில் 'சிங்களம் மட்டும்' சட்டத்தைக் கொணர்தல் என்று அன்றைய பிரதமராக இருந்த சேர்.ஜோன்.கொத்தலாவல முன்மொழிந்து பின்பு நாடு பூராவும் ஜே.ஆர் அவர்களுடன் பிரசாரம் செய்தார்.**

இலங்கையில் முதன் முதல் பிரயோகித்ததே திரு.ஜே.ஆர்.ஜெயவர்த்தன தான். 1939ல் ஜே.ஆர் 'சிங்களம் இலங்கையின் ஒரே அரச கரும மொழியாக இருக்க வேண்டும்' என்று தனது சிங்கள மகாசபையில் முன்மொழிந்து இயக்க ரீதியாக கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1953ல் யூ.என்.பி களனி மாநாட்டில் 'சிங்களம் மட்டும்' சட்டத்தைக் கொணர்தல் என்று அன்றைய பிரதமராக இருந்த சேர்.ஜோன்.கொத்தலாவல முன்மொழிந்து பின்பு நாடு பூராவும் ஜே.ஆர் அவர்களுடன் பிரசாரம் செய்தார். அதே ஆண்டுவாக்கில் யாழ்ப்பாணம் வந்து ஊர்காவற்றுறை கொக்குவில் கிராமங்களில் அதை அவர் மறுத்ததோடு, 'சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்குவேன்' என்று கூறும் நிலைக்குத் தள்ளப்பட்டார். அப்போதும் இடதுசாரிகளின் 'சிங்கள தமிழ் சம அந்தஸ்துப் போராட்டம் நாடு பூராவும் உக்கிரமடைந்திருந்தது. அவ்வாண்டு தான் இடதுசாரிகள் தமிழ்மொழிக்குச் சம அந்தஸ்துரிமைப் போரில் கொழும்பு மாநகர சபை மண்டபத்தில் இரத்தம் சிந்தினார்கள். இடதுசாரிகளுக்கு எதிராக கொழும்பில் துறைமுகக் காடையர்களை ஏவி விட்ட யூ.என்.பி கொத்தலாவலை அரசு யாழ்ப்பாணத்தில் சந்தர்ப்பவாதம் பேசியது. ஊர்காவற்றுறையிலும் கொக்குவிலில் சேர்.ஜோன் கொத்தலாவலைக்குத் தமிழரசுத் தொண்டர்கள் உட்பட பிரமுகர்களாலும் மலர்களாலான ராஜகிரீடம் சூட்டப்பட்டது. ஒரு பக்கம் பண்டாரநாயக்கவுக்கும் மறுபக்கம் இடதுசாரிகளுக்கும் 'வேட்டு' வைக்க கொத்தலாவலை இப்படி இரட்டை நாக்கால் பேசினார். அவரின் சந்தர்ப்ப வாதத்துக்குத் தான் யாழ்ப்பாணத்தில் ராஜமகுடம் சூட்டப்பட்டது. ஆனால் அவரின் இரட்டை வேடம் 1956ல் எடுபடவில்லை. பீட்டர், என்.எம்., கொல்வின், விக்கிரமசிங்க, லெஸ்லி போன்ற இடதுசாரித் தலைவர்கள் பருத்தித்துறையிலிருந்து மாத்தறை வரையில் சம அந்தஸ்துக் கோரிக்கையை உக்கிரப்படுத்திக் கொண்டிருந்தார்கள். 1956ல் சேர் ஜோன் கொத்தலாவலை–ஜே.ஆர் யூ.என்.பி அரசு வீழ்ந்தது. எட்டு ஆசனங்களை மட்டும் கைப்பற்றியதோடு அது படுதோல்வி கண்டது. ஜே.ஆர் அவர்களும் சேர் ஜோன் அவர்களும் இணைந்து ஏலவே விட்ட சந்தர்ப்ப வாதப் பாணத்தையே பண்டாரநாயக்கவும் 1956ல் தனிச்சிங்கள சட்டமாகப் பாவித்தார். அதனால் அதிக சங்கடத்துக்குள்ளாகியது. இடதுசாரிகளால் அது கணிசமாகப் பலித்தது. எனினும் அதன் தவறை உணர்ந்த இதே பண்டாரநாயக்க அதே பாராளுமன்றத்தில் 'தமிழுக்கு நியாயமான உரிமை' என்ற சட்டத்தையும் அது தமிழ் மக்களின் மொழிக்குத் தீர்வாகாது என்று உணர்ந்த பின் 1957ல் 'பண்டா செல்வா ஒப்பந்தம்' என்ற ஆறு அம்சத் திட்டம் அடங்கிய ஒப்பந்தத்தையும் செய்தார். கலை, இலக்கியம், அரசியல் என்று எத்துறையாயினும் சந்தர்ப்பவாதம் என்ற சாணக்கியம் எப்போதும் கனகாலம் எடுபடாது என்பதை அழுத்த இவற்றை உதாரணத்திற்கு குறிப்பிட நேர்ந்தது.

இப்பொழுது பெருவாரியாக இலங்கைச் சமூகவியலின் இயக்கவியல் அரச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ியல் வரலாறு தெரியாதவர்களே பழமைவாத புராணக் கதைகள் மூலம் புதிய சிந்தனையைத் தோற்றுவிக்கப் போவதாக முனைகின்றனர். என்னதான் முழங்கினாலும் சங்க கால இலக்கியப் பேரரசுகள் இனி ஒருபோதும் எங்கும் வரப் போவதில்லை. சேர சோழ பாண்டியர்களும் துட்ட கைமுனு எல்லாளனுக்கும் விஞ்ஞான வளர்ச்சி எப்போதோ விடை கொடுத்து விட்டது. ஆனால் அதிதீவிரப் போக்கின் இயந்திரப் பார்வையாளர் 'தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தினை' 'உண்மையான மார்க்ஸிய லெனினிஸ்டுகள்' ஆதரிக்கிறார்கள் என்று ஏதோ புதிதாக சொல்வதுபோல பாசாங்கு செய்வது தான் புதுமை. ''தமிழ்த் தேசியத்தின் சுய நிர்ணய உரிமைப்' போராட்டத்தை 1958 பருத்தித்துறையில் நடந்த கம்யூனிஸ்ட் மாநாட்டில் ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோடு, இன்றும் அதற்கு துணையாக நிற்பதும் இதே இடதுசாரிக் கட்சியாகும். இருட்டடிப்பு செய்யப்பட்ட அமரர் சரத் முத்தெட்டுவேகவின் பாராளுமன்ற உரை தாங்கிய நூலில் இதனைப் பார்க்கலாம்.

கலை இலக்கிய இயக்கவியல் பற்றி இனிச் சிறிது பார்ப்போம்.

சகல கலைகளினதும் கர்த்தா மனிதனே என்பதை அறிவோம். அரசியலில் இருந்து துப்பாக்கி பிறப்பதாகவும் துப்பாக்கியிலிருந்து அரசியல் பிறப்பதாகவும் முரண்பட்டுச் சொல்வதும் மனிதன் தான். ஒவ்வோர் முரண்பாட்டுக்கும் ஒவ்வோர் வர்க்க நோக்கம் இருப்பதே இதற்குக் காரணம். தற்காலம் தமிழ் கலை இலக்கிய வளர்ச்சியை விடத் தான்தோன்றித் தனமான இச்சாவாத குழுவாதங்களே வளர்ச்சி கண்டு வருகின்றன. இலக்கிய நயத்தையோ இலக்கியக் கோட்பாடுகளையோ விமர்சிக்க ஆற்றல் இல்லாதவர்கள் இலக்கியக் கோட்டுபாடுகளை முன்வைப்பவரையே தாக்குவது ஒரு மனநோயாகி விட்டது. ஒரு சிறுபிள்ளைக்கும் இலக்கியத்தை விமர்சிக்கும் உரிமையுண்டு. ஆனால் சிறுபிள்ளைத் தனமான கிறுக்கல் விமர்சனம் ஆகாது. சிறுபிள்ளைத்தனமான இந்த விமர்சனம் அந்த உரிமைக்கு வேட்டு வைத்து விடுகிறது. எதிர்ப்பது வேறு. விமர்சிப்பது வேறு. சமூகவியல் பற்றிய ஞானம் கிஞ்சித்தும் இல்லாத ஒருவர் எப்படிஒரு சமூகவியல் பற்றிய படைப்பை விமர்சிக்க முடியாதோ அது போன்றே இயக்கவியல் வரலாற்றுப் பொருள்முதல்வாதப் படைப்புகளை ஒரு கற்பனா லோக இலக்கியவாதியால் விமர்சிக்க முடியாது. ஒரு விமர்சகனுக்குக் கற்பனாவாத இலக்கியங்கள் பற்றியும் பொருள்முதல் வாத இலக்கியங்கள் பற்றியும் ஞானம் அல்லது அனுபவம் இருந்தாலே இலக்கியத்தையும் அவ்வத்துறையிலும் விமர்சிக்கக் கூடிய தகைமையுடையவனாகிறான். இத்தகைய விமர்சனங்கள் மிக ஒறுப்பாக இருப்பதால் தான் சிறந்த இலக்கியங்கள் தற்காலம் மிக ஒறுப்பாகவுள்ளன.

சும்மா கண்ணை மூடிக் கொண்டு காரணம் காரியம் எதுவும் இல்லாமல் உன்னத இலக்கிய வாதிகளைத் திட்டித் தீர்த்துத் தனக்கும் இலக்கிய அந்தஸ்துத் தேடப் பொச்சடிக்கும் பாமரத் தனம் மனநோயாளி ஒரு தொற்றுவியாதி போல விமர்சன

**தற்காலம் தமிழ் கலை இலக்கிய வளர்ச்சியை விடத் தான்தோன்றித் தனமான இச்சாவாத குழுவாதங்களே வளர்ச்சி கண்டு வருகின்றன. இலக்கிய நயத்தையோ இலக்கியக் கோட்பாடுகளையோ விமர்சிக்க ஆற்றல் இல்லாதவர்கள் இலக்கியக் கோட்டுபாடுகளை முன்வைப்பவரையே தாக்குவது ஒரு மனநோயாகி விட்டது. ஒரு சிறுபிள்ளைக்கும் இலக்கியத்தை விமர்சிக்கும் உரிமையுண்டு. ஆனால் சிறுபிள்ளைத் தனமான கிறுக்கல் விமர்சனம் ஆகாது. சிறுபிள்ளைத்தனமான இந்த விமர்சனம் அந்த உரிமைக்கு வேட்டு வைத்து விடுகிறது. எதிர்ப்பது வேறு.**

ஆற்றலில்லாதவர்களிடம் நிலவுகிறது. இலக்கிய மேட்டில் பவனி வருவதற்கான ஆசை தற்காலம் ஆற்றலில்லாதவர்களை ஆட்டிப் படைப்பதால் அவர்கள் தாமும் வளராமல் ஆரோக்கிய இலக்கியத்திற்கும் வழிவிடாமல் நந்தி போல குறுக்கே நிற்கிறார்கள். இது அரசியல் களத்திலும் ஒரு நோயாகி விட்டது. சும்மா இடதுசாரிகளைத் திட்டித் தீர்த்து நக்கல் பண்ணினால் மேலைநாட்டு மார்க்ஸிய விரோதிகளிடமிருந்து பெரிய மவுசும் சம்பாதிப்பும் கிடைக்கலாம் என்ற சிறுபிள்ளைவாதச் சுயவணிகத் தனம் அடங்கியிருப்பதை அவதானிக்கலாம். மார்க்ஸியம் படியாமல் படிக்க விரும்பாமல் படிக்க முடியாமல், மார்க்ஸியமே புரியாமல் மார்க்ஸியம் புரிந்தததாக பாவனை காட்டுபவர்கள் மார்க்ஸிய விரோதிகளுடன் ஒன்றிப்பதும் கவனத்திற்குரியது.

தாம் பிறந்த சொந்த மண்ணில் கலை இலக்கியப் பிராப்தமோ ஆளுமையோ இலக்கிய முகவரியோ இலக்கியப் பந்தமோ இல்லாத பலர், ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சக்கரை என்னும் தோரணையில் ஐரோப்பாவில் 'திடீர்திப்' பெண எல்லாம் தெரிந்ததாக நடிப்பதை கலை இலக்கிய உலகம் அறியும். அதேவேளை காத்திரமான கலை இலக்கியவாதிகளையும் அறியும். முன்னையவர்களுக்கு சீழ் பிடித்த தமிழ்ச் சினிமா கைகொடுக்கும் துணையாக இருப்பதையும் இலக்கிய உலகம் அறியும். ஆனால் பிரான்சும் மேலைய நாடுகளும் பெரும் இலக்கிய மேதைகளை தோற்றுவித்த நாடுகள் என்பதை நினைவிற் கொள்ளல் சேமம்.

நடைமுறை யதார்த்த வாழ்வுக்கு ஒவ்வாததும், கருத்தியலை முறையாக முன்வைக்காமலும் ஆளுக்கொரு வணிக ஏடும், பெயருக்கொரு சஞ்சிகையும், இடத்திற்கொரு கோஷ்டியுமாக பிரிந்து, நடப்பியல்வாதமாக வெளியிடுவதெல்லாம் பெரும்பாலும் குழுவாதப் போக்கான பழிவாங்கும் இயக்கமுறை தழுவிய பிரசாரங்களே தவிர, சமூகவியற் கலை இலக்கிய நயமான தாக்கமுள்ள படைப்புகள் அல்ல.

**எந்த நிலையிலும் சரியான இயக்கவியல் கருத்தைச் சார்ந்த 'இறுக்கமான, கட்டுப்பாடான அமைப்பு' இல்லாமல் வீண் எழுந்தமான கோஷ்டிவாதமான எந்த கலை இலக்கிய இயக்கமும் அதன் சமுதாயக் கடமையை ஒரு போதும் நிறைவேற்ற மாட்டாது. நடைமுறைச் சாத்தியமான தர்க்கவியற் கருதுகோள் ஒன்றே சிறந்த கலை இலக்கியப் படைப்புகள் மேலோங்குவதற்கான உரைகல். மக்கள் மயப்படாத குசுகுசு மந்திரத்தால் கலை இலக்கியம் ஒருபோதும் வளர்ச்சியடைய மாட்டாது. ஓயாது விமர்சனம் வேண்டும். 'நடைமுறையில்லாத தத்துவம் மலட்டுத்தனம். தத்துவம் இல்லாத நடைமுறை குருட்டுத் தனம்' என்னும் இந்த இயக்கவியற் பார்வையைச் சகல கலை இலக்கியப் படைப்பாளரும் மனசிருத்தல் நன்று.**


www.tamilarangam.net



# "போராடத் துணிந்தவரே சுதந்திரமாய் வாழ்வர்"

சத்தமற்ற வீடு
எட்டும் திக்கில்
தொங்கி விரியும் வலை
சிக்கும்வரை சிலந்தி.

ஒரு மகவை முன்பும்
இன்னோர் மகவை பின்பும்
காவு கொடுத்துவிட்டு
அப்பாவின் மலமெடுத்து
மீண்டிருந்த அம்மா.
முன்னொரு மகவோடு பாதியும்
பின்னொரு மகவோடு மீதியும்
வேம்பின் பலகையில் எலும்பு பதியும்
விதியின் படுக்கையில் அப்பா.
அச்சத்தில் அலறவும்
பிரிவில் கதறவும்
மொத்தத்தில் உதிரவும்
தயாரான அம்மா.



அன்னியமற்ற வழமையான பகலில்
எல்லோரும் எப்போதும் போல.
அப்போது அவனும் கதைத்திருந்தான்
ஆதலால்
வீழ்ந்தான் வீதிக்கரையே புழுதி தணிய.
புழுதியில் மணமும்
வீதியில் பிறவும்
மௌனம் தொடர.

போராடச் சுதந்திரமும்
சுதந்திரமாய்ப் போராடவும்
இன்னும் மீள மீள எழும் குரலில்
பின்னவள்.
இழுத்துச் செல்லப்பட்டாள்.

சலம் முட்டும் முனகலில் அப்பா
அம்மா எழுந்தாள்.

பா.அ.ஜயகரன்
10.09.95



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறுகதை

# வேலை நிறுத்தம்

அலாரம் அடித்தவுடன் துள்ளி எழுந்தான் குரு. நீண்ட நாட்களுக்குப் பிறகு, அலாரம் அடித்து எழுந்து வேலைக்குப் போவ தென்பது சந்தோஷமாக இருந்தது. பக்கத்தில் படுத்திருந்த அவன் மனைவியும் ஒருமுறை முழித்து நேரத்தைப் பார்த்துவிட்டு மறுபடியும் போர்வையை இழுத்துக் கொண்டாள். வழக்கப்படி அவள் இன்னும் ஒரு மணி நேரம் படுத்திருப்பதற்கு அவகாசம் இருந்தது. அதற்குப் பின் எழுந்து தான் பிள்ளையை வெளிக்கிடுத்தி பாடசாலைக்கு கூட்டிக் கொண்டு போய் விடவேண்டும். வேலை இல்லாத இந்த ஒரு வருடத்தில் அவனும் அவளும் இந்த வேலையை மாறி மாறி செய்திருக்கிறார்கள்தான் ஆனால் இன்று அது அவளின் கடமை என்ற நினைப்பில் அவளைத் தொந்தரவு செய்யாமல் தனக்கு பிடித்தமான பாட்டை முணுமுணுத்துக் கொண்டே பாத்ரூமுக்குள் நுழைந்தான்.

கடந்த ஒரு வருடமாக வேலை தேடுவதே ஒரு வேலையாகிவிட்டது அவனுக்கு பக்ரறி, ரெஸ்றனற், ஆபிஸ், கடை என்று ஏறாத படிகளில்லை என்ன வேலை என்றாலும் பரவாயில்லை என்று நினைத்தான் எல்லா இடங்களிலும் விண்ணப்பத்தை தா, கூடிய சீக்கிரம் அழைப்பு அனுப்புகின்றோம் என்று நாகரீகமாக சொல்லுவார்கள். ஆனால் விண்ணப்பம் நிரப்பி கை வலித்தது தான் மிச்சம், ஒவ்வொரு விண்ணப்பம் நிரப்பும் போதும் ஒரு நம்பிக்கை துளிர் விடும். சோசல்காரியின் (தர்மப்பணம் தரும் அலுவலகர்) நீள் முகம் ஸ்படிகமாக வந்து போகும். வேலை ஒன்று கிடைத்து விட்டால் அவளைப்பார்ப்பதையும், அவளின் கேள்விகளையும் தவிர்த்து விடலாம் என்று எவ்வளவோ முயன்று தான் பார்க்கிறான், ஆனால் தோல்விதான் மிஞ்சுகிறது. உன்னுடைய தர்மப்பணம் வேண்டாம் என்று துணிந்து சொல்ல முடியுதில்லையே என்ற வருத்தம் அவனை பலமுறை வாட்டி எடுத்திருக்கிறது. வீட்டு வாடகை வீட்டு செலவு இன்ன பிற சமாச்சாரங்களுக்கு என்ன செய்வது என்ற கேள்விக்கு விடை காணமுடியாமல் தவிப்பது அன்றாட நிகழ்வாகிவிட்டது. அதைவிட சோசல்காரி ஒவ்வொரு முறை அவனைக் கூப்பிடும் போதெல்லாம் நீண்ட விளக்கம் தருவாள். கல்வியைப்பற்றியும் அவனுடைய தராதரப்பத்திரம் பற்றியும் விசாரிப்பாள், இன்னும் நன்றாக முயற்சி பண்ணி வேலை தேடு என்று அறிவுரை வேறு கூறுவாள். அவளோடு அதிகம் வாதாடவும் அவன் விரும்புவதில்லை. நாங்கள் எங்கள் ஊரில் வாழ்ந்த நிலைமைகள் இவர்களுக்கு விளங்கப் போவதில்லை இவர்கள் அகதிகள் என்ற படிமத்தில் வைத்து தான் எங்களைக் கணக்கிடுவார்கள் எனவே வாதாடுவதில் பிரயோசனமில்லை என்ற கணிப்பு அவனுக்கு, இருந்தாலும் இது ஒரு நல்ல சேவை இதைத்துஸ்பிரயோகம் செய்யும் எங்களுடைய பலரின் நடவடிக்கையில்தான் சோசல்காரியும் கெடுபிடியாக



குமார் மூர்த்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருக்கிறாள் என்று நண்பர்களோடு பேசும்போது சோசல்காரிக்காக பரிந்து பேசுவாள்.

குரு இயற்கையிலேயே மென்மையான சுபாவமுடையவன், அதிகம் பேச மாட்டான். அவனுடைய அப்பா அரசாங்க உத்தியோகத்தராக இருந்தபடியால் வாழ்க்கை சுமூகமாக நகர்ந்திருந்தது, உயர்கல்வி முடித்ததும் பல்கலைக்கழகம் கிடைத்து விட்டது அவனுடைய பல்கலைக்கழகம் முடியும் தருணத்தில் தான் தனி நாட்டுக்கான ஆயுதப் போராட்டம் கால் கொள்ள ஆரம்பித்திருந்தது. தொடர்ச்சியாக நாடு முழுவதையும் கலவரத்தீ பற்றிபிடித்தது. இது பல்கலைக்கழக மட்டத்திலும் பெரும் வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருந்தது, அவனளவில் அவன் வன்முறைகளை வெறுத்த மனோபவம் கொண்டிருந்தாலும் வேறு வழியில்லை, ஒட்ட மொத்த நலன் முக்கியம், என்ற வலுவான காரணங்கள் இருப்பதாக பட்டதும், ஆயுதப்போராட்டத்தை அவள் மனம் அங்கீகரித்தது. அதோடு அதை தீவிரமாக ஆதரிக்கவும் தொடங்கினான், பட்டப்படிப்பு முடிந்து வெளியேறிய கொஞ்சக் காலத்தில் அவனுக்கு ஆசிரிய வேலையும் கிடைத்துவிட்டது. இதற்காகவேகாத்துக் கொண்டிருந்த மாமனாரும் கொஞ்சமும் தாமதிக்காமல் மகளை அவனுக்கு கட்டி வைத்துவிட்டார். ஆயுதப் போராட்ட வடிவமும், குறையும், கோணலுமாக பல குழுக்களைப் பிரசவித்ததும் அவைகளின் தாண்தோன்றி தனமான போக்கும், கொலை கொள்ளை, பகமை என்று நீளத் தொடங்கியதும் அவனால் ஜீரணிக்க முடியவில்லை. அதைவிட ஒவ்வொன்றுக்கும் குருட்டு நியாயத்தை தேடிக் கொண்டும் "பொடியள் செய்தாள் சரியாத்தானிருக்கும்" என்ற அங்கீகாரத்தையும் கொடுத்துக் கொண்டிருக்கும் சனங்களையும் நினைக்க அவனுக்கு ஆத்திரமாக வரும். அவனோடு படித்தவர்கள் மட்டத்திலும் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் எல்லாம் இதை சாதாரணமாகவே எடுத்துக் கொண்டனர். இந்த காலகட்டத்தில் இப்படியான சம்பவங்கள் சில நடக்கத்தான் செய்யும், இவைகளை பெரிதுபடுத்துவதில்

"அக்கா உங்கட முகத்துக்காக விடுகிறம் இல்லையெண்டால் தெரியும் தானே... என்று முடிக்க முதல் ஐயோ என்று கரையும் கண்ணையும் மூடிக் கொண்டாள், அவள் மனக்கண்முன் றோட்டோரமாகவும் மின்கம்பத்திலும் கண்ட உடல்கள் வந்து போயின. அக்கா உங்கட பொறுப்பிலதான் விடுகிறம் பிறகேதும் பிரச்சனை கதைச்சாரெண்டால் தேடிவரவேண்டாம், சொல்லிப் போட்டன்.

அர்த்தமில்லை, என்பதோடு சீன ரஷ்யா என்று ஒவ்வொருநாடுகளாக துணைக்களைத்து நியாயப்படுத்துவார்கள். இது நொண்டிச்சாட்டு இதை இப்படியே விட்டால், இன்னும் மோசமாகத்தான் வரும், ஆதரிப்பதற்கிருந்த உரிமை, திருத்துவதற்கும் உண்டு, என்ற அவன் குரல் உரக்கத் தொடங்கியதும் அந்த உரிமை எவருக்கும் இல்லை என்று ஒவ்வொரு குழுவும் அவனுக்கு உணர்த்த தலைப்பட்டன, கடைசியில் உனக்கு "உயிர்ப்பிச்சை தருகிறோம் ஓடிப் போ" என்று ஒரு குழு பெரியமனது பண்ணியது. அதற்குப்பின் கனடா வந்து சேர்ந்ததை ஒரு கதையாக எழுதலாம்.

சோசல்காரியிடம் பல்லுக்காட்டுவது. வேலை கிடைக்கவில்லை, கையில்ப் பணம் இல்லை என்ற மன ஆதங்கம் வரும்போது , நியாயமில்லை என்றாலும் மனைவியோடு மல்லுக்கட்டுவான், எவ்வளவு கௌரவமான வாழ்க்கை வாழ்ந்தோம், எங்கள் நாடு எவ்வளவு நல்ல நாடு, வெளிநாடென்று வந்து படும்பாட்டைப்பாருமன், எல்லாம் உம்மாலதான். என்று முடிக்க முதல் அவள் பதில் சூடாக வரும்,

எங்கட நாடு நல்ல நாடுதான் யாரு இல்லையெண்டு சொன்னது. உங்கட வாய்தான் சரியில்லை ஒவ்வொண்டுக்கும் நியாயம் கதைக்க வெளிக்கிட்டியள். திருத்தப் போறாராம் – உங்க திருத்த வெளிக்கிட்ட கனபேர் மண்ணுக்க போயிற்றினம், படிச்சால் மட்டும் போதுமா? கடைசியில என்ன நடந்தது. ஆரும் வகுப்புக்கூட படியாத ஆறுமுகத்தரின்ட கடக்குட்டி இல்லாட்டி, இப்பநான் அந்திரட்டி, ஆட்டத் திவசம் என்டு ஐயருக்குப் பின்னால அலைஞ்சு கொண்டிருப்பன்'.

இதைக் கேட்டதும் அவனுக்கு அவள்மேல் சிரிப்பும் பச்சாதாபமும் வரும், நவீன சாவித்திரியாகி அவள்பட்ட பாட்டை அவனென்ன ஊரே கதைத்தது.

பெரிசாக அவன் ஒரு தப்பும் பண்ணவில்லை ஹர்த்தால் அது இது என்று அடிக்கடி பாடசாலையை மூடச் சொல்கிறீர்களே! மாணவர்கள் கல்வி எல்லாம் குழம்பி விடுகிறது, தரப்படுத்தல் என்று கூக்குரலிட்ட நாங்கள், இருக்கிற கல்வியையும் சீர்குலைக்கலாமா? என்று கேட்டு விட்டான், அதோடு மாணவர்களையும் கண்டிப்பாக வகுப்புக்கு வரச் சொல்லி தேட்டுக் கொண்டான். ஒரு கிழமையாக அவனை எங்கு பிடித்து வைத்திருக்கிறார்கள் என்று அவள் ஊர் ஊராக தேடி, நாங்கள் இல்லை அவர்கள்தான், இல்லை அவர்கள் இல்லை இவர்கள்தான் என்று அலைந்து கடைசியில் ஒரு வழியாகத்தான் கண்டுபிடித்தாள். பொறுப்பாக இருந்தவனிடம் அழுது குழறி, எப்போதோ தோட்டத்தில் வந்து வேலை செய்த ஆறுமுகத்தாரின் பொடியன்தான் என்று கண்டுபிடித்து, பழயவைகளை அவனுக்கு ஞாபகப்படுத்தி தன் ஞாபகசக்தியை வியந்து, கடைசியில் அவன் ஒருவாறு போனால் போகுது என்டு மனமிரங்க

"அக்கா உங்கட முகத்துக்காக விடுகிறம் இல்லையெண்டால் தெரியும் தானே... என்று முடிக்க முதல் ஐயோ என்று கரையும் கண்ணையும் மூடிக் கொண்டாள், அவள் மனக்கண்முன் றோட்டோரமாகவும் மின்கம்பத்திலும் கண்ட உடல்கள் வந்து போயின. அக்கா உங்கட பொறுப்பிலதான் விடுகிறம் பிறகேதும் பிரச்சனை கதைச்சாரெண்டால் தேடிவரவேண்டாம், சொல்லிப் போட்டன். என்று கண்டிப்பான எச்சரிக்கையோடு, அவனைக் கைத்தாங்கலாக கூட்டிக் கொண்டு வந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

விட்டாள்.

பாத்ரூமுக்குள் இருந்து வெளியில் வந்தவனுக்கு குசினிக்குள் இருந்து வந்த பொரியல் வாசனை மூக்கைத் துளைத்தது. இப்போதே ஒரு பிடி பிடிக்கத் தோன்றியது. அவசரமாக உடுப்பை மாற்றிவிட்டு வந்தான் மனைவி தந்த கோப்பியை உறிஞ்சிக்கொண்டே அவள் முகத்தை பார்த்தான். வெற்றியோடு திரும்பி வாருங்கள் என்று சொல்வது போல் இருந்தது. சாப்பாட்டுப் பெட்டியை எடுத்துக் கொண்டு புறப்படும் போதே மனம் எல்லாம் நிறைந்திருந்தது. பஸ்ஸில் போகும் போது வேலை நிறுத்தம் செய்யும் அரச ஊழியர்கள் அரச கட்டிடத்திற்கு முன்னால், பதாகைகளைத் தாங்கிய வண்ணம், வட்டமாக சுற்றி சுற்றி வந்தார்கள் பார்ப்பதற்கு அழகாக இருந்தது, பக்கத்தில் இருந்த வெள்ளையர் ஒருவர் எட்டிப்பார்த்துவிட்டு, இப்போதைக்கு வேலை நிறுத்தம் முடியாது போலிருக்கின்றது" என்று இவனைப்பார்த்து கவலையோடு சொன்னார். இவனும் அதை ஆமோதிப்பது போல் அவரைப்பார்த்து தலையாட்டினான். மூன்று நாட்களுக்கு முன்தான் வேலை நிறுத்தம் தொடங்கியிருந்தது. அதை ரி.வியில் காட்டினார்கள்,

'வேலை இல்லாதவனுக்குமட்டும்தான் பிரச்சனை இருக்கிறது, என்றில்லை, வேலை உள்ளவனுக்கும் பிரச்சனை இருக்கத்தான் செய்யும், அவர்கள் உரிமைக்கு அவர்கள் போராடுகிறார்கள்'.

என்றதோடு அதைப்பற்றி அவன் அதிக அக்கறை காட்டவில்லை, ஆனால் அந்த வயதான வெள்ளையரின் அக்கறை லேசாகத் அவனுக்கு உறைத்தது. இருந்தும் மனம் உடனே மாறி தனக்கு இப்போது கிடைக்கப்போகும் வேலையாவது கொஞ்சக்காலம் நிரந்தரமாக இருக்கவேண்டும் என்று மனம் பிராத்தித்துக் கொண்டது. கனடாவுக்கு வந்த புதிதில் பெரிய எதிர்பார்ப்புகளுடன் ஒரு பக்ரறியில் சேர்ந்திருந்தான், விசுவாசத்தோடு வேலையும் செய்தான், ஆனால் ஒருவருடம் முடியமுதல் அவர்கள் பக்ரறியை மூடிக்கொண்டு மெக்சிக்கோவுக்கு பறந்து விட்டார்கள், அதற்குப்பின் நாலு இடங்கள் மாறியாகி விட்டது எந்த வேலையும் நிரந்தரமில்லை என்ற உண்மை மட்டும் ஒட்டிக்கொண்டது. இருந்தும் வேலைதேடுவதை அவன் நிறுத்தவில்லை, கடந்தவாரம் வேலை தேடிய பொழுது தான் இந்த பக்ரறி அவன் கண்களில் பட்டது. முதல் நுழைய தயக்கமாகத்தான் இருந்தது. பின் "வேலையா தந்துவிடப் போகிறார்கள் சும்மா கேட்டுப் பார்ப்போம் : என்ற எண்ணத்துடன் தான் உள்ளே நுழைந்தான். வரவேற்பில் இருப்பவள் இவனைக் கொஞ்சம் அக்கறையோடு விசாரித்து விட்டு விண்ணப்ப படிவத்தை நிரப்பிதரச்சொல்லி, வாங்கிக் கொண்டு உள்ளே போனாள், அரைமணிநேரத்தில் வந்து உனக்கு வசதி என்றால் திங்களில் இருந்து நீ வேலைக்கு வரலாம் என்றாள், முதலில் அதிர்ச்சியாக இருந்தாலும் சரி என்று ஒப்புக் கொண்டான்.

பக்ரறி வாசலிலேயே பஸ் அவனை உதிர்த்து விட்டுப் போனது, மீண்டும் ஒரு முறை உடையையும் தலையையும் சரி செய்து கொண்டான், வரும் போது கொஞ்சம் நல்ல வேலையாக தந்தால் பரவாயில்லை என்று நினைத்துக் கொண்டான், பக்ரறியை நெருங்கியதும் என்ன வேலை என்றாலும் பரவாயில்லை என்று மனம் எதற்கும் தயாரானது. வரவேற்பில் அதே பெண் உட்கார்ந்திருந்தாள், அருகில் சென்றதும் சிரித்துக் கொண்டே காலை வணக்கம் சொன்னான், அவளும் பதில் வணக்கம் சிரித்துக் கொண்டே சொன்னாள், ஒரு நிமிடம் கழித்து மன்னிக்க வேண்டும் "மிஸ்ரர், தற்காலிகமாக பக்ரறியை மூடியுள்ளோம் காரணம் அரச ஊழியர்களின் வேலை நிறுத்தம் அது முடிந்ததும் தான் பக்ரறியை திறக்க முடியும், திறந்ததும் கண்டிப்பாக உங்களைக் கூப்பிடுகிறோம். என்றாள், இறைச்சி பார்சல்.பண்ணும் பக்ரறிக்கும் அரசஊழியருக்கும் என்ன சம்பந்தம் இருக்கும், என்று புரிந்து கொள்ள சிரமப்பட்டவனாக புருவத்தை நெரித்தான் அதைப்புரிந்து கொண்ட அவள் இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளை அரச பரிசோதகர்கள் பரிசோதிக்க வேண்டும், அவர்கள் இப்போது வேலை நிறுத்தம், எனவே மாடுகளும் வெட்டப்படுவதில்லை, என்று விளக்கினாள். ஒரு கணத்தில் எல்லாமே புரிந்தது மாதிரி இருந்தது அவனுக்கு. நல்லது வேலை நிறுத்தம் முடிய வருகிறேன். என்று அவளுக்கு கூறிவிட்டு வெளியில் வந்தான். விதம் விதமான மாடுகளும் கன்றுக்குட்டிகளும் மனக்கண்முன் வந்து போயின. ஏதோ ஒரு குற்ற உணர்வு மாதிரி நெஞ்சு கனத்தது. வேலை நிறுத்தம் நீடிக்க வேண்டும் என்று அவனையும் மீறி மனம் பலமுறை சொல்லிக் கொண்டது. திரும்பி பஸ்ஸில் வரும்போது வேலை நிறுத்தம் செய்பவர்களை வலு அக்கறையோடு எட்டிப்பார்த்தான்.

கையில் இருந்த சாப்பாட்டுப் பெட்டி கனத்தது, பசிவேறு வயிற்றைக் கிள்ளியது. வீட்டுக்கு வந்ததும் உடுப்பைக் கூடக் கழற்றாமல் சாப்பாட்டு பெட்டியைத் திறந்து சாப்பிடத் தொடங்கினான், மனைவிக்கு அவனைப்பார்க்க ஆச்சரியமாக இருந்தது. ஒன்றும்புரியாமல் சிறுநேரம் குழம்பினாள். பின் வேலைக்கு என்ன ஆச்சு என்றாள் மெதுவாக "நான் இப்போதைக்கு வேலை நிறுத்தத்தில் நிற்கிறேன்" என்று சொல்லவும் புரையேறவும் சரியாக இருந்தது அவனுக்கு புரிந்ததும் புரியாததுமாக அவனுடைய தலையில் இரண்டு தட்டு தட்டி தண்ணீரை எடுத்துக் கொடுத்தாள் அவள்.

□

> வேலை நிறுத்தம்,
> மாடுகளும் வெட்டப்படுவதில்லை,
> எல்லாமே புரிந்தது மாதிரி இருந்தது அவனுக்கு. விதம் விதமான மாடுகளும் கன்றுக்குட்டிகளும் மனக்கண்முன் வந்து போயின. ஏதோ ஒரு குற்ற உணர்வு மாதிரி நெஞ்சு கனத்தது. வேலை நிறுத்தம் நீடிக்க வேண்டும் என்று அவனையும் மீறி மனம் பலமுறை சொல்லிக் கொண்டது. திரும்பி பஸ்ஸில் வரும்போது வேலை நிறுத்தம் செய்பவர்களை வலு அக்கறையோடு எட்டிப்பார்த்தான்.

www.tamilarangam.net



# குழந்தைகளும் பொதுமக்களும்

ஆக்கிரமிப்பாளர்களும், அவர்களை எதிர்ப்போர்களும் ஓர் யுத்தத்தில் ஈடுபடும் போது தாம் செய்யும் காரியத்தை நீதிக்காகவும், ஒடுக்குமுறைக்கு எதிராகவும் செய்வதாக பொதுவாக நியாயம் கூறிவர். உலக யுத்த சரித்திரங்களை நாம் கூர்ந்து நோக்கின், சரித்திர வில்லன்கள் கூட தாம் செய்யும் யுத்தம் மக்களுக்கான நீதியை நிலைநாட்டுவதற்காகவே செய்யப்படுகின்றது என்ற வாதத்தை முன்வைப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான காரணத்தைக் கொடுக்காவிடின் மக்கள் வில்லன்களுக்காகவோ, கதாநாயகர்களுக்காகவோ யுத்தத்தில் ஈடுபடப்போவதில்லை. ஹிட்லர் கூட தான் செய்யும் யுத்தம் நீதிக்கும், ஒடுக்குமுறைக்கு எதிராகவும் செய்யும் போராட்டம் எனத் தனது மக்களுக்கு கூறியும், அவர்கள் அதனை அப்பாவித்தனமாக நம்பவும் செய்தான். அதாவது பொதுவாக யுத்தங்கள் பொது மக்களின் நலன்களுக்காகவே செய்யப்படுவதாக கூறப்படும் நியாயம் அசைக்க முடியாத, கேள்விக்கு உட்படுத்த முடியாத உண்மையாக எல்லா யுத்தச் சூழ்நிலையிலும் கூறப்படும். இவ்வாறு கூறப்படும் நியாயங்கள் சரியானவைதானா? யுத்தங்களில் குறிப்பாக சமகால யுத்தங்களில் பொதுமக்களுக்கு என்ன நடக்கின்றது என்ற புள்ளி விபர உண்மைகளும், அதன் விளக்கங்களும் மக்களுக்கு பொதுவாக யுத்தப் பிரியர்களால் வைக்கப்படுவதில்லை.

சமகால யுத்த வீரர்களில் பாரிய அளவு கொல்லப்படுவது இராணுவ வீரர்களும், மாவீரர்களும் அல்ல மாறாக பொது மக்களே. அதிலும் குறிப்பாகக் குழந்தைகளே.





Dr. மைக்கல் ரனரின் கணிப்பின்படி 20ம் நூற்றாண்டு யுத்தங்களால் பாரிய அளவில் பாதிக்கப்பட்டவர்கள் பொது மக்களே. 50ம் ஆண்டுகளில் இடம் பெற்ற யுத்தங்களில் 52 சத வீதமானவர்களும், 80 களில் இடம் பெற்ற யுத்தங்களில் 85 சத வீதமானவர்களும் பொது மக்கள். கடந்த தசாப்தத்தில் 2 மில்லியன் குழந்தைகள் ஆயுதப் போராட்டங்களில் கொல்லப் பட்டனர். கிட்டத்தட்ட 4 முதல் 5 மில்லியன் வரையிலான குழந்தைகள் முடமாக்கப்பட்டனர். 12 மில்லியன் குழந்தைகள் வளரும் வயதில் வீடு வாசல்களை இழந்தனர்.

யுத்த அனர்த்தங்கள், அகோரங்களின் மத்தியில் குழந்தைகள் வாழ்ந்ததால், அவர்களின் கண்களின் முன் தமது தந்தை, சகோதரர்கள் கொல்லப்படுவதையும், தாய், சகோதரிகள் மானபங்கப் படுத்தப்படுவதையும் பலவந்தமாகப் பார்க்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டார்கள். பல மில்லியன் குழந்தைகள் இவ் அனுபவங்களால் உளமுறிவுக்கு உட்படுத்தப் பட்டார்கள். யுத்தத்தின் இடைவிடாத தொடர்ச்சியும், யுத்த பிரதேசங்களில் உளவியலாளரின் தட்டுப்பாடும் இக் குழந்தைகளை நிரந்தர உளவியல் பிச்சனைகளுக்கு உட்படுத்துகின்றது.

குழந்தைகளுக்கான உரிமைகள் சாசனம், அரசாங்கங்கள் யுத்த காலகட்டங்களில் குழந்தைகளைப் பக்குவத்துடன் பாதுகாக்க வேண்டும் என வற்புறுத்துகின்றது. கூடவே குழந்தைகளை இராணுவ வீரர்களாகப் பாவிப்பதையும் தடை செய்துள்ளது. குழந்தைகளை இராணுவ வீரர்களாக அல்லது போராளிகளாகப் பாவிப்பது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், மொசாம்பிக் யுத்தங்களில் இடம் பெற்றன. இவ் அனுபவம் இலங்கையில் வாழும் குழந்தைகளுக்கு புதிதான ஒன்றல்ல.

UNCHR இன் புள்ளி விபரக் கணிப்பின் படி உலகெங்கும் வாழும் மக்களில் 23 மில்லியன் பொதுமக்கள் அடவாடித் தனத்திற்கும், வன்செயல்களுக்கும் பயந்து தமது வீடு வாசல்களை விட்டு ஓடி அகதிகளாகியுள்ளனர். இதைவிட 26 மில்லியன் பொதுமக்கள் பலவந்தமாக அகதியாக்கப்பட்டனர். இவ் அகதிகள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் தமது நாட்டை விட்டு வெளியேறவில்லை. இவர்களில் 50 சத வீதமானவர்கள் 18 வயதிற்கு உட்பட்டவர்கள்.

உலகெங்கும் வாழும் அகதிகளில் அரைப்பங்கு, அதாவது 23 மில்லியன் மக்கள் தாம் வாழ்ந்த நாட்டைவிட்டு தப்பியோடி பிறநாடுகளில் வழ்கின்றனர். UNCHR புள்ளிவிபரக்கணிப்பின்படி 13 நாடுகளில் வாழும் அகதிகள், இடம் பெயர்ந்தவர்களின் தொகையில் 50 சத வீதத்திற்கும் மேலானவர்கள் 18 வயதிற்கும் உட்பட்டவர்களே.

**From: Afghanistan 2, 800, 000**

**To:**

| | |
|---|---|
| Iran | 1, 600, 000 |
| Pakistan | 1, 200 , 000 |

**From: Rwanda 2, 000,000**

**To:**

| | |
|---|---|
| Zaire | 1, 100, 000 |
| Tanzania | 600, 000 |
| Burundi and others | 300, 000 |

**From: Liberia 846, 000**

**To:**

| | |
|---|---|
| Guinea | 450, 000 |
| Cote d'loire | 360, 000 |
| Ghana | 16, 000 |
| Sierra leone | 16, 000 |
| Nigeria | 4, 000 |

**From: Somalia 510,000**

**To:**

| | |
|---|---|
| Ethiopio | 240,000 |
| Kenya | 170,000 |
| Yemen and others | 80,000 |
| Djibouti | 20, 000 |

**From: Former Yugoslavia 3,700, 000**

**To:**

| | |
|---|---|
| Bosnia | 2,700,000 |
| Serbia | 405, 000 |
| Croatia | 380, 000 |
| UN Protected areas | 122, 000 |
| Macedonia and slovenia | 49, 000 |
| Montenego | 44, 000 |

**இத்தரவுகள் தரும் உண்மை எதுவெனின் தற்கால யுத்தங்கள் மக்களுக்கு நீதியையும், பாதுகாப்பையும் தருவதிலும் பார்க்க மக்களையும், குழந்தைகளையும் பாரிய அளவில் கொல்வதிலும், சிரழிப்பதிலும் பெரும் பங்கைச் செலுத்தி வருகின்றன என்பதே.**

## இறந்தமொழியில் ஒரு பாட நூல்

**இது ஒரு சிறுவன்**
**இது ஒரு சிறுமி**

**சிறுவன் ஒரு நாய்**
**வைத்திருக்கிறான்**
**சிறுமி ஒரு பூனை**
**வைத்திருக்கிறாள்**

**நாய் என்ன நிறம்?**
**பூனை என்ன நிறம்?**

**சிறுவனுஞ் சிறுமியும்**
**ஒரு பந்துடன்**
**விளையாடுகிறார்கள்**

**பந்து எங்கே உருளுகிறது?**

**சிறுவன் எங்கே**
**புதைக்கப்பட்டிருக்கிறான்?**
**சிறுமி எங்கே**
**புதைக்கப்பட்டிருக்கிறாள்?**

**வாசித்து**
**ஒவ்வொரு மொழியிலும்**
**ஒவ்வொரு மௌனத்திலும்**
**மொழிபெயர்க்கவும்.**

**—மிரோஸ்லாவ் ஹொலுப்—**

**தமிழில் சிவசேகரம்**
**'பணிதல் மறந்தவர்' மூன்றாம்**
**உலகக் கவிதைகள்**
**தொகுப்பிலிருந்து**

**யூலை 23, 13வது ஆண்டு நினைவு, இனவாதத்தினால் கொன்றொழிக்கப்பட்டவர்களுக்குஎமது அஞ்சலிகள்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "தீ" மே 24 1994

அதிகாலை வானத்தில்
முழு நிலவு பூத்திருக்க,
முன்னிரவில்
வாண வேடிக்கைகள்
வர்ண ஜாலமாய் சிதறிட
வானரக் கூட்டமொன்று
தேடகத்திற்கு தீ மூட்டி
களிப்பெய்தியது


யார் சதி செய்தவர்
மனிதனாய் இருக்கமாட்டீர்
என் நாட்டில்
வாயை மூடச்சொன்னீர்
எழுத்தாணியை முறித்தீர்
எண்ணங்கள் சிதைத்தீர்
ஆனால் இங்குமா?

என் நாட்டில் எரிந்த
யாழ் நூலகத்திற்கு காரணம்
காடையர் கூட்டமெனில்
இங்கும் செய்தவர்
காடையரே
அங்கே இன்னோர்
இனத்தவன் செய்தான் ஆனால்
இங்கோ என்
இனத்தவனே செய்தான்

கருத்தை கருத்துகளால்
எதிர்க்க திராணியற்றவர்
கையில் 'தீ'யை ஏந்துவதால்
காண்பது என்ன?

எரிந்த தேடகத்தில்
எரிமலை.யும் கருகியது
விளைந்த நெருப்பில்
விடுதலையும் வீழ்ந்தது.

கருகிய மிச்சமாய் இருந்த
சுவடுகள் சஞ்சிகையில்
கண்ணில்பட்ட கவிதையொன்றின்
சிலவரிகளே
வெட்கம்கெட்ட வீர சாகசத்திற்கு
பதிலாகட்டும்



"எல்லா தேசங்களில் இருந்தும்
அடிமைகள் பின்னால் அடிமைகள்
எந்த ஆயுதக் கருவிகளை
இயக்கும் போது
முன்பு மனிதர்கள்
செத்துமடிந்தார்களோ,
அதே ஆயுதக்கருவிகளை இயக்க
இவர்கள் வருகிறார்கள்
ஏன் எதற்காக.....?
நீ என்றைக்கு
உன் முழுவலிமையோடு
நிமிர்ந்தேழுந்து
அவர்கள் முகத்தில்
அறைந்தாற்போல்
இந்தக் கேள்வியை கேட்கப்போகிறாய்?
"ஏன் நாங்கள் போரிட்டுக்கொண்டிருக்கிறோம்?"

எல்லாவற்றிற்கும் வரலாறு
ஓர்நாள் பதில் சொல்லும்.

—'தாயகத்' திலிருந்து—

[illegible]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறுகதை

# "மான்ஹோல்"



வ.ந.கிரிதரன்

ஜெயகாந்தனின் ரிஷிமூலத்தில் வரும் ராஜாராமனைப் போல் தாடி மீசை வளர்த்திருந்தான், கால்களில் ஒன்றினை சப்பணமிட்ட நிலையிலும் மற்றயதை உயர்த்தி மடக்கி, முழங்காலினைக் வலது கையினுல் பற்றியிருந்தான், இடது கையை பின்புறமாக நிலத்தில் ஊன்றியிருந்தான், முடி நீண்டு வளர்ந்து கிடந்தது, வாயினில் பாதித்துண்டு சிகரட் புகைந்தபடியிருந்தது, கண்களில் மட்டும் ஒருவிதமான ஒளிவீச்சு விரவிக்கிடந்தது. மான் தோலில் அமர்ந்திருக்கும் சாமியாரைப் போல மான்ஹோலின் மேல் அமர்ந்திருந்தவனின் தோற்றமிருந்தது. இவன் நடை பாதை நாயகர்களிலொருவனென்றால் நான் ஒரு நடைபாதை வியாபாரி. 'கொட் டோக் (Hot Dog)' விற்பது என் தொழில்.

வடக்கில் தொலைவில் ஒன்டாரியோ பாராளுமன்றக் கட்டடம் தெரிந்தது, எமக்குப் பின்புறமாக புகழ்பெற்ற குழந்தைகளிற்கான வைத்திய நிலையம், 'சிக்கிட்ஸ்' ஹாஸ்பிடல் அமைந்து கிடந்தது. சிறிது நேரம் சாமியார் ஒன்டாரியோ பாராளுமன்றத்தையே பார்த்தபடியிருந்தான், பிறகு சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய்" என்றேன்

"பார்த்தாயா காலத்தின் கூத்தை"....

"காலத்தின் கூத்தா....."

"காலத்தின் கூத்தில்லாமல் வேறென்ன"

சிறிது நேரம் ஆகாயத்தைப பார்த்தான், அதில் முழுமதியை ரசித்தான், நேரத்துடனேயே இருட்டத் தொடங்கிவிட்டது. இன்னமும் மாநகரத்தின் பரபரப்பு குறையவில்லை. ஆளிற்காள் அரக்கப் பரக்க நடந்து கொண்டிருந்தார்கள். இதற்கிடையில், எனக்கும் ஒரு சில கஸ்டமர்கள் வந்தார்கள். எனது வாடிக்கையா ளர்களில் ஒருவனான நைஜீரியா டாக்ஸி டிரைவர் டாக்ஸியை வீதியோரம் நிறுத்திவிட்டு வந்தான்.

"ஹாய்..... எப்படியிருக்கிறாய் 'சீவ்' (Chief)" வென்றேன்.

"பிரிட்டி குட் மான்.... நீ எப்படி" யென்றான்

"எனக்கென்ன..... நான் எப்பொழுதுமே ஓ.கே.தான்" என்றுவிட்டுச் சிரித்தான், அருகிலிருந்த சாமியும் சிரித்தான்.

இவன் உண்மையிலேயே ஒரு 'சீவ்'. இவனது சொந்த நாடான நைஜீரியாவில், இவனை நம்பி, இவனிற்குக் கீழ் மூவாயிரம் பேர்களிருக்கின்றார்கள், இவனது இனம் நைஜீரியாவிலுள்ள பல ஆதிக் குடிகளில் ஒன்று. ஒவ்வொரு முறையும் இவனது ஒப்புதலிற்காக பத்திரங்களை இங்கு அனுப்புவார்கள். இங்குள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பல்கலைக் கழகமொன்றில் பட்டம் பெற்றவன், 'வின்ரர்' இல் இங்கு டாக்ஸி ஓடுவான், 'சமர்' என்றதும் நைஜீரியாவிற்கு ஓடிவிடுவான். இவனது மக்களிற்கு இவன் இங்கு டாக்ஸி ஓடுவது தெரியாது. தெரிந்தால் இங்கிருக்க விட்டு வைக்க மாட்டார்கள் என்பான். இவனைப்போல் வேறு பல 'சீவ்'களும் டாக்ஸி ஓடுவதாக ஒருமுறை இவன் கூறியிருந்தான்.

அப்பொழுது தான் அருகிலிருந்த சாமியைப் பார்த்தான்.

"ஹாய் சீப்.... எப்படியிருக்கிறாய்..." என்றான் ஆபிரிக்க 'சீவ்', கனேடிய 'சீவ்'வைப் பார்த்துக் குசலம் விசாரிக்கின்றான். சாமியின் இனத்தவர்கள் ஒரு காலத்தில் அமெரிக்கக் கண்டத்தையே ஆண்டவர்கள். ஆண்ட பாரம்பரையின் வாரிசுகளில் ஒருவன். இன்று சிறு பான்மைக்குள் சிறுபான்மையாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சாமி பதிலிற்குச் சிரித்தான். ஆபிரிக்கச் 'சீவ்' கனேடியச் 'சீவ்' விற்கு சிகரெட் ஒன்றைத் தந்துவிட்டுச் சென்றான். "நல்லவன்" என்றுவிட்டுச் சாமி சிகரட்டை ஊதிப் புகையை விட்டான். எனக்கு அவன் காலத்தின் கூத்தைப் பற்றிக் கூறியது ஞாபகத்திற்கு வந்தது.

"ஏதோ.... காலத்தின் கூத்து" தென்றாயேயென்றேன்.

"பார்த்தாயா... இந்தியனான நீ இங்கே நடைபாதையில் வியாபாரம் செய்து கொண்டிருக்கின்றாய், இந்தியனான நான் நடைபாதையில் ஜீவித்துக் கொண்டிருக்கின்றேன். ஆபிரிக்கனான அவன் நடுரோட்டில் வாகனமோட்டி வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றான்," என்றவன் பாராளுமன்றக் கட்டடத்தைக் காட்டினான்: "அங்கிருந்து அவர்கள் சட்டங்கள் இயற்றிக் கொண்டிருக்கின்றார்கள்... காலத்தின் கூத்தில்லாமல் வேறென்ன..."

இதனைத் தொடர்ந்து ஒரு சிறுபாடலை அழகாகப் பாடினான்.

"காலம் சுயாதீனமானதோ....
காலம் சார்பானதோ...
ஆனால் நிச்சயமாகக்
காலம் பொல்லாதது"

இந்தச் சாமியின் பூர்வீகம் மர்மம் நிறைந்திருந்ததாகப் பட்டது. இவன் பாடிய பாடலின் கருத்து அவ்வளவு அறிவு பூர்வமாகவிருந்தது. பூர்வீகத்தில் பௌதீக விரிவுரையாளனாகவிருந்த எனக்கு இந்தப் பூர்வீக இந்தியன் புதிர்நிறைந்தவனாகவே பட்டான். எனக்கு கடந்த மூன்று மாதங்களாக இவனைத் தெரியும். இவனைப் பற்றி இதுவரையிலான என் அனுபவத்தின் வாயிலாக நான் அறிந்தவற்றைப் பின்வருமாறு தொகுக்கலாம்.

இவனொரு பூர்வீக இந்தியன், அடிக்கடி நடைபாதைகளில் போத்தலும்

" இந்தியனான நீ இங்கே நடைபாதையில் வியாபாரம் செய்து கொண்டிருக்கின்றாய், இந்தியனான நான் நடைபாதையில் ஜீவித்துக் கொண்டிருக்கின்றேன். ஆபிரிக்கனான அவன் நடுரோட்டில் வாகனமோட்டி வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றான்," என்றவன் பாராளுமன்றக் கட்டடத்தைக் காட்டினான்:
"அங்கிருந்து அவர்கள் சட்டங்கள் இயற்றிக் கொண்டிருக்கின்றார்கள்... காலத்தின் கூத்தில்லாமல் வேறென்ன..."

ஆட்டமுமாகக் காணப்படும் இவனது இனத்தவர்களிலிருந்து வித்தியாசமாக விருந்தான். சிகரட் தவிர இவன் மதுவைத் தொடுவதில்லை. இவனிற்குக் குடும்பம் என்று இப்பொழுது எதுவுமில்லை, முன்பு ஏதுமிருந்ததா? தெரியவில்லை. இவன் தன் பூர்வீகத்தைப் பற்றி இதுவரை ஏதும் கூறியதில்லை, ஒருமுறை அறிய முயன்ற பொழுது தட்டி மழுப்பிவிட்டான். அதன் பிறகு நானும் கேட்கவில்லை, இவனும் கூறவில்லை.

நடைபாதை வழியே போகும் மனிதர்கள் போடும் தர்மத்தில் இவனது வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கின்றது. நாள் முழுக்க சிகரட் பிடிப்பான், இவன் சிகரட்டிற்காக பணமெதுவும் செலவழிக்க மாட்டான். அருகிலுள்ள கட்டடங்கள் முன்பாக நடைபாதைகளில் காணப்படும் சிகரட் துண்டுகளைப் பொறுக்கி வந்து குடிப்பான். சாப்பாட்டைப் பொறுத்த வரையில் அருகிலுள்ள டோனட் கடையில் அடிக்கடி காப்பி வாங்கிக் குடிப்பான், சிலவேளைகளில் டோனட் வாங்கி வருவான். இரவில் நான் ஒவ்வொருநாளும் 'கொட்டோக்'கும், குடிப்பதற்கேதாவது 'யூஸ்'சும் கொடுப்பேன். இலவசமாக வாங்க மாட்டான். கையிலிருப்பதைத் தருவான். வேண்டாமென்றால் கொடுப்பதை வாங்க மாட்டான். பெரும்பாலும் அதிகமான வேளைகளில் மோனத்திலாழ்ந்திருப்பான், அல்லது என்னுடன் அளவளாவுவான். இயற்கைக் கடன்களைக் கழிப்பது, முகங்கழுவுவதெல்லாம் அருகிலுள்ள ஆஸ்பத்திரி 'வாஸ்ரூம்' களில்தான். எப்போதாவது சிலசமயங்களில் எங்கோவொரு ஹாஸ்டலிற்குச் சென்று குளித்துவிட்டு வருவான்.. இதைத் தவிர இவனது வீடு உலகமென்றால் அவன் அமர்ந்திருக்கின்ற அந்த மான்ஹோல்தான். இவனது கந்தல்களடங்கிய மூட்டையொன்றை அதற்குள் தான் வைத்திருக்கின்றான். அந்த மூட்டைக்குள் அப்படியென்ன தானிருக்கின்றதோ.....

இவனைப் பற்றி இவ்வளவு தான் இதுவரையில் அறிந்திருந்தேன். இனிமேல் தான் மேலதிகமாக ஏதாவது அறிய முயல வேண்டும்.

இன்னுமொரு இரவ. அசைந்தபடி சிறிது ஓய்ந்திருந்தது. பிஷினசும் சிறிது மந்தநிலையிலிருந்தது. சாமி எதனையோ சிந்தித்தான், பின் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய் " என்றேன்.

"உலகமெல்லாம் இந்தியர்கள் நிறைந்திருக்கிறார்கள் "என்று விட்டுச் சிரித்தான், ஏதோ தத்துவமொன்றைக் கூறிவிட்டது போன்றதொரு திருப்தி முகத்தில் படர்ந்திருந்தது.

"உண்மையில் நீயும் இந்தியனில்லை, நானும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"இந்தியனில்லை"யென்றேன்.

"நான் இந்தியனில்லையென்பது சரி, இந்திய உபகண்டவாசி யாருமே இவர்களிற்கு இந்தியன்தான், ஈஸ்ட் இண்டியன்"

"ஆனால் பலரிற்கு 'பாக்கி' "யென்றேன்.

இதைக் கேட்டதும் சாமி பலமாகச் சிரித்தான்.

"இங்கென்னவென்றால் இந்தியனைப் 'பாக்கி' யென்கிறார்கள், பாக்கிஸ்தான் காரனையும் இந்தியனென்கின்றார்கள் அங்கென்ன வென்றால் பாகிஸ்தான் காரனும் இந்தியனும் ஆளிற்கால் அடிபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் "என்றேன்.

இதற்கும் சாமி சிரித்தான். அப்பொழுது தான் சிரிப்பையும் மீறிச் சாமியின் முகத்தில் படர்ந்திருந்த சோர்வினை அவதானித்தேன்.

"என்ன உடம்பிற்"கென்றேன், "ஒன்றுமில்லை இலேசான காய்ச்சல்" என்றான். நான் எப்பொழுதுமே ஒரு அஸ்பிரின் பார்ட்டில், பிளாஸ்டர் பக்கற் வைத்திருப்பது வழக்கம்.

"ஆஸ்பிரின் வேண்டுமா" வென்றேன். "இலேசான காய்ச்சல் சரியாய் விடும்" என்றான். நானும் வற்புறுத்தவில்லை.

மறுநாள் நான் கடையை விரித்தபோது ஒன்றை அவதானித்தேன் சாமியை அவனிருப்பிடத்தில் காணவில்லை வழக்கமாக அவன் தான் வரவேற்பான். மனதிற் கென்னவோ மாதிரி உணர்ந்தேன். இந்த மூன்று மாதங்களாக இன்று தான் முதன் முறையாக சாமியின் வரவேற்பை இழந்திருந்தேன். வழக்கமாக நான் கடையை விரிப்பது பத்துமணியளவில்தான். அதற்கிடையில் சாமி தனது காலைக் கடன்கள், சாப்பாடு எல்லாவற்றையும் முடித்து விட்டுத் தனது சிம்மாசனத்தில் அமர்ந்து விட்டிருப்பான்.

அந்த ஒளிமிகுந்த கண்களின் ஞாபகம் வந்தது, அந்தப் புன்னகை நினைவில் தெரிந்தது. "சிலவேளை லேட்டாகச் சாமி எழும்பியிருப்பானோ" அப்பொழுது தான் முதன்நாளிரவு இலேசான காய்ச்சலுடன் சாமியிருந்தது ஞாபகத்தில் வந்தது. காய்ச்சல் அதிகமாகி ஆஸ்பத்திரியில் முடங்கியிருக்கின்றானோ என எண்ணினேன். சிறிது நேரத்தில் நான் வியாபாரத்தில் மூழ்கினேன். வியாபாரம் சிறிது மந்த நிலையை அடைந்தபோது இருட்டி விட்டிருந்தது. சாமியை இன்னும் காணவில்லை. என் மனதை மீண்டும் எதுவோ செய்வதை உணர்ந்தேன்.

இரவு பத்து மணியளவில் நைஜீரியா 'சீவ்' வந்தான் "எப்பிடி பிஸினஸ்" என்றான். அப்பொழுது தான் 'மான் ஹோல்' வெறுமையாயிருப்பதை அவதானித்தான்.

"சீவ் எங்கே ...."யென்றான்.

"இன்று முழுக்க அவனைக் காணவில்லை

"இங்கென்னவென்றால் இந்தியனைப் 'பாக்கி' யென்கிறார்கள், பாக்கிஸ்தான் காரனையும் இந்தியனென்கின்றார்கள் அங்கென்னவென்றால் பாகிஸ்தான் காரனும் இந்தியனும் ஆளிற்கால் அடிபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் " என்றேன்.

கடையை விரித்தபோது ஒன்றை அவதானித்தேன் சாமியை அவனிருப்பிடத்தில் காணவில்லை வழக்கமாக அவன் தான் வரவேற்பான். மனதிற் கென்னவோ மாதிரி உணர்ந்தேன்.

எங்கு போனானோ தெரியவில்லை...."

"நேற்றிரவு ஏதாவது சொன்னானா...."

"சிறிது காய்சலுடன் தானிருந்தான், அஸ்பிரினும் வேண்ட மறுத்து விட்டான்......"

"அவன் வேறெங்காவது தங்குவதுண்டா...."

"எனக்குத் தெரிந்து அவன் இந்த 'மான்ஹோல்' மூடியின் மேல் தான் படுப்பது வழக்கம் அவனுடைய உடமைகளை கூட இந்த மான் ஹோலிற்குள் தான் வைத்திருப்பான்.

"அப்படியா ....." ஆபிரிக்க 'சீப்' சிறிது நேரம் சிந்தனையில் மூழ்கி நினைவிற்கு வந்தான்.

"எனக்கொன்று தோன்றுகின்ற "தென்றான்.

"என்ன"

"ஒருவேளை அவன் தன் இருப்பிடத்தை மாற்றி விட்டானோ.... எதற்கும் மான் ஹோலைத் திறந்து பார்த்தால் தெரிகின்றது. அதற்குள் அவனது பொக்கிஷங்களில்லையென்றால் அவன் தன்னிருப்பிடத்தை மாற்றிவிட்டானென்று அர்த்தம்.

இவ்விதம் கூறிவிட்டு அவன் மான்ஹோல் மூடியைத் திறந்தான். திறந்தவன் " என் கடவுளே..." என்று கத்தினான். "இங்கே வந்து பாரென்றழைத்தான். எட்டிப் பார்த்தேன். உள்ளே தனது மூட்டை முடிச்சுகளை மார்போடணைத்தபடி சாமி குடங்கியிருந்தான். அடக்கடவுளே... இன்று முழுக்க இதற்குள்ளேயா கிடந்திருக்கின்றான்....

"ஏ. சீப் .....சீப்.... நைஜீரிய 'சீப்' சத்தமிட்டு அழைத்தான். அசைவொன்றையும் காணவில்லை. இதற்கிடையில் சென்று கொண்டிருந்தவர்கள் சுற்றிவரக் கூடினர். நைஜீரிய 'சீப்' மான்ஹோலினுள் குதித்தான் தொட்டுப் பார்த்தான்.

"போய்விட்டான்" என்றான்.

தொலைவில் இருளில் 'ரொமான்ஸ்க் கட்டடக்கலைப் பாணியிலமைந்திருந்த ஒண்டாரியோ பாராளுமன்றம் அழகாகப் பிரகாசமாகத் தெரிந்தது. "அங்கிருந்து அவர்கள் சட்டங்கள் இயற்றிக் கொண்டிருக்கிறார்கள்" என்று சாமி கூறியது நினைவில் தெறித்தது.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாய்க்கு ஏன் போர்த்தேங்காய்?




**ஜோர்ஜ் இ குருஷேவ்**

பத்திரிகை சுதந்திரம்: உரிமையும் துஷ்பிரயோகமும்

பத்திரிகைச் சுதந்திரம் என்பது நம்மவர்களால் இன்றுவரை புரிந்து கொள்ளப்படாத ஒரு புதிய கருதுகோள் என்றே எண்ணத் தோன்றுகிறது. சங்க காலம் முதல் சூரியக் கதிர் வரை 'ஊரோடு ஒத்து ஓடுவதும்' 'ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதனைக் கடித்தும்' 'நமக்கேன் வீண்வம்பு' என்று ஒதுங்கியிருப்பதும் எங்கள் பாரம்பரியமாக இருக்கும்போது பத்திரிகைச் சுதந்திரம் நமக்கெல்லாம் ஒரு 'நாய்க்கு ஏன் போர்த் தேங்காய்?' கதை தான்.

'சனசமூக நிலைய நிர்வாகிகள் தெரிவு' புகழ் ஈழநாடு, 'வெளிநாடு பயணமானுர்' புகழ் வீரகேசரி, 'கம்பி நீட்டினுர்' புகழ் மித்திரன் என்று எங்களை ஆக்கிரமித்து எங்கள் சிந்தனைப் போக்கை நெறிப்படுத்திய பத்திரிகைகள் எல்லாம் வெறும் தூதுவராய் செய்திகளைச் சுமந்து வந்தவை தாம். 'தூதனைக் கொல்லல் பாவம்' என்ற மனுநீதி சிந்தனையை மனதில் கொண்டு நம்மவர்கள் தம்மை ஒன்றும் செய்ய மாட்டார்கள் என்ற நினைப்பு அவற்றுக்கு. அதிகாரத்திலிருப்போரை பகைத்துக் கொள்வதைத் தவிர்த்துக் கொண்டவையும் வாலில் தொங்கி மற்றவரைத் திட்டித் தீர்த்தவையுமாக அவற்றில் சில ரகங்கள். தினபதி, தினகரன் இந்த ரகங்களில் அடக்கம்.

பத்திரிகையின் நோக்கம் செய்தி தருவது தான், சமூக உணர்வு, சிந்தனை எழுச்சி என்பதெல்லாம் எமக்கு அப்பாற்பட்டவை என்ற சிந்தனையைக் கொண்ட பத்திரிகைகள் இவை. இவற்றின் சமூகப் பொறுப்புணர்வு எல்லாம் 'மந்திகை வைத்தியசாலையில் மனநோயாளர் பெரும் அவதி. அதிகாரிகள் கவனிப்பார்களா?' என்று 'நமது நிருபரின் அதிரடி றிப்போட்டுடன்' முடிந்து விடும்.

அரசியல் தலைமைகளின் போக்குகள் எமது சமூக வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றங்களை கேள்விக்குள்ளாக்கும் போக்கு இந்த பத்திரிகைகளுக்கு சமூகத்தின் பார்வையிலிருந்து இருந்ததில்லை. வேண்டுமானுல் தாங்கள் ஆதரிக்கின்ற குழுநிலைப் பார்வை மூலமாக கேள்விக்குள்ளாக்கியிருக்கக் கூடும். அல்லது பட்டும் படாமலும் எவரையும் புண்படுத்தாமல் எழுதித் தப்பித்துக் கொண்டிக்கக் கூடும்.

பின்னுல், பிரிவினைவாதம் தலைதூக்க தணிக்கை மூலமாய் பிரச்சனையை 'ஈரச்சாக்கு போட்டு' அமுக்க நினைத்த அரசின் கேலிக் கூத்துக்கள் மறுபுறம்.. நம் பத்திரிகைகள் ஏதோ கடும் விமர்சனப் போக்கை கைக் கொண்டவையும் அல்ல.. நம் பத்திரிகைகள் 'வீர (கருத்துச்) சுதந்திரம் வேண்டி நிற்கும் முன்பாகவே' தணிக்கைகள் நடந்தன. பத்திரிகையியலுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சம்பந்தமில்லாத அரச அதிகாரிகள் தணிக்கை செய்யப் புகுந்ததால்.. தலையங்கச் செய்தியில்.. இடையிடையே தணிக்கை என்று குறுக்காக பெரிய எழுத்தில் எழுதும் கோமாளிக் கூத்து நடந்தது.

சுதந்திரனும் தீப்பொறியும் 'சுதந்திரத் தீயினுல்' நாசம் செய்தாலும் அவை ஒன்றும் சுதந்திரப் பத்திரிகைகள் அல்ல. கருத்துச் சுதந்திரம் வேண்டி நின்ற பத்திரிகைகளும் அல்ல. அரசியல் கட்சி ஒன்றின் கருத்துக்களைப் பிரசாரம் செய்தல் வேண்டி அதன் ஆதரவாளர்களுக்கு தீனி போட்ட பத்திரிகைகள் அவை. அரசின் தணிக்கைக்கு எதிரான பிரசாரமாக இருந்தாலும் அவற்றுக்கு அரசியல் அமைப்பு ஒன்றின் பின்னணி ஆதரவு இருந்தது. கருத்துச் சுதந்திரம் என்ற சொல்லின் சாரத்தையாவது அவை புரிந்திருந்தனவா என்பது சந்தேகம். தங்கள் கருத்துக்கு முரணானவர்களை அவை திட்டித் துரோகிகள் என்று முத்திரை குத்தியதிலிருந்தே அவை கருத்துச் சுதந்திரம் பற்றி என்ன எண்ணக் கருவைக் கொண்டிருந்தன என்பது புலனுகும்.

அப்புறமாய் 'வீரவேங்கைகள்' 'முரசொலிக்க' கருத்துச் சுதந்திரம் அம்போ! முன்னுள் தியாகிகள் இன்னுள் துரோகிகளாக... பத்திரிகையியல் என்பது வால் பிடித்தலாயிற்று. ஆக மொத்தத்தில் அதிகாரத்திலிருப்போரை சார்ந்து அவர்களின் அரசியல் கொள்கையை தங்கள் நடுநிலைக் கொள்கையாக முத்திரை குத்தி பிழைப்பு நடத்துவது மட்டுமே எங்களுக்கு பத்திரிகை என்ருயிற்று. மக்கள் நலன் என்பதை விட, அதிகாரத்திலிருப்போரை தாஜா பண்ணுவது அல்லது அவர்களை கோபத்துக்குள்ளாக்காத விதத்தில் எழுதுவது என்ற நிலை. 'நமக்கேன் வீண்வம்பு, ஊரோடு ஒத்து ஓடுவோம்' என்ற ஒட்டுமொத்தமான நொண்டிச்சாக்குடன் வாழுகின்ற இந்த 'நாய்க்கேன் போர்த்தேங்காய்?'

'அதிகாரம் ஊழல் செய்யும்' (power corrupts!) என்ருல் அதை எதிர்க்கின்ற ஒரு மக்களின் குரலாகவே பத்திரிகை இருக்க வேண்டும். இதனுல் தான் பத்திரிகைகளுக்கு தடைகள் விதிக்கப்படும் போதும் பத்திரிகையாளர்கள் துன்புறுத்தப்படும் போதும் எதிர்க்கட்சிகள் வரிந்து கட்டிக் கொண்டு களத்தில் இறங்குகின்றன. மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்று குரல் கொடுக்கும் அதே எதிர்க்கட்சிகள் ஒருவாருக ஆட்சிக்கு வந்ததும் 'அதிகாரம் ஊழல் செய்யும்'. மீண்டும் பத்திரிகைகளுக்கு தடை, பத்திரிகையாளருக்கு துன்புறுத்தல். முன்பு குரல் கொடுத்த எதிர்க்கட்சியினர் தங்கள் ஆட்சிக்கு எதிராக பத்திரிகைகள் எழுதுவதைக் கண்டு குரலை நசுக்க முனைவர்.

**சுதந்திரனும் தீப்பொறியும் 'சுதந்திரத் தீயினுல்' நாசம் செய்தாலும் அவை ஒன்றும் சுதந்திரப் பத்திரிகைகள் அல்ல. கருத்துச் சுதந்திரம் வேண்டி நின்ற பத்திரிகைகளும் அல்ல. அரசியல் கட்சி ஒன்றின் கருத்துக்களைப் பிரசாரம் செய்தல் வேண்டி அதன் ஆதரவாளர்களுக்கு தீனி போட்ட பத்திரிகைகள் அவை.**

இப்போது முன்னைய ஆட்சியாளர் முன்பு தாம் பத்திரிகைகளுக்கு இழைத்த அநீதியை மறந்து எதிர்க்கட்சியில் இருந்து பத்திரிகைச் சுதந்திரத்துக்காக குரல் கொடுப்பர். எல்லாமே 'நடந்தவைகள் நடந்தவைகளாகவே இருக்கட்டும், நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்' என்ற பெருந்தன்மை தான். இது வெறும் சங்கிலி வட்டம் தான். ஆக மொத்தத்தில் எதிர்கட்சியும் ஆட்சியாளரும் இடம் மாறுவர். பத்திரிகைகளும் பத்திரிகையாளரும் அதே இடத்தில் தடைகளுக்கும் துன்பங்களுக்கும் மத்தியில்.. ஆக மொத்தத்தில் அதிகாரம் ஊழல் செய்யும், சுதந்திரப் பத்திரிகை எப்போதும் அதைத் தட்டிக் கேட்கும்.

இதில் பிழைக்கத் தெரிந்த பத்திரிகையாளர்கள் எப்போதுமே 'ஆளும் கட்சிக்கு சார்பாக' எழுதிக் கொண்டிருப்பார்கள். இவர்கள் எல்லாம் முன்பு எங்களைப் பற்றி எப்படி எழுதினுர்கள் என்றெல்லாம் ஆட்சியாளர்களும் நினைப்பதில்லை. இவர்களைப் பற்றி முன்பெல்லாம் இப்படி எழுதினேமே, இப்போது எந்த முகத்துடன் ஆதரித்து எழுதுவது என்றெல்லாம் பி.தெ. பத்திரிகையாளர்களும் நினைப்பதில்லை. 'உனக்கும் எனக்கும் தான் பொருத்தம், இதில் எத்தனை கண்களுக்கு வருத்தம், நமக்கு இடையில் உள்ள நெருக்கம்.. இனி யாருக்கு இங்கே கிடைக்கும்?.. ஆகா.. ஒனக்கும்.. எனக்கும்...!

இந்த பிழைக்கத் தெரியாத பத்திரிகையாளர்கள் தான் நடுநிலை, மக்கள் நலன் என்றெல்லாம் எழுதிக் கொண்டு உதை வாங்குவது. ஆனுல் அதற்காக உதை வாங்குபவர்கள் எல்லாம் நடுநிலையான, மக்கள் நலன் விரும்பும் பத்திரிகையாளர்கள் என்று மட்டும் நினைக்காதீர்கள். அது இன்னெரு கதை.

அடக்குமுறை அரசுகள் தான் பத்திரிகைத் துறை மீதான 'தங்கள் நீதியின் கரங்களை' தங்கள் இறைமைக்கு அப்பாற்பட்ட நாடுகளுக்கும் நீட்டுவன. இதில் எங்கள் விடுதலை வீரர்கள் 'உலகுக்கே வழிகாட்டுவதில்' என்ன ஆச்சரியம்? பிறகென்ன.. 'நமக்கேன் வீண்வம்பு, ஊரோடு ஒத்து ஓடுவோம்' என்று இங்கேயும் வால் பிடிக்கின்ற 'நாய்க்கேன் போர்த்தேங்காய்?'. ஒத்து ஓடுகின்றதால், ஆதரித்து எழுதுவதால் மட்டும் இவை கல்லெறிக்கு தப்பித்துக் கொள்வதில்லை. வழமை போல பிழைக்கத் தெரிந்தவர்கள் (அதென்ன 'வர்கள்'? ஒருவர் தானே தகவல் தருகிருர் என்றீர்களாயின் அதற்கு நான் என்ன செய்யட்டும்?) அரசியல் பேசாமல் மானியம் பெற்றுக் கொண்டிருக்கிருர்கள். இது பத்திரிகை சுதந்திரம் அல்ல, பத்திரிகை தந்திரம்!

ஆதரித்து எழுதுபவர்களும் காலத்துக்கு காலம் தாக்குதல்களுக்கும் எரிப்புகளுக்கும் தடைகளுக்கும் உள்ளாகிக் கொண்டு தான் இருக்கிருர்கள். புலி வால் பிடித்த கதை தான். விட்டால் புலி குதறும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடாவிட்டால் வாழ்நாள் பூராவும் தொங்க வேண்டியது. புலி என்ன பூனையா? முதுகில் தடவி சரசம் பேசவும் தேவைப்படாத போது விரட்டி விடவும்? காட்டில் இருக்க வேண்டியது காட்டில், வீட்டில் இருக்க வேண்டியது வீட்டில். காட்டுப் பிராணியை எதற்கையாக வீட்டில் வளர்க்கிறீர்?

புலம் பெயர்ந்த நாடுகளில் ம(ந)லிந்து போன பத்திரிகைத் துறை பத்திரிகைச் சுதந்திரம் பற்றி என்ன கருத்தைக் கொண்டிருக்கிறது? புலிகளை ஆதரித்து எழுதுகின்ற பத்திரிகையாளரைக் கேட்டாலும் தனது இஷ்டமில்லாத தெய்வத்தின் படத்தின் முன்னால் கற்பூரம் அணைத்து சத்தியம் செய்து, தன்னுடைய 'கருத்துச் சுதந்திரம்' என்று சண்டைக்கு வருவார். மக்களின் நலன்களுக்காகவே எழுதுகிறோம் என்பார். ஆனால் அடிப்படையில் நோக்கம் பிழைப்பு மட்டுமே. புலிகளை ஆதரிப்பது அவருடைய சுதந்திரம் மறுப்பதற்கில்லை. புலிகளுக்கு ஆதரவாக செய்தி வெளியிடுவதில் தப்பும் இல்லை. அப்படியென்றால் பிறகென்ன? அதுதான் இல்லை. செய்தியை வெளிக் கொணர்வதும் கருத்தை முன்வைப்பதும் சுதந்திரங்கள், உரிமைகள். ஆனால் செய்தி உண்மையாகவும் கருத்து பொதுநீதிக்கு நியாயமானதாகவும் இருக்க வேண்டும்.

புலிகள் நியாயம் சொல்வதற்கு முன்னால் முண்டியடித்துக் கொண்டு முட்டாள்தனமான, கேலிக்கிடமான நியாயங்களை வெளியிடுகின்ற, தலையாடாமல் வால் ஆடும் ரகங்கள் ஒருபுறம். உதாரணத்திற்கு மணலாற்றுத் தாக்குதலில் இறந்த புலிகள் உண்மையில் மட்டக்களப்பில் கொல்லப்பட்ட தமிழ் மக்கள் என்று ஒரு பத்திரிகை தகவல் வெளியிட்டது. எந்த கொலைக்கும் புலிகள் மீது பழி விழுந்தால் புலிகளுக்கு முன்பாகவே வியாக்கியானங்கள் கொடுத்து மறுப்பவை இவை. இதில் முட்டாள் தனம் தொடக்கம் (தங்களை மட்டும்) புத்திசாலிகளாக நினைக்கும் தனம் வரை இருக்கும்.

இதன் மறுபுறம் தான் மோசமானது. செய்தியை இருட்டடிப்பு செய்வது. இது முக்கியமானது. நடுநிலை என்ற பெயர் போட்டுக் கொண்டு அரச படைகளின் அநீதிகளை பூதக்கண்ணாடி வைத்து பெருப்பிக்கும் அதேவேளை புலிகளின் அடிப்படை மனித உரிமை மீறல்கள், அராஜகங்களை மூடி மறைப்பது. மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களின் அறிக்கை பல்வேறு நடவடிக்கைகளை வெளிக் கொணர்ந்தது. அந்த அமைப்பை பொய்யான அமைப்பு என்று முத்திரை குத்துவதில் சில பத்திரிகைகள் மிகவும் அக்கறையாயுள்ளன. ஆனால் அந்த அமைப்பு கூறும் விடயங்களை நேரடியாக மறுப்பதில்லை.

ஆக மொத்தத்தில் கருத்தை
வெளியிடுவதற்கு சுதந்திரம் தேவை
என்று இவர்களிடம் போய் சொன்னால்
இவர்களுக்கு எப்படிப் புரியும்?
வியாபாரம் மட்டுமே குறி
என்பவர்களிடம் போய் 'சுதந்திரம்'
பற்றி பேசினால்..?
நக்குகிற நாய்க்கு செக்கென்ன?
சிவலிங்கமென்ன?

இந்த பத்திரிகைகள் எல்லாம் புலிகளை ஆதரிப்பதற்கும் இவ்வாறு இருட்டடிப்பு, நொண்டிச்சாக்கு வியாக்கியானங்கள் செய்வதற்கு மக்கள் நலனோ, விடுதலை உணர்வோ காரணமில்லை. மாறாக வியாபார நோக்கே காரணம். வியாபார நோக்கம் தான் காரணம் என்றால், பெரும்பாலான மக்கள் புலிகளை ஆதரிக்கிறார்கள், அவர்களுக்கு விற்கத் தானே இவர்கள் இப்படி எழுதுகிறார்கள் என்று வாதிடக் கூடும்.

அதுவல்ல காரணம். களத்தில் நின்று 'போராடுவதற்கு' புலிகளை எதிர்க்கக் கூடாது என்பது அவசியமானது. புலிகளின் கோபத்துக்கு ஆளாகி பத்திரிகைத் தடை, மிரட்டல், தாக்குதல் என்றெல்லாம் போகாமல் வழி சமைப்பதற்கு அந்த நிலைப்பாடு முதன்மையானது. புலிகளைத் தாஜா பண்ணினால் ஒரு புறத்தில் புலி ஆதரவாளர்களை வசப்படுத்தலாம். மற்றது எம்மில் பெரும்பாலோர் பிரச்சனைகளை தர்க்கரீதியான கண்ணோட்டத்தில் அணுகுவதில்லை. உணர்வுபூர்வமாக அணுகுவது பெரும் காரணம். அங்கே யுத்தம் நடைபெறும் போது இங்கே பத்திரிகைகளின் விற்பனை அதிகரிக்கிறது. என்ன நடக்கிறது என்ற ஆர்வம் அப்போது தான் அதிகரிக்கிறது. இந்த வாசகர்கள் மற்ற நாட்களில் என்ன செய்கிறார்கள்? தங்கள் அலுவலைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். யுத்தம் தவிர்ந்த சமாதான விடயங்களில் ஆர்வம் குறைகிறது. இதை சந்தர்ப்பமாக வைத்து பத்திரிகைகளும் ஆளுக்காள் 'யுத்த முனை நிருபர்களின் நேரடி றிப்போட்டுகளுடன்' வெளியாகின்றன.

இந்த 'மகாசனங்களின்' அசமந்தப் போக்கு பத்திரிகைகள் தவறான செய்திகளை மூளைக்குள் புகுத்த வசதியாகி விடுகிறது. பத்திரிகைகளுடன் ரேடியோக்களும் இந்த நடவடிக்கைகளில் கூட்டுச் சேர்ந்துள்ளன. இராணுவ நடவடிக்கைகளால் பட்ட அவலம் புலிகள் வெல்கிறார்கள் என்ற செய்தியை மகிழ்வுடன் நம்பச் செய்கிறது. எனவே பொய்யான செய்தியை வெளியிடுபவர்களுக்கு இது மிகவும் வசதியாகி விடுகிறது.

ஆக மொத்தத்தில் கருத்தை வெளியிடுவதற்கு சுதந்திரம் தேவை என்று இவர்களிடம் போய் சொன்னால் இவர்களுக்கு எப்படிப் புரியும்? வியாபாரம் மட்டுமே குறி என்பவர்களிடம் போய் 'சுதந்திரம்' பற்றி பேசினால்..? நக்குகிற நாய்க்கு செக்கென்ன? சிவலிங்கமென்ன?
இவர்களைப் பொறுத்தவரை பத்திரிகை வெளியிட சுதந்திரம் தேவையில்லை. தந்திரம் தான் தேவை.

**நாய்க்கு ஏன் போர்த் தேங்காய்?**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# மெலிந்த நாணல்

நம்பினோம்
மெலிந்த நாணலாய்
வசந்தங்களை நம்பினோம்.

அது கடந்த காலம்
வந்தது போல் வந்து
காணாமல் போனது



சிறு பூச்சியாய்
சுவர்க்கரையில்
புன்னகையுடன்
கடந்து சென்றோம்

அது கடந்த காலம்
வந்தது போல் வந்து
காணாமல்ப் போனது

எழுதி வைத்து வாழ்கின்ற
இந்த வாழ்க்கையை
அலட்சியம் செய்து
வேர்வரை சென்றடையும்
நீர்ப்பாத்திகளுக்கு
வழியமைப்போம் இறுதிவரை

நாம் விரும்பியதை வாழ்ந்து
விரும்பிய போது மடிய
எம் ஒவ்வருக்கும்
ஓர் எதிர்காலம் வேண்டும்

பாமதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எதைத்தான் கற்றுக்கொண்டோம்

எவ்வாறு பெரும் நகரங்களை உருவாக்க நாம்
கற்றுக்கொணடோமோ!
அவ்வாறே அவற்றை அழிக்கவும் கற்றுக்கொண்டோம்
எவ்வாறு கடும் வியாதிகளைக் குணமாக்கும் வழிகளைக்
கற்றுக்கொணடோமோ!
அவ்வாறே நோயைக் குணப்படுத்த மறுக்கவும்
கற்றுக்கொணடோம்
எவ்வாறு மக்களுக்கு தகவல்களைத் தரும் கலைகளைக்
கற்றுக்கொண்டோமோ!
அவ்வாறே அதன் ஆற்றலை எமக்கே சாதகமாக்கப்
பயன்படுத்தவும் கற்றுக்கொண்டோம்
எவ்வாறு செலவுமிக்க பெரும் கொலைச்சாதனங்களைக்
செய்யக் கற்றுக்கொண்டோமோ!
அவ்வாறே கொலையை **யுத்தம்** என்ற சொல்லினுடு
நியாயப்படுத்தவும் கற்றுக்கொண்டோம்
நாம் மாசுபடுத்திய சூழலை மீண்டும் சுத்தமாக்க முடியும்
என கற்றுக்கொண்ட அதேவேளை
அதனை முற்றாக அழிக்கும் ஆயுதங்களை உருவாக்க
பணத்தைச் செலவு செய்கின்றோம்
எவ்வாறு தீங்கு தரும் இரசாயனக் கழிவுகளைத் அகற்றக்
கற்றுக்கொணடோமோ!
அவ்வாறே அக் கழிவுகளை நாம் குடிக்கும் நீரில் (ஏரிகள்)
கொட்டுவது செலவற்றது
எனவும் கற்றுக்கொணடோம்
மரங்களும், சுத்தமான காற்றும் எவ்வாறு எமது
வாழ்வின் அடிப்படையானது எனக்
கற்றுக்கொண்டோமோ!
அவ்வாறே மழைதரும் காடுகளையும் அழிக்கவும்
கற்றுக்கொண்டோம்
நாம் வாழும் இந்தப் பூமியை அழித்தால் எவ்வாறு
சீவிக்கலாம் என உங்களால் பதில் சொல்ல முடியுமா?
எல்லா மனிதரும் சமம் எனக் கற்றுக் கொண்டோம்
அதேவேளை இன, சமய, நிற அடிப்படையில் மனிதரை
ஒடுக்கவும் கற்றுக் கொண்டோம்
செல்வம் மகிழ்சியின் அடிப்படையில்லை எனக் கற்றுக்
கொண்ட நாம்
நாணயங்களுக்காகவும் நோட்டுக்களுக்காகவும்
மற்றவரின் தொண்டையை அறுக்கவும் கற்றுக்
கொண்டோம்
எமது குழந்தைகளு அன்பும் ஆதரவும் தேவை எனக்
கற்றுக் கொண்ட நாம்!
அவர்களை எமது சொற்களாலும், கைளாலும் தீண்டவும்
கற்றுக் கொண்டோம்
நன்மையையும் நியாயத்தையும் முன்னெடுப்போர்
மாற்றத்தை உருவாக்க ஆற்றலுல்லவர்கள்
எனக் கற்றுக்கொண்ட நாம்
அவர்களை எமது சமூக அந்தஸ்துக்காகக் கொல்லவும்
கற்றுக் கொண்டோம்
தவறுகளில் இருந்து கற்றுக்கொள்ளலாம் எனத் தெரிந்து
கொண்ட நாம்
அத் தவறுகளை மீண்டும் மீண்டும் செய்தோம்
அதிலிருந்து மேலும் பாடங்களைக் நன்கே
கற்றுக்கொண்டோம்.

**இக் கவிதையை கிறீன் பீஸ் இயக்கத்திற்காக பிரச்சாரம் செய்த எட்டோபிக்கோவைச் சார்ந்த 'ஜோர்ஜியா எக்கோநோமைடஸ்' தனது 17வது வயதில் எழுதினார். சமூக நீதிக்காகவும், சூழல் பாதுகாப்பிற்காகவும் போராடிய இவர் தனது 18 வது வயதில் வைரல் மையோகாடைடஸ் எனும் அபூர்வ இதய நோயால் பீடிக்கப்பட்டு 1996 ஜனவரி காலமானார். இக் கவிதை அவரது தாய் தந்தையினரது அனுமதியுடன் பிரசுரமாகிறது.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# digi Graphic & Studios

Graphic Designing
Photo Manupulation
Digital Imaging
Digital Art
Electronic Publishing
Website Designing
Multi - Media Production

உங்கள் வடிவமைப்பு தேவைகளுக்கு நிபுணத்துவ தீர்வு

Professional Design Services For Your Needs

Karuna (416) 429 8586
Jaya (416) 422 2783



**வீடு வாங்க விற்க!**

**இலகுவாக அடமானம் பெற**

**இலவச ஆலோசனைகளுக்கு!**

**அழையுங்கள்**

**த. சிவதாசன்**

Tam. Sivathasan

ROYAL LePAGE, R.C SERVICES LTD, 4002 SHEPPERD AVE EAST
SCARBOROUGH, ONT. Tel: (416) 293 1992

ஸ்காபுரோ
பல் வைத்திய நிலையம்

சகல பல் வைத்திய தேவைகளுக்கும்

டாக்டர். ஆதி கணபதி சோமசுந்தரம்
Dr. Athi K. Somasundaram

Tel: (416) 750 9969

Scarborough Dental Office

HOGAN
Chev Olds Limited
5000 Sheppard Ave East
Scarborough, Ont

புதிய, பழைய வாகனங்கள்
உத்தரவாதம்
குறைந்த வட்டி வீதம்
நம்பிக்கையான பராமரிப்பு சேவை

FOR GREAT SAVINGS AND PERSONAL SATISFACTION

ரட்ணம் கணேஷ் Ratnam Ganesh
Tel: (416) 291 5054
Fax: (416) 291 5597
Pager: (416) 374 2881


PMJ PRINTERS (416) 757-0406